# தன்னார்வச் செயல்பாடும்
# காந்திய அணுகுமுறையும்

இளைய பாரத நூலகம்

# தன்னார்வச் செயல்பாடும் காந்திய அணுகுமுறையும்

(இந்தியாவின் மூன்று தன்னார்வ இயக்கங்கள்
பற்றிய ஆய்வு)

டி. கே. ஓசா

படங்கள்
சந்தான ராஜ்

ஆங்கிலத்திலிருந்து தமிழில்
டாக்டர். எம். எஸ். பிரபாகரன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா.

இநதப புததகம, சுறறுச சூழல தோழமை கொணட மறுசுழறசிக காகிதததில அசசிடபபட நுளளது

ISBN 81-237-1651-6

முதற்பதிப்பு: 1996 (சக. 1917)
© டி.கே. ஓசா, 1991
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
Voluntary Action And Gandhian Approach (Tamil)
ரூ. 22.00
வெளியீடு : இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா,
ஏ-5, கிரீன்பார்க், புதுதில்லி-110 016

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | vii |
| 1 | மகாத்மா காந்தி — ஒரு முன்னோடி | 1 |
| 2 | 'சிப்கோ' — இமயமலைப் பகுதியில் போராட்டம் | 18 |
| 3 | ஆனந்தவனமும் பாபா ஆம்தேயும் | 40 |
| 4 | 'சேவா' — பெண்களின் மேன்மைக்கான போராட்டம் | 58 |
| 5 | முடிவுரை | 76 |

# முன்னுரை

இந்நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் நான் அலைந்து திரிந்தபோது பெற்ற அனுபவங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மூன்றினைப் பற்றி 1987-88 - இல் மேற்கொண்ட ஆய்வு ஆகியவற்றின் விளைவே இந் நூல்.

சிப்கோ இயக்கம் என்னை இமயமலைப் பகுதிகளுக்கு இட்டுச்சென்றது. அப்பகுதிகளுக்கு நான் ஆண்டுதோறும் போகிறேன்; இப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுப் போனேன். பாபா ஆம்தேயின் இயக்கம் என்னை அவர்பால் ஈர்த்தது. அதனால் மிகச்சிறந்த சில காடுகளைக்காணவும் வாய்ப்புப் பெற்றேன். கொடுமையான கோடைக்காலத்தில், கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை குஜராத்தில் சேவா சங்கத்தின் உதவியால் சென்று கண்டேன். நான் நேரில் கண்டதையும் அதனால் அறிந்து கொண்டதையும் இந்நூலில் எழுதியுள்ளேன். எனது இந்த அனுபவங்களை மிகவும் மதிக்கிறேன். ஏனெனில் இவ்வனுபவங்கள்தான் என்னை ஒரு அரசு அதிகாரியின் வழக்கமான அலுவலக வாழ்க்கையிலிருந்து வெளியே இட்டுச் சென்றன.

இந்நூல் இந்தியாவின் இளைய சமுதாயத்தினருக்காகக் குறிப்பாக எழுதப்பட்டுள்ளது. ஏனெனில், மனிதனுக்கும் இயற்கைக்கும் எதிரான செயல்களை முறியடிக்கும் நோக்கில் எழும் இவ்வாறான தன்னார்வ செயல்களுக்கு இவ் இளைய சமுதாயத்தினரின் வீறுகொண்டெழும் உணர்வும் இலட்சியப் பிடிப்புமே எதிர்கால நம்பிக்கையின் ஊற்றுக்கண்கள். ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ள போதிலும் கலைச் சொற்களும் கடினமான சொற்களும் தவிர்க்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மதுரைக்கருகிலுள்ள மத்திய பல்கலைக் கழகமான காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆய்வை முறையாக மேற்கொள்ள உதவி பெற்றேன். இப்பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த திரு. தேவேந்திர குமார் அவர்களும், கிராம வளர்ச்சிப் புலத்தைச் சேர்ந்த முனைவர் ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும், ஆய்வுக்குத் தேவையான ஆய்வு நெறி முறைகளைப் பயன்படுத்துவதில் உதவி புரிந்து வழிகாட்டினர். அவர்களுக்கும் காந்தி கிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. பத்மநாபன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

திரு. சுந்தர்லால் பஹுகுணாவும், திரு. தூம் சிங் நேகியும் எனக்குப் பெரிதும் உதவினர். திரு. முரளிலால், திரு. அனுசுயா

பிரசாத், திருசக்ரதார் திவாரி ஆகிய இதர சிப்கோ இயக்கச் செயல்வீரர்கள் இமயமலைப் பகுதி மாவட்டங்களில் என்னுடன் பயணித்தனர். பாபா ஆம்தேயும் அவரது குடும்பத்தினரும் என்னைப்பாசத்துடன் உபசரித்த தன்மை நான் என்றுமே மறக்க முடியாத அனுபவமாகும். திருமதி இலா பென் பட், அவரது அர்ப்பணிப்பு மனப்பான்மையுள்ள சகாக்களான திருமதி ரென்னா ஜாப்வாலா, திருமதி லலிதா கிருஷ்ணசாமி, திருமதி உஷா ஜுமாணி, திருமதி அனிலா தோலாசியா உள்ளிட்ட பலர் எனக்குப் பேருதவி புரிந்தனர். தில்லியிலுள்ள 'காந்தி அமைதி நிறுவனத்தைச்' சேர்ந்த திரு அனுபம் மிஸ்ரா, இமாலய சேவா சங்கத்தின் திரு கிருஷ்ணமூர்த்தி குப்தா, புகழ் பெற்ற தாவரவியல் அறிஞரான திரு எம். கிருஷ்ணன், குஜராத் வித்யாபீடத்தின் பேராசிரியர் தேவவ்ரத்பதக் ஆகியோர் அன்போடு உதவினர்.

சென்னை, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரிப் பேராசிரியை கே.ஜி.ரமா அவர்கள் இந்த நூல் உருவாவதற்கு பேருதவி புரிந்தார். என் நண்பரும் கலைஞருமான திரு சந்தான ராஜ் அவர்கள், தனது திறமைகளைக் கொட்டி இந்நூலை உயிரோட்டமுள்ள சிறந்ததொன்றாக ஆக்கியுள்ளார்.

தங்கள் இலட்சியங்களுக்கும், அவாக்களுக்கும் செயல்வடிவம் கொடுக்கும் வண்ணம், தன்னார்வச் செயல்களில் ஈடுபடுமாறு சிலபல இளைய சமுதாயத்தினரை இந்நூல் ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன்.

காந்தி கிராமம்,
ஏப்ரல், 1991

— டி. கே. ஓசா

*"தன்னாட்சி என்பது அரசாங்கத்தின் கட்டுதிட்டங்களிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்ளும் ஒரு தொடர் முயற்சியாகும்; அது அந்நிய அரசாங்கமானாலும் சரி, அல்லது நமது சொந்த அரசாங்கமானாலும சரி. தன்னாட்சி பெற்ற பின்னரும், இந்திய மக்கள் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒழுங்குபடுத்தி நடத்திச் செல்ல அரசாங்கத்தை எதிர்நோக்கியிருந்தால், அந்த தன்னாட்சி அர்த்தமற்றது."*

- மகாத்மா காந்தி, யங் இந்தியா

I

# மகாத்மா காந்தி — ஒரு முன்னோடி

*"அங்குமிங்கும் அலைந்து திரிந்து கடினமான சூழல்களிலிருந்து மக்களை விடுவிக்கும நாடோடி வீரனுடையதாக எனது பணியை நான் கருதவில்லை: மக்கள் தஙகளது பிரச்சினைகளைத தாங்களே தீர்த்துக்கொள்வதற்கான வழியைக் காட்டுவதே எனது தாழ்மையுள்ள வேலையாகும்"*

*- மகாத்மா காந்தி*

சமுதாயத்தில் அடிமட்டத்திலுள்ளவர்களின் வாழ்க்கையில் வியத்தகு மேமபாடுகளை ஏற்படுத்திய மூன்று தன்னார்வ இயக்கங்களைப பற்றியது இந்நூல். முதல்வகை இயக்கமானது "சிப்கோ" எனப்படுவது. இந்த இந்தி மொழிச் சொல்லுக்கு 'விடாது உறுதியாகப் பற்றிக் கொள்ளுதல்' என்று பொருள். இமயமலைப் பகுதிகளில் வளர்ந்தோங்கிய காடுகளில் மரங்களை வெட்டுவதற்கு முயன்ற மனிதர்களை, அபபகுதிகளில் உள்ள சில மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், குறிப்பாகப் பெண்கள் ஒன்றுதிரண்டு மரங்களை அணைத்துக் கொண்டு நின்று எதிர்த்தனர். அவர்கள் மேற்கொண்ட இந்தச் செயலினால் இவ்வியக்கம் 'சிப்கோ' எனப் பெயர் பெற்றது. 20 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1971-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இவ்வியக்கம, இயற்கை, மரங்கள்,தண்ணீர், காற்று, சுற்றுப்புறச்சூழல் ஆகியவற்றை அழிவிலிருந்து காக்கும்பொருட்டு மக்கள் தாமாகவே ஒன்றுபடவேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் எழுச்சி பெற்றது.

இரண்டாவது இயக்கம் — மகாராஷ்டிர மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் 50 வருடங்களுக்கு முன் பாபா ஆம்தே தோற்றுவித்ததாகும். அச்சம் தரக்கூடிய தொழுநோயால் அவதிப்படுபவர்களுக்கு உதவி புரியவும் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து. இந்நோய் பற்றிய அச்சத்தையும் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட வடுவையும் போக்கவும் முதன்முதலில் இது தோற்றுவிக்கப்பட்டது. இன்று இவ்வியக்கம் தொழுநோய்

பிரச்சினையை மட்டும் உள்ளடக்கியதாக இல்லாமல் பல பரிமாணங்களிலும் வளர்ச்சி பெற்றுள்ளது.

மூன்றாவது இயக்கம் 'சேவா' என்று சுருக்கமாக அழைக்கப்படும் சுயதொழில் புரியும் பெண்கள் சங்கம் ஆகும். "சேவா" என்றால் சேவை என்று பொருள். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த திருமதி இலாபட் என்பவர் ஆரம்பித்த இவ்வியக்கமானது, இம்மாநிலத்தின் கிராமங்களிலும் நகரங்களிலும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள ஏழைப் பெண்கள் அனைவரையும் ஒன்றுசேர்க்கும் பாங்கானது. இன்று இவ்வியக்கம், இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் பரவி, பல்வேறுபட்ட சமூகப் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் ஈடுபட்டுள்ளது.

அரசாலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் உள்ள நிறுவனங்களாலும் பல்வேறு நிலைகளில் இவ்வியக்கங்களுக்கு ஆதரவு இருப்பினும்கூட மக்களின் தன்னார்வ முனைப்பின் விளைவாகவே மேற்கூறிய மூன்று இயக்கங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களின் உறுதியான ஈடுபாட்டை நம்பித்தான் இவை தொடர்ந்து பணியாற்றுகின்றன. மகாத்மா காந்தியின் கொள்கைகளினால் இவ்வியக்கங்கள் பல்வேறு நிலைகளில் உந்தப்பட்டு எழுச்சி பெற்றன. இவ்வாறு இயக்கங்கள் தோன்ற உந்து சக்தியாக விளங்கிய காந்திஜியின் கொள்கைகளை அறிந்து கொள்வதோடு மட்டுமின்றி அவரைப் பற்றியும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். காந்திஜியின் வாழக்கையும் அவரது கொள்கைகளும பிரிக்க முடியாதது. ஏனெனில் தான் சொன்னதை வாழ்ந்துகாட்டியவர் அவர். காந்திஜியின் வாழக்கைச் சம்பவங்களும் அவரது கொளகைகளும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை. அவரது வாழ்க்கை சுருக்கமாக இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

மகாத்மா காந்தி குஜராத் மாநிலத்தில் அன்றைய கத்யவார் சிற்றரசின் தலைநகரான போர்பந்தர் என்னுமிடத்தில், 1869 ஆம ஆண்டு, சமயப்பற்றுள்ள ஒரு மத்தியதர இந்துக் குடும்பத்தில் பிறந்தார். அவரது இயற்பெயர் மோகன்தாஸ். பள்ளிப்பருவத்தில் அவரது அறிவுக்கூர்மை பற்றி குறிப்பிடுமளவுக்கு எதுவுமில்லை. சிறுவனாக இருந்தபோதே அவருக்குத் திருமணம் நடந்தேறியது. மற்றவர்களைப் போன்றே அவரும் கணவனாகவும் இல்லத்தலைவனாகவும் வாழ வேண்டியவரானார். இளைஞனாக இருந்தபோது, தான் பிறந்த பண்பாட்டுச் சூழலில் பாவச் செயல்கள் என்று கருதப்பட்ட திருடுதல், மாமிசம் உண்ணுதல் போன்ற சில தவறுகளைச் செய்தார். அவர் ஒரு சமயம் சத்தியத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்த அரிச்சந்திர நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. அச்சம்பவம் அவர்மனதில் என்றும் அழியா ஓர் இடத்தைப் பெற்றது.

சுமாராகவே அமைந்த பள்ளிப் படிப்பிற்குப்பின், மிகவும்பெரிதாக மதிக்கப்பட்ட சட்டப்படிப்பில் பட்டம் பெற

1888-இல் காந்தி இங்கிலாந்திற்கு அனுபபப்பட்டார் அங்கிருந்த மூன்றாண்டுக் காலத்தில் சைவ உணவு உட்கொள்வோர் கூட்டங்களுக்கு சென்றதையும், வாழ்க்கை பற்றியும அதன் குறிக்கோள் பற்றியும தெளிவில்லாமல் சிந்தித்ததையும தவிர குறிப்பிடத்தகுந்த யாதொன்றையும் அவர் செய்யவில்லை

காந்தி இங்கிலாந்தில் மூன்று ஆண்டுகள் தங்கிய பின்னர் 1891-இல் சட்டப்படிப்பில் பட்டம் பெற்று இந்தியா திரும்பினார். வழக்கறிஞராகப் பணியாற்ற அவர் முயன்றபோது இங்கு பெருவெற்றி எதையும் பெற்றுவிட முடியாது என்று உணர்ந்தார். முன்னேற முடியாது என்று அறிந்து கொண்டார். எனவே, தென்னாபபிரிக்காவில் ஓர் இந்திய வணிக நிறுவனத்துக்கு சட்ட ரீதியில் உதவ எதிர்பாராத வாய்பபு கிட்டவே, அதை உடனே ஏற்றுக்கொண்டார்.

அந்தக் காலகட்டத்தில் ஏராளமான இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவில் குடியேறி இருந்தனர். இந்து, இஸ்லாம், கிறிஸ்துவம் போன்ற பல்வேறு மதங்களைச் சார்ந்த குஜராத்தியர், முஸ்லீமகள, தென்னிந்தியர் எனப் பலர் அங்கு வாழ்ந்துவந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் "கிர்மிட்" என்றழைக்கப்பட்ட ஓர் ஒப்பந்த முறையில் அங்கு வாழ்ந்து வந்தனர். இம்முறை படைமானிய முறையில் இருந்த அடிமைத்தனத்திற்கும், கொத்தடிமைத்தனத்திற்கும் நிகரானது வெள்ளையர்களின அதிகாரத்திற்குட்பட்ட வளமான தென்னாப்பிரிக்கப பண்ணைகளில் குறிப்பிட்ட ஒரு காலம் வரை, இந்த ஒப்பந்த முறையில் கையெழுத்திட்ட தொழிலாளிகள் உழைக்க வேண்டும என்ற கட்டாயம இருந்தது. சில நேரங்களில் இவ்வகைத் தொழிலாளர்கள் நேர்மையற்ற முறையிலும், கொடூரமாகவும் நடத்தப்பட்டனர். இவர்கள் அழைக்கப்பட்ட விதமும் மிகவும் கண்ணியமற்றதாக இருந்தது. ஒப்பந்த காலம் முடிந்த பின்னர் சுதந்திரமாகத் தாம் விரும்பியதைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆனால் வெள்ளையரல்லாதோர் மிகவும் தாழத்தப்பட்டவராகவும் உடல் உழைப்புப் பணிகளை மட்டுமே செய்யத் தகுதி பெற்றவராகவும் கருதபபட்ட சமுதாயத்தில் அவ்வகைச் சுதந்திரம பொருளற்றதாக இருந்தது.

தென்னாப்பிரிக்க அரசாங்கத்திலும் அதன் நிர்வாகத்திலும் வெள்ளையர் ஆதிக்கம் செலுத்தியதால், வெள்ளையரல்லாதோர் நிறவேற்றுமைக் கொளகையால் மிகவும் பாதிக்கப்பட்டு அவதியுற்றனர். இதுவே இன்று "நிறவெறிக்கொள்கை" எனப்படுகிறது. வெள்ளையரல்லாத காரணத்தால், காந்திஜி தானே பல அதிர்ச்சியூட்டும் அனுபவங்களைப் பெற நேர்ந்தது. அவர் வெள்ளையரால் பாரபட்சமாக நடத்தப்பட்டார், அவமதிக்கப்பட்டார், காயப்படுத்தப்பட்டார்; எனினும் இந்த சொந்த அனுபவங்களால் அவர் பயந்து விடவில்லை. வெறுப்பையோ, கசப்புணர்வையோ கெட்ட எண்ணத்தையோ

வெள்ளையர்பால் வளர்த்துக் கொள்ளவுமில்லை. ஆனால், பிற வெள்ளையரல்லதோரும் தான் நடத்தப்பட்ட அதே விதத்தில் நடத்தப்பட்டதைக் கண்டபோது, நீதியின் பாலும், சமத்துவத்தின் பாலும் அவர் கொண்டிருந்த வேட்கை இக்கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடத் தூண்டியது.

காந்தி 1895-இல் நட்டால் இந்திய காங்கிரஸை ஆரம்பித்தார். இக்கால கட்டத்தில்தான் அவருக்கு தமிழ்நாட்டைச்சேர்ந்த பாலசுந்தரம் என்ற தொழிலாளியுடன் தொடர்பு ஏற்பட்டது. ஒப்பந்த முறைப்படி ஆங்கிலேயருக்குஅடிமைத் தொழில் செய்து வந்த பாலசுந்தரம் மிகவும் கொடூரமான முறையில் நடத்தப்பட்டார். பாலசுந்தரத்தின் வழக்கை காந்தி எடுத்துக் கொண்டார். இவ்வழக்கு காந்திக்குப் புகழ் ஈட்டித் தந்தது. காந்தி பாலசுந்தரத்திற்காக சட்டத்தின் கோணத்திலிருந்து மட்டும் வாதாடவில்லை; ஒவ்வொரு மனிதனும் கண்ணியமாக நடத்தப்படவேண்டும் என்றும் வாதாடினார். அவர் அடக்குமுறையையும் சமத்துவமற்ற நிலையையும் வன்மையாக வெறுத்தார். காந்தியும் அவரது கட்சிக்காரர் பாலசுந்தரமும் நேரடியாக ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ள இயலவில்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். ஏனெனில் காந்திக்குத் தமிழ் தெரியாது. பாலசுந்தரத்திற்கு காந்தி அறிந்திருந்த குஜராத்தியோ, ஆங்கிலமோ தெரியாது.

காந்தி 1896-இல் இந்தியாவிற்குத் திரும்பினார். ஒருசில இந்தியத் தலைவர்களை அவர் சந்தித்தார். இந்தியாவில் இருந்தபோது தென்னாப்பிரிக்க இந்தியர்களின் அவலநிலை குறித்து நிறைய எழுதினார். எனினும் மீண்டும் அந்த வருடமே அவர் அழைப்பின்பேரில் தென்னாப்பிரிக்காவுக்கு விரையநேர்ந்தது. இதற்கிடையில் காந்தியின் நடவடிக்கை காரணமாக ஒருசில ஆங்கிலேயர்கள் அவர்மீது தீவிரமான வெறுப்பை வளர்த்திருந்தனர். படகிலே அவர் டர்பன் நகரை அடைந்தபோது, ஆங்கிலேய நண்பர்கள் இருவர் அவரை மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கச் சொன்னார்கள். ஏனெனில் ஒருசில ஆங்கிலேயர்கள் காந்திக்காக "காத்துக் கொண்டு" இருந்தனர். எதிர்பார்த்தது போலவே சினம்கொண்ட ஒருசிறு கூட்டம் அவரை இனங்கண்டு கொண்டது. அவரைக் காக்க முயன்ற ஒரு ஆங்கிலேய நண்பரிடமிருந்து பிரித்துச்சென்று அடித்து உதைத்தது அக்கூட்டம். ஒரு இளம் ஆங்கிலய மாது தன் உயிரையும் பொருட்படுத்தாது அவரை மேலும் அடிவாங்காமல் காப்பாற்றினார். அம்மாது ஆங்கிலேய காவல் கண்காணிப்பாளரின் மனைவியான திருமதி அலெக்சாண்டர் ஆவார். அடித்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று சில ஆங்கிலேய நண்பர்கள் காந்தியிடம் கூறினார்கள். ஆனால் மன்னிப்பதில் நம்பிக்கை கொண்ட காந்தி அவ்வாறு செய்யவில்லை. தென்னாப்பிரிக்க ஆங்கிலேயர்களில் பலர் நியாயத்தின் பக்கம் இருந்தனர் என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்த நம்பிக்கையின் காரணமாய் பல ஆங்கிலேயர்கள் காந்தியின் நண்பர்களாகவும் அவரைப் பாராட்டுபவர்களாகவும் இருந்தனர்

இந்தியர்கள மீது அனுதாபம் செலுத்திய அவர்கள தங்கள் மக்களாலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டனர். இந்தியர்களின் பண்பாடு தாழ்ந்தது என்றும், அன்னியப்பட்டது என்றும் வெள்ளையர் கருதிய நிலையில் இந்தியர்பால் அனுதாபம் காட்டுவதற்கும் தங்கள் மக்களின் தவறான எண்ணங்களை எதிர்ப்பதற்கும் அந்தச்சில ஆங்கிலேயருக்கு தார்மீக வலிமை தேவையாய் இருந்தது. காந்தியின் ஆங்கிலேய நண்பர்கள் அவ்வகையான தார்மீக வலிமை கொண்டவர்களாய் இருந்தனர். காந்தியால் ஈர்க்கப்பட்டவரும் நண்பருமான டோக் என்னும் ஆங்கிலேயர் ஒருவர் முதன்முதலாய் காந்தியின் வரலாற்றை எழுதினார். டோக் ஒரு சமயம் காந்தியைத்தன் வீட்டில் வைத்து மருத்துவம் செய்து பாதுகாத்தார்.

விரைவில் தென்னாப்பிரிக்காவில் வாழும் எல்லா இந்தியர்களின் தலைவராகவும் காந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டார். மதத்தையோ அன்றி மொழியையோ அடிப்படையாக வைத்து எவரையும காந்தி தன் வாழ்நாளில் பிரித்துப் பார்க்கவில்லை. யூதமதத்தைச் சார்ந்தவரும் கட்டிடக்கலை நிபுணருமான காலன்பாக் என்பவர் காந்தியின் வாழ்நாள் முழுதும் உற்ற நண்பராக இருந்தார். அவரைச் சந்திக்க இந்தியாவிற்குப் பல ஆண்டுகள் கழித்துப் பயணம் மேற்கொண்டார். காந்தி இந்துமதத்தை சேர்ந்தவராக இருந்தும் மற்ற எல்லா மதங்களின் மேலும் மரியாதை வைத்திருந்தார். சட்டத் தொழிலில் உண்மையே பேசினார் பொய்பேசி ஒரு வழக்கில் வெற்றி கொள்வதைவிட மெய்பேசி அவ்வழக்கில் தோல்வி அடைவதே சிறந்தது. என்று தன்னிடம் வழக்குக் கொண்டு வருபவர்களிடம் கூறினார். காந்தி உண்மையின் மீது கொண்டுள்ள பற்றையும், தன் பிரதிவாதிகளிடத்தில் காட்டும நேர்மையையும் பார்த்த் நீதிபதிகள் பலரும் அவரை வியந்தனர்.

காந்தி தன் வாழ்நாள் முழுவதும் தன் செயல்கள் அனைத்திலும் கடமையின் உணர்வினால் உந்தப்பட்டு வழி நடந்தார். 1899-இல் ஒரு தன்னார்வ இந்திய மருத்துவத்தொண்டர்கள குழுவிற்குத் தலைவராக இருந்து தென்னாப்பிரிக்காவில் நடந்த உள்நாட்டுப் போரில் ஆங்கிலேயருக்கு உதவினார். இவ்வகையான செயலுக்குரிய உடல் உறுதியும் தலைமைப் பண்புகளும் காந்தியிடம் நிறைந்திருந்தன.

காந்தி 1901-இல் இந்தியாவிற்குத் திரும்பினார். அச்சமயத்தில் இந்தியாவின் மேற்குப்பகுதியில் ராஜ்காட் என்ற நகரத்தில் பளேக் பரவியிருந்தது காந்தி, இந்நோயொழிப்பு இயக்கத்தை தானே முன்னின்று நடத்தினார். மிகக்குறைந்த காலமே அவர் இந்தியாவில் தங்கியிருந்தார். எனினும் தேசிய இயக்கத்தால் ஈர்க்கப்பெற்று, கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். இந்தியா முழுதும் ரயிலில் மூன்றாவது வகுப்பில் அமர்ந்து பயணம் செய்தார்.

1902-இல் மீண்டும் தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கு

'இந்தியன் ஒப்பீனியன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்து இந்தியர்களின் எண்ணங்களை அதன்மூலமாய் வெளியிட்டார். இந்த பத்திரிக்கையை வெளியிடுவதில் மிகுந்த சிரமங்களை அனுபவித்தார். ஆயினும் துன்பங்கள் வரும்போதும் முயற்சியைக் கைவிடாத மனப்பாங்கு உடையவராதலால் அவர் பத்திரிக்கையைத் தொடர்ந்து வெளிக் கொணர்ந்தார்.

1904-இல் இந்தியாவின் புகழ் பெற்ற செவ்விலக்கியமான பகவத் கீதையைப் படித்தார். ஆங்கில தத்துவஞானியான ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் தேர்ச்சி' என்ற நூலையும் படித்தார். தனிமனிதனின் நலம் மக்களனைவரின் நலனில்தான் இருக்கிறது என்ற கருத்து இப்புத்தகத்தைப் படித்ததின் வாயிலாய் அவருக்கு உறுதிப்பட்டது. (பின்னால், தன்னுடைய சுயசரிதையில் ரஸ்கினின் புத்தகத்தைப் பற்றி ஒரு அத்தியாயமே எழுதியிருக்கிறார். அதில், அந்தப் புத்தகம் தன்மீது ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றியும் எழுதியுள்ளார்). அடுத்தநாளே ரஸ்கினின் புத்தகம் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றித்தன் நெருங்கிய ஆங்கிலேய நண்பர் டாக்டர் வெஸ்ட் என்பவரிடம் கலந்துரையாடியபோது, ரஸ்கின் கூறியுள்ள கொள்கைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதைப் பற்றிப் பேசினார். பின்னர் தென்னாப்பிரிக்காவில் போனிக்ஸ் என்ற இடத்தில் தன் முதல் ஆசிரமத்தைத் துவக்கினார். பொதுவாக ஆசிரமம் என்பது ஒரு மடத்துக்குரிய வாழ்வாகக் கருதப்படுவது. ஆனால் காந்தி துவக்கிய ஆசிரமம், தார்மீகக் கொள்கைகளின் வழியாய் சத்தியத்தைத் தேடுவோர் அடங்கிய ஒரு குழு மேற்கொள்ளுகின்ற சமுதாய வாழக்கையே ஆகும. போனிக்ஸ் ஆசிரமத்தில் பல இந்தியர்களும், அவரின் கொள்கைகளையும நேர்மையான போக்கையும்விருமபி மதித்த இந்தியரல்லாதார் சிலரும் சேர்ந்தனர். கோகலே தென்னாப்பிரிக்காவைக் காணவந்தபோது காந்தி அவரை வரவேற்று உபசரித்தார். ஒரு தலைவன் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை காந்தி கோகலே மூலம் அறிந்தார். பின்னர் கோகலேவைத்தன் அரசியல் குருவாக காந்தி நன்றி பாராட்டினார்.

1906-இல் தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்ட கலவரத்தின்போது காந்தி மருத்துவத் தொண்டராகப் பணியாற்றினார். இந்த ஆண்டில்தான் சத்யாக்கிரகம் என்ற பிரபலமான சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. இச்சொல்லுக்கும அதன் முக்கியத்துவத்துக்கும்பின் ஒரு சுவையான நிகழ்ச்சி உண்டு. 'சத்தியத்தை வலியுறுத்துவதும் அதைப் பின்பற்றுவதும்' என்பதுதான் இச்சொல்லின் எளிமையான பொருள். எனினும் நடைமுறையில் இச்சொல், அநீதியையும் ஒடுக்கு முறையையும் எதிர்ப்பதும் அங்ஙனம் எதிர்க்கிற போது அத்தகைய அநீதிகளைக் கைவிட்டுவிடுமாறு எதிராளியை மனம்மாறச் செய்வதுமாக பொருள்விரிவு பெற்றது. சத்தியாகிரகத்தில் ஒடுக்குபவர் மீது வெறுப்பையோ அச்சத்தையோ காட்டுவதற்கு இடமே இல்லையாததால் இணங்கவைப்பது என்பது அன்பின்

அடிப்படையில்அமைதல் வேண்டும். அநீதியை எதிர்த்துப் போராடுவது அஹிம்சை முறையில் இருக்க வேண்டும். சத்தியாக்கிரகி என்பவர் தன்னை எதிர்ப்பவருக்கு ஊறுவிளைவிக்காமல் தன்னுடைய உயிரையும் தியாகம் செய்யத்தயாராக இருக்க வேண்டும். இதைத்தான் காந்திஜி தன் வாழ்வில் எடுத்துக்காட்டினார் "உன்னுடைய சக்தி அனைத்தையும் ஒன்றுகூட்டி கொடுங்கோன்மையை எதிர்த்து நில்; ஆனால் கொடுங்கோலனை அன்பால் வெல்ல முயற்சி செய். ஒடுக்குதலுக்கு உன்னை ஆளாக்கிக் கொள்ளாதே; ஆனால் உன் உள்ளத்தில் ஒடுக்குபவர் மீது வெறுப்பினைக் கொள்ளாதே. பாவத்தை வெறு, ஆனால் பாவம் செய்தவனை வெறுக்காதே. சத்தியம் உன்னை எங்கு கொண்டு சென்றாலும் அதைக் கைவிடாதே. அவ்வாறு உன்னுடைய உயிரையே தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபோதிலும், அச்சமின்றி உயிர்த்தியாகம் செய்" என்பதுதான் காந்திஜி உலகுக்கு எடுத்துக்காட்டிய கொள்கையாகும்.

1907-இல்இனவெறிக் கொள்கையை எதிர்த்து காந்தி சத்தியாக்கிரகம் மேற்கொண்டார் அதன் பயனாய் தென்னாப்பிரிக்க அரசாங்கத்துடன் ஓர் உடன்பாடு ஏற்பட்டது ஆனால் தான் ஏமாற்றப்பட்டதை அவர் பின்னர் உணர்ந்தார். மீண்டும் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு சிறை சென்றார். அச்சமயத்தில்தான் லியோ டால்ஸ்டாய் என்ற சிறந்த ரஷ்ய எழுத்தாளருடன் தொடர்பு ஏற்பட்டது. காந்தி மிகவும் விரும்பிய அன்பு, சத்தியம், நீதி என்ற உன்னத வாழ்க்கை மதிப்பீடுகளுக்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் டால்ஸ்டாய். 1909-இல் காந்தி "இந்து சுயராஜ்" என்ற புத்தகத்தை எழுதினார். அவரை நன்கு புரிந்துகொள்ள இப்புத்தகமே மிகவும்அடிப்படையானது. நவநாகரீகம் இந்தியாவின் வீழ்ச்சிக்கு எவ்வாறு காரணமாக இருக்கிறது என்பதைப் பற்றிய காந்தியின் கருத்துக்கள்அடங்கிய நூலாகும் இது. இதில் கூறியுள்ள கருத்துக்களைப் பின்னர் ஒருகாலத்தில்அவர் மாற்றிக்கொள்ள நேரும் என்று பலர் எண்ணினர். ஆனால் பல்லாண்டுகளுக்குப் பின்னரும் அக்கருத்துக்களை மீண்டும் வலியுறுத்திக் காட்டினார் காந்தி.

1910-இல் ஜோகன்னஸ்பர்க் என்ற நகரத்தின் புறநகர்ப் பகுதியில் டால்ஸ்டாய் பெயரில் மற்றொரு ஆசிரமத்தைத் துவக்கினார். 1913-இல் மீண்டும் சத்தியாகிரகம் மேற்கொண்டு சிறைவாசம் புகுந்தார். 1914-இல் அவர் மேற்கொண்ட சத்தியாக்கிரகம் வென்றதால் தென்னாப்பிக்க அரசாங்கத்திற்கும் இந்திய சமுதாயத்திற்கும் நேர்மையான ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

1914-இல் காந்தி இந்தியா திரும்பினார். அவர் மீண்டும் தென்னாப்பிரிக்காவிற்குத் திரும்ப முடியவில்லை. இத்துடன் அவரின் வாழ்வின்முக்கிய காலகட்டம் ஒன்று முடிவுக்கு வந்தது. தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்ட போராட்டங்கள் அவர் ஆளுமையின் பலபரிமாணங்களை உருவாக்கியதால் தலைவராக, மனிதாபிமானியாக, சிந்தனையாளராக, சத்தியத்தைத் தேடுபவராக

இவற்றிற்கெல்லாம் மேலாக, மனிதகுலத்தொண்டராகப் பரிணமித்தார்.

1914-இல் ஏற்பட்ட முதல் உலகப்போரில் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு உறுதுணையாகப் போரில் ஈடுபட இந்தியர்களை இராணுவதில் சேர ஊக்குவித்தார். இதற்காகக் கடுமையாக உழைத்ததால் உடல் நலமில்லாமல் போனார். போரில் உதவியதைப் பாராட்டும் வகையில் ஆங்கில அரசாங்கம் 1915-இல்அவருக்கு ஒரு பதக்கத்தைப் பரிசளித்தது. இந்தியர்கள இராணுவத்தில் சேர்வதன்மூலம் உபயோகிக்க அனுமதிக்கப்படாத ஆயுதங்களை எவ்வாறு தாங்கள் பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும் என்று வெளிப்படையாகப் பேசினார். காந்தியின் உற்ற நண்பர்கள் சிலர் அவரின் இந்தப் போக்கைக் கண்டித்துக் கடிதங்கள் எழுதினர்; ஆயினும் அவர் தன்னுடைய நிலையை நியாயப்படுத்தினார்.

இக்கால கட்டத்தில்தான் இந்தியாவைப் பற்றித் தீவிரமாக அறிந்துகொள்ள அவர் முற்படலானார். 1917-இல் பீகார் மாநிலம் சம்பரன் மாவட்டத்தில் மிகவும் ஏழ்மையான விவசாயிகள் சகிக்கமுடியாத நிலைமையில் வேலை செய்கின்றனர் என்பதை ராஜ்குமார் என்ற இளைஞன் காந்தியின் பார்வைக்குக் கொணர்ந்தான். பீகாரி விவசாயிகள் தங்கள் நிலத்தில் பணப்பயிராகிய அவுரிச் செடிகளைப் பயிரிட வேண்டுமென்று சட்டவிரோதமான ஒரு நிபந்தனையை வெள்ளை நிலச்சுவான்தார்கள் விதித்தனர். இபபயிர்வகை வெள்ளை நிலச்சுவான்தார்களுக்குக் கணிசமான இலாபத்தை ஈட்டித்தந்தது. ஆனால் விவசாயிகள் மிகவும் சுரண்டப்பட்டார்கள். முதலில் காந்தி இந்த முறையீட்டில் அதிக ஆர்வம் காட்டவில்லை, ஏனெனில் இம்முறையீடு நம்பத்தகுந்ததாக இல்லாமலிருந்தது. இறுதியாக அவர் சம்பரன் மாவட்டத்திற்கு வருவதாக ஒத்துக் கொண்டார். ஆனால் தான் எவ்வித நடவடிக்கை எடுப்பதற்கு முன்பும் தீர விசாரிக்கவேண்டும் என்றும் தெளிவாகக் கூறிவிட்டார்.

சம்பரன் சென்றிருந்தபோது விவசாயிகள் உண்மையிலேயே சுரண்டப்பட்டார்கள் என்பதை நேரில் கண்டறிந்தார். நிலச் சுவான்தார்களை எதிர்த்த குத்தகை விவசாயிகள்அடிக்கடி கொடுமைப்படுத்தப்பட்டனர். தேசப்பற்றுள்ள ஒருசிறு இளைஞர் குழு காந்தியின் வருகையால் ஊக்கம் பெற்றது. முதலில்தீர விசாரனை நடத்தி உண்மை நிலையை அறிந்தார், ஏராளமான ஆதாரங்களை மிகுந்த கவனத்துடன் சேகரித்தார். பின்னர் சத்தியாகிரகத்தை ஆரம்பித்தார். அதில் முழு வெற்றியையும் அடைந்தார். இதுதான் இந்தியாவில் முதன்முதலில் காநதி மேற்கொண்ட சத்தியாகிரகம், இது அவரது வாழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இதுவே பின்னர் இந்திய தேசிய இயக்கத்தின் தலைவராக அவரை அங்கீகரிக்க ஏதுவாக அமைந்தது.

1918-இல் அகமதாபாத்தில் ஒரு நூற்பாலையிலுள்ள

தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தினார். பின்னர் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு ஆதரவாக சத்தியாகிரகப் பாதையைக் காட்டினார். இந்த நேரத்தில்தான் இந்தியர்களை வாட்டி வதைக்கும் வேலையின்மை, வறுமை ஆகிய நோய்களுக்கு ராட்டைதான் மருந்து என்பதைக் கண்டார். மக்களைத் தாங்களே நூல்நூற்கவும் அவ்வாறு நூற்ற துணிகளையே அணிந்துகொள்ளவும் அறிவுறுத்தினார். இதுதான் பின்னர் கதர்துணி என்றுபுகழ் பெறலாயிற்று. கதரையும் கிராமத் தொழில்களையும் தம் வாழ்நாள் முழுதும் ஆதரித்துப் பேசினார். இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடு என்று கண்டார். 1919-இல் "யங் இந்தியா" என்றும் "நவஜீவன்"என்றும் இருபத்திரிகைகளைத் துவக்கினார். மிகச்சிறந்தவகையில் இதழியல் தர்மத்தையும் தனனுடைய கருத்துக்களையும் பொது மக்களிடையே பரப்ப இவ்விரு பத்திரிகைகளைப் பயன்படுத்தினார். இந்தப் பத்திரிகைகளின் பழைய இதழகளைப்படிப்பதன்மூலம் நவீன இந்தியாவின் வரலாற்றைக் காந்தியின் உண்மையான எழுத்துககளிலிருந்து அறிந்து கொள்ள முடியும். பத்திரிகைகள், அவ்வக்காலத்து பொருளாதார, அரசியல், சமூக நிலையை அறிய உதவும் மிகச்சிறந்த ஆதாரங்களாகும்.

1922-இல் காந்தி அஹிம்சா இயக்கத்தை ஆரம்பித்தார். இருப்பினும் காவல் துறையினரின் நடவடிக்கைகளால் சினம கொண்ட மக்கள் வன்முறையில ஈடுபட்டனா தன் தொண்டர்களின் கோபாவேசங் கொண்ட எதிர்ப்புகளைக்கண்டு காந்தி அப்போராட்டத்தைத தற்காலிகமாகக் கைவிட்டார. அவர் அஹிம்சையையும் சத்தியத்தையும முழுதுமாக நமபினார் எனவே வன்முறை, பொய ஆகியவற்றால் நலலதொரு செயல்விளையினும்அதை அவர பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அறவழியில் சென்று அடைகின்ற செயல்களின் விளைவு அறம்சார்ந்ததாகவே இருக்கும் என்று நம்பியவர். "முறையும்"அம்முறையால் அடைகின்ற முடிவும் "ஒன்றே" எனறு அடிக்கடி கூறுவார். அறனில்லா வழியால் நன்மை பயக்கின்ற ஒரு குறிக்கோளை யாரும் அடைய முடியாது என்று உறுதியாக நமபினார்.

1930-இல் ஆங்கில அரசாங்கம் விதித்த உப்புவரியை திரும்பப்பெற வேண்டுமென்று உபபுச்சத்தியாகிரகத்தை மேற்கொண்டு வற்புறுத்தினார். உப்பு வரி மக்களிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தவும் அவர்களது சிந்தனையைத் தூண்டவும் செய்யும் என்று அவர் எண்ணினார். இவ்வரி விதிப்பானது அவருக்கு முழுதும் உடன்பாடுடையதாக இல்லை. வரி விதிப்பை நீக்கக கோரிய வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டபோது, வரிகொடாமல் உப்பை உற்பத்தி செய்யுமாறு நாட்டுமக்களை வற்புறுத்தினார். அம்முறையில்தான் அரசாங்கத்தை எதிர்க்க இயலும் என்றார் . வரலாற்றுப் புகழ்பெற்ற தண்டி உப்புச் சத்தியாகிரகத்தை மேற்கொண்டு கடற்கரைக்கு நடைப்பயணமாய்ச் சென்று தானே உப்பைத் தயாரித்தார். நியாயமற்ற வரிவிதிப்புச் சட்டத்தை எதிர்த்து.

நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் இதில்பங்கேற்றனர். அநீதியையும் ஒடுக்கு முறையையும் அஹிம்சா வழியில் நடத்திய சத்தியாகிரகம் என்ற இந்தப் புதிய எதிர்ப்பு முறை உலகத்தின் கவனத்தை ஈர்த்தது "வலிமையை எதிர்த்துப் போரிடும நேர்மையை நோக்கி உலகத்து அனுதாபம திரும்ப வேண்டும்" என்று காந்தி எழுதினார். சத்தியாகிரகம் அக்குறிக்கோளை அடைய முடியாது தோல்வியுற்ற போதிலும்அது நாட்டு மக்களை உயிர்ப்பித்து ஒன்று திரட்டியது.

காந்தி அரசியல்வாதி மட்டுமில்லை: அவர் சமூகப் பிரச்சனைகளைக் குறித்தும் ஆழ்ந்து சிந்தித்த ஒரு சிந்தனையாளர். சமுதாய உறவு முறைகளில் நீண்டகால மாறுதல்கள் ஏற்பட வேண்டும் என்ற தேவையை ஆணித்தரமாக உணர்ந்தவர். தீண்டாமை என்பது மனிதனுக்கும் இறைவனுக்கும் எதிராக இழைக்கப்படும் பாவம் என்று கருதியவர். அவர் அடிக்கடி ஏழை எளியவர்களின குடிசைகளில் தங்கியும அவர்களுடன் தன்னையும் ஒருவராய் எண்ணியும் வாழ்ந்தார். மறுபிறவி எடுக்க நேர்ந்தால் ஒடுக்கபபட்டவர்களில் ஒருவனாயப் பிறந்து அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்து கொள்வேன் என்று கூறியுள்ளார். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களை அரிஜனங்கள என்ற சொல்லால் குறித்தார். அரிஜனங்கள எனறால் கடவுளின் குழந்தைகள் என்று பொருள்படும் அவர்களுக்கு முழு சமத்துவம தரப்பட வேண்டும் என்று வாதாடினார் அவரின் இவ்வகைப் போக்கைக் கண்ட சில இந்துக்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். ஆனால் இப்போக்கிற்கு மக்கள் தந்த தார்மீக ஆதரவு பெருமபாலான இந்துக்களுக்கு அரிஜனங்கள் மீதிருந்த தீணடாமை மனப்போக்கை மாற்றிக் கொள்ளத் தூண்டியது. அவர்களைக கோயில்களில் சென்று வழிபடவும் அனுமதித்தனர்

தன்னுடைய சமூக, அரசியல் கருத்துக்களை வெளியிடுவதற்கு 1933-இல் 'அரிஜன்' பத்திரிக்கையை ஆரம்பித்தார். இந்தியாவில் பெண்கள மிகவும் கீழ்நிலையில் நடத்தப்பட்டதைக் கண்டு வருந்தினார். பெண்களின்பால் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட அவர் "பெண்களும் ஆண்களைப்போன்று நல்லவர்களாகவும் ஆற்றல் மிக்கவர்களாவும் உள்ளனர்" என்று வெளிப்படையாகக் கூறினார் உண்மையில் கூறப்போனால், உணர்ச்சிவயப்படாத முறையில், பெண்களுக்கென்று ஒரு உயர்ந்த இடத்தை அவர் தந்தார். பெண்கள் பலரும் தங்கள் உள்ளுணர்வால் உந்தப்பட்டு காந்தியுடன் பணிபுரிய முன்வந்தனர்.

அவர் மதவெறியை வெறுத்தொதுக்கினார். மதத்தின் பெயரால் அப்பாவி மக்களைக் கொடூரமாக நடத்துதல் பாவத்திற்கு ஒப்பாகும் என்று கூறினார். அவருடைய பொது வாழ்வில் பல மதங்களைப் பின்பற்றுபவர்களும் அவருடன் பணிபுரிந்தனர். எல்லாச் சமயங்களும் ஒரே உண்மையைத்தான் வலியுறுத்துகின்றன என்று உறுதியாக அவர் நம்பினார். "ஒருவர் எந்த மதத்தைப் பின்பற்றுகிறார்


என்பது அவரது சொந்த விவகாரமாகும்" என்றும் கூறினார். சமயத்தைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் எவ்விதக் கட்டாயத்தையும் விதிக்க முடியாது. அரசாங்கத்திடமிருந்து சமயம் பிரிந்து இருக்க வேண்டும் என்று விரும்பினார். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுதும் போராடினார். மதக்கலவரம் ஏற்பட்டு ஒன்றுமறியாத மக்கள் துன்பப்பட்டபோது அவர் மிகவும் வேதனை அடைந்தார். மதக் கலவரத்தால் விளைந்த வன்முறைச் சம்பவத்தால் இன்னலுற்ற மக்களின் மனப்புண்களை ஆற்றுவதிலே தன் வாழ்வின் இறுதிப் பகுதியைக் கழித்தார். மதவெறிக்குத் தலை வணங்காததன் விளைவாய் அவர் தன்னுடைய உயிரையும் இழக்க நேர்ந்தது.


1942-இல் "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டத்தை நாடு முழுதும் மேற்கொண்டார். 1947-இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது; ஆனால் இந்தியா, பாகிஸ்தான் என்று இரு பிரிவுகளாக நாடு பிரிக்கப்பட்டது. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் காலங்காலமாய் இருந்த - வரலாற்று வேர்கள் ஆழமாகப் பதிந்துள்ள - காழ்ப்புணர்ச்சிதான் இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குக் காரணமாய் அமைந்தது. காந்தி தன் வாழ்வின் பெரும்பகுதியை இந்து முஸ்லீம் நல்லிணக்கப் பாலத்தை அமைப்பதிலேயே கழித்தார். ஒரு சிறிய காலப்பகுதியில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாகவும் பொதுநலநோக்கோடும் வாழ்வதற்குரிய உணர்வுகளை உருவாக்கினார். ஆனால் அவர்களுக்கிடையே ஏற்பட்ட ஆழமான வேரோடிய காழ்ப்புணர்ச்சி நிரந்தரமான நட்புறவுடன் வாழ்வதற்கு விடவில்லை. மதவெறி மேலோங்கிக் காணப்பட்டு அதற்கு அடிமையானவர்கள்தான் அதிகமாக இருந்தனர். இதன் விளைவாக ஆங்கிலேயர்களும் இந்தியத் தலைவர்களும் இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு உடன்பட்டனர். பிரிவினையால் பலநூறு மக்கள் இரத்தம் சிந்த வேண்டியதாயிற்று. இருபக்கங்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் தம் தாய் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். இதைக் கண்ட காந்தி மனம் நொந்தார். தன் வாழ்நாள் முழுவதும் எதற்காகப் பாடுபட்டாரோ அந்த நோக்கம் நிறைவேறாது போயிற்றே என்று வருந்தினார். ஆத்மார்த்தமான தோல்வி அடைந்துவிட்டதை உணர்ந்து வருந்தினார். இதயத்தில் அடிவிழுந்தது போன்ற உணர்வு மேலிட்டு "என்னைச் சுற்றிலும் இருள்மயமாய் இருக்கிறது" என்று கூறினார். இந்த மதவெறிதான் 1948-ஜனவரி மாதத்தில் அவர் படுகொலை செய்யப்பட்டதற்குக் காரணமாய் அமைந்தது.

காந்தி மிகவும் கவர்ச்சிகரமான ஆளுமை கொண்டவர். போதிய உடல் வலுவற்றவராக இருந்தபோதிலும் ஒவ்வொரு நாளும் அதிகமான வேலையை அவரால் செய்ய முடிந்தது. முணுமுணுக்காமல் அவர் தம் உடலை வருத்தி வேலை செய்தார். நீண்ட தூரப் பயணம் மேற்கொண்டும், உணவும், உறக்கமும் சிறிதளவே பெற்று வாழ்ந்தார். எந்தவித அச்சமுமின்றி இருந்தார். அதுபோன்று தன்னைச் சார்ந்தவர்களையும் அச்சமின்றி வாழ



தண்டி யாத்திரையின் போது முழங்காலளவு துணி அணிந்த உடல் மெலிந்த காந்தி.





(மேலே) உடல் மெலிந்த ஆனால் சுறுசுறுப்பான காந்தி

(கீழே) நூல் நூற்கும்போது காந்தி.

வேண்டும் என்று கூறினார். சத்தியத்தின்பால் அவர்கொண்ட பற்றும் வாழ்வின்மீது அவர்கொண்ட தற்சார்பற்ற நோக்கும் ஆகிய அடிப்படையான அந்த இரண்டு குணங்கள்தான் அவரிடம் இருந்த அச்சமின்மைக்குக் காரணங்களாகும். தனக்கு என்ன நேரும என்பதைப்பற்றி அவர் எப்பொழுதுமே கவலைப்பட்டதில்லை. ஆன்மா என்றுமே அழியாதது. உடல் அழிந்துவிடுவது என்ற சமயக் கொள்கையை அவர் ஏற்று நம்பினார். இந்த நம்பிக்கை மிகச் சிறந்த ஆன்ம பலத்தை அவருக்குத் தந்தது. உடலுக்கேற்படும் ஊறுகளுக்கோ, சிறைவாசம் செய்யவோ, உயிர் துறக்கவோ அவர் என்றுமே அஞ்சியதில்லை. சொல்லப்போனால், அவரது ஆசிரம வாழ்க்கையை ஏற்பவர் பதினொரு உறுதிமொழிகளை எடுக்கவேண்டும். அச்சமின்மை என்பது அவற்றில் ஒன்றாகும். உடல் உழைப்பின் மேன்மை என்ற மற்றுமொரு முக்கிய உறுதிமொழியை, "உணவுக்கு உழைப்பு" என்ற டால்ஸ்டாய் கூற்றிலிருந்து பெற்றார். உடல் உழைப்பின் மேன்மையை மட்டும் வலியுறுத்தாது, சோம்பலின் இழிவினையும் எடுத்துக் காட்டினார்.

தனக்கென்று ஒருசில தேவைகளையே கொண்டவராகவும் ஏழை எளியவர்களுடன் முழுவதுமாக ஒன்றியவராகவும் அவர் வாழ்ந்தார். இந்தியாவில் படித்தவர்கள் ஏழைகளின்பால் காட்டிய அசட்டை மனப்பான்மையைக் கண்டு துணுக்குற்றுப்போனதாக அவர் ஒருமுறை தனது பேச்சின் போது கூறியுள்ளார். ஒருமுறை அவரது சீடரான மீரா பென் என்ற ஆங்கிலேயப் பெண்மணி, நாள்தோறும் சொல்லுவதற்குரிய சிறப்புப் பிரார்த்தனை ஒன்றைத் தனக்கு எழுதித் தருமாறு காந்தியைக் கேட்டுக்கொண்டார். "இறைவா. நீ பணிவின் உறைவிடமானவன்; ஏழைகளின் குடிசைகளிலும் தீண்டத்தகாதோரின் இல்லங்களிலும் நீ வசிக்கின்றாய். கங்கையும் யமுனையும் பெருக்கெடுத்தோடும் இந்தப் புனித பூமியில் உன்னைக் கண்டுகொள்ள எங்களுக்கு மனவலிமையைத் தந்தருள்" என்பதே காந்தி எழுதித் தந்த பிரார்த்தனை.

குழந்தைகளை நேசித்தார்; அவர்களுடன் விளையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அன்புக்குரியவர்; நல்ல நகைச்சுவையோடு உரையாடும் மகிழ்ச்சியான உள்ளம் கொண்டவர். மக்கள் நிரம்பியுள்ள அறையினுள் நுழைந்தவுடனே சூழ்நிலையைக் கலகலப்பாக ஆக்குவதற்காகத் தன்னையே கேலிப் பொருளாக ஆக்கி நல்ல நகைச்சுவையோடு பேசி மகிழ்ச்சியான சூழலை உண்டாக்குவார். தங்களின் சுயகௌரவம்தான் முக்கியம் என்று கருதும் தலைவர்களின்' உணர்ச்சிக்கு நேர் எதிர்மாறானதாக காந்தியின் மகிழ்ச்சியான மனப்போக்கு அமைந்தது.

தனக்கென்று மிகவும் எளிமையான ஒரு வாழ்க்கைத் தத்துவம் கொண்டவர் அவர் "நாம் தொடர்ந்து செயல்புரிந்துகொண்டே இருக்கவேண்டும், ஏனெனில் அதுதான் நமது கடமையாகும். ஆனால் நாம் செய்த செயலுக்குப் பலனை எதிர்பார்ப்பது

எப்பொழுதும் கூடாது." இதை "அனாசக்தியோகம்" அல்லது "பற்றற்ற தத்துவம்" என்று கூறினார். இதைத்தான் பகவத்கீதையின் மையக் கருத்தென்றும் நம்பினார் பகவத் கீதைக்கு அவர் எழுதிய விளக்கவுரையின் முன்னுரையில் தன்னுடைய தத்துவத்தை அவர் விளக்கியுள்ளார்.

மேலும், சில கொள்கைகளை அவர் மிகவும் ஆணித்தரமாகப் பின்பற்றினார். மனிதனிடம் உள்ள நல்ல குணத்தில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அவர் தனனுடன் உடன்பாடு கொள்ளாதவர்களையும் நம்பினார். உண்மையைத் தேடிப்போகும் ஒருவன் தன்னுடைய பகைவனிடமிருந்துமகூட நல்ல கருத்துக்கள் வருமாயின் அவற்றை ஏற்க வேண்டுமென்று நம்பினார். இவ்வகையான கண்ணியமும் நேர்மையும் அவரிடம பிறப்பிலேயே இருந்தன எளியவர்களையும் சமமாக மதித்து அவர் பேசினார். நோயவாய்ப்பட்டவர்களிடம் அன்பாக நடந்துகொண்டார். தன் அறிவுரையை நாடி வந்தவர்களுக்குப பலமுறை அவர் கடிதங்கள் எழுதியுள்ளார். அவர் இசையை விரும்பினார். பலமதங்களைச் சேர்ந்த அவரது பிரார்த்தனைகளில் நல்லிசையுடன் பொருந்திய பாடலகள பாடபபட்டன. தவறாமல் அவர் பிரார்த்தனை செய்வார். கூட்டுபபிரார்த்தனைகளில பங்கேறபார்.

காநதியின்பால பலர் ஈர்க்கப்பட்டனர். உணமையான மத உணர்வுக்கும தனித்துவ மேன்மைக்கும அவரின் ஆளுமை ஒரு சிறந்த நிகழகால எடுத்துககாட்டாகும். அவர் தன் குண மேன்மையால் இந்தியர்களையும். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும பலதரப்பட்ட மக்களையும அரவணைததுக் கொண்டார். தங்களின் சமய தியான வாழ்வின் மீதுள்ள பற்றுதலால் அவர்தம் முன்னாளைய நண்பர்களும் அவருடன் இணைநது கொண்டனர் பின்னர், பொருளாதார நிபுணர்கள், கலைஞர்கள், இசை வல்லுனர்கள, அறிவு ஜீவிகள். சமூக நல ஊழியர்கள் சமுதாயத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான பெண்கள ஆகியோர் அவருடன் சேர்ந்து கொண்டனர். அறிவு ஜீவியும் மக்களின் தலைவருமான நேரு, அரசியல் மேதகை சர்தார் படேல், கவிஞர்கள் சரோஜினி நாயுடு, தாகூர், செயல் நாட்டமுடைய சிந்தனையாளர் இராஜகோபலாச்சாரி, பொருளாதார நிபுணர் குமரபபா, பக்தியுள்ள கிருத்துவர் ஆணட்ரூஸ், தன்னலமற்ற ஊழியர் இராஜேந்திர பிரசாத் மற்றும் பலர் அவரது நண்பர்களாகவும் தொண்டர்களாகவும் திகழ்ந்தனர்.

மகாத்மா காந்தி ஒரு நல்ல வளம்மிக்க எழுத்தாளர். பல பத்திரிகைகளை ஆரம்பித்தும் அவற்றில் தொடர்ந்து எழுதியும் வந்தவர். தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது இந்தியன் ஒப்பியன், இந்தியாவிற்கு வந்தபோது யங் இந்தியா, நவஜீவன், அரிஜன், அரிஜனபந்து, அரிஜன் சேவக் போன்ற பத்திரிகைகளில் எழுதினார். தனக்கு வந்த கடிதங்கள் எல்லாவற்றுக்கும் அவர் பதில் எழுதினார். வந்த கடிதங்களில் மிஞ்சிய பக்கங்களில் இந்தப் பதில்களை

எழுதினார். இப்படி ஆயிரக்கணக்கான பதில்களை எழுதினார். மிகச் சிறந்ததான கடிதம் என்று அவர் கருதினால் தனக்கு முன்பின் தெரியாதவராக இருந்தாலும் அதைத் தம் பத்திரிக்கையில் வெளியிட்டுப் பொதுமக்களின் விவாதத்திற்கு விட்டுவிடுவார்.

ஆங்கிலம், இந்தி, குஜராத்தி ஆகிய மும்மொழிகளிலும் அவர் சரளமாக எழுதினார். அலங்கார வார்த்தைகளின்றி, சொல்லடுக்குகளின் எளிமையான நேரடிப் பொருள் தரும நல்ல உரைநடை வளம் கொண்டது அவரது நடை. உயர்கல்வி பெறாதோரும் புரிந்து கொள்ளும் வண்ணம் மிகவும் எளிமையான நடையில் எழுதும் வல்லமை கொண்டவர்.

காந்தியின் தொண்டர்கள் அவர் எழுதிய எழுத்துக்களையும் பேசிய பேச்சுக்களையும் பொருள்வாரியாகப் பிரித்துத் தொகுத்துள்ளனர். அப்புத்தகங்களில் சில: மாணவருக்கு, பெண்களுக்கு, கதர், மதுவிலக்கு மற்றும் பல. 'நான் கனவு காணும இந்தியா' என்பது இத்தகைய தொகுப்பு நூல்களில் மிகவும முக்கியமானது. அவரது பல நூல்களில் அவர் எழுதிய கடிதங்களைக் காணலாம். அவர் எழுதிய, பேசிய அனைத்தும் தற்போது 100 தொகுதிகளாகத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

அவர் எழுதிய நூல்களில் மிகவும் முக்கியமானது எது? இதற்குப் பலர் பலவகையான விடை கொடுக்கலாம. அவரது 'சத்திய சோதனை' என்ற சுயசரிதை மிகவும் முக்கியமான நூலாகும். ஆனால் அது 1922-ஆம் ஆண்டோடு முடிவடைந்து விடுகிறது. 1908-இல் எழுதிய இந்து சுயராஜ் என்பதுதான் அவர் முதன்முதலில் எழுதிய நூலாகும். இந்தியாவின் நிர்மாணப்பணிக்கு அவரின் அணுகுமுறையை அறிய விரும்பினால் இந்நூலைத்தான் நாம் படிக்க வேண்டும். 'தென்னாப்பிரிக்காவில் சத்யாக்கிரகத்தின் வரலாறு' என்பதும் அவரது முக்கியமான நூலாகும். 'செயலாக்கத் திட்டம்', என்ற அவரின் மிகச்சிறிய புத்தகமும் முக்கியமான நூல்களில் ஒன்றாகும். அதில் இந்திய மக்கள் வாழ்க்கையின் பல்வேறு கூறுகள் பேசப்படுகின்றன; மேலும் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகைகளும் கூறப்படுகின்றன. அதில் கதர், அடிப்படைக்கல்வி, சுற்றுப்புறச் சுகாதாரம், பெண் கல்வி, கால்நடை வளர்ப்பு, தொழுநோய் தடுப்பு, அரிஜன முன்னேற்றம், மத நல்லிணக்கம் மற்றும் பல்வேறுபட்ட பிரச்சனைகள் கூறப்படுகின்றன.

இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு இந்தச் சிறிய நூல் பலருக்கு ஒரு வரைதிட்டமாக விளங்குகிறது. கூறப்போனால், இந்த நூலில்தான் சிறு குழுக்களாக இருக்கிற மக்கள் ஒன்று கூடி தங்களின் பொருளாதார வசதிகளையும் ஆன்மீக பலத்தையும் வளர்த்துக்கொண்டு திருப்திகரமான வாழ்வை வாழ வேண்டும் என்ற குறிப்பு காணப்படுகிறது.

இந்திய சுதந்திரத்துக்காக இயங்கிய இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் மக்களை அவ்வியக்கத்தில் ஈடுபடுத்தியதன்

மூலமாக, அவர் தான் சாதிக்க வேண்டிய அனைத்தையும் சாதித்து விட்டார். அவருக்கு அரசாங்கம் என்ற ஒரு கருவியின் மீது ஆழ்ந்த ஐயம் இருந்தது. எனவேதான் மக்கள் தங்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணத் தாங்களே முயற்சி எடுக்க வேண்டும் என்ற கருத்தின் அடிபபடையில் கிராம சுய ஆட்சி என்பதனை மிகவும் ஆதரித்தார். மக்களை அவர்களின் தன்னார்வ அடிப்படையில் ஒன்று திரட்டிச் செயலில் ஈடுபடுத்தியதுதான் அவரின் வெற்றிக்குக் காரணமாகும். தன்னலமற்ற தத்துவத்திற்கும், தான் கொண்ட குறிக்கோளை அடைய தன் கையே தனக்குதவி என்று நம்புபவர்களுக்கும் காந்தியின் வாழக்கை ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பின்வரும் அத்தியாயங்களில் தன்னார்வச் செயல் திட்டங்களின் மூலமாய் நிகழ்ந்த மூன்று இயக்கங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. தன்னலமற்ற இந்தியனாக, ஒதுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் நலனுக்காக, மனிதாபிமானத்தோடு தன் வாழ் நாள்முழுவதும் அர்ப்பணித்த காந்தி காட்டிய பாதையிலே தன்னார்வு செயல் திட்டங்களை மேற்கொள்ளுபவர்களுக்கு, இவ்வியக்கங்கள் பற்றிய விளக்கம் ஒரு ஊக்கியாக அமையும்.

II

# 'சிப்கோ' — இமயமலைப் பகுதியில் போராட்டம்

*"நான் அமர்ந்திருந்த இடத்தில் இப்பொழுது அந்தத் தலைவன் புகை பிடிக்கவும், தூய்மையான காற்றைச் சுவாசிக்கவும் வேண்டி அமர விரும்பினான். ஆகவே, சாகுத்துணி ஒன்றை எடுத்துப் படியின் மீது விரித்துவிட்டு என்னை நோக்கி, "நீ இங்கே உட்கார்" என்றான். நான் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு அவமானப்படுத்தப்பட்டேன். அச்சத்துடன் நடுங்கிக் கொண்டே அவனை நோக்கி, "எனனை உன் காலடியில் அமரச சொல்லியிருக்கலாம். நான் அவ்வாறு செய்யமாட்டேன்". என்றேன. நான் இவ்வாறு தட்டுத் தடுமாறி சொல்லிக் கொண்டிருக்கும்போது அவன் என்னை நோக்கி வந்து, காது பிய்ந்து போகும்படி அறைய ஆரம்பித்தான். எனது கையைப்பிடித்து கீழே இழுத்துத் தள்ள முயற்சித்தான். இரயில் பெட்டியின் பித்தளைக் கம்பிகளை இறுகப் பிடித்துக் கொண்டேன். என் கை மணிக்கட்டு எலும்பு முறிந்துவிடுமளவுக்கு இறுகப் பிடித்துக் கொள்வதென்று உறுதியாக இருந்தேன்"*

*— மகாத்மா காந்தியின் சுயசரிதையிலிருந்து*

'சிப்கோ' என்ற இந்தி மொழிச் சொல்லுக்கு "உறுதியாகப பற்றிக் கொள்ளுதல் அல்லது தழுவிக் கொள்ளுதல்" என்று பொருள். சில மனிதர்கள் தங்களுடைய கோடரிகளோடு மரங்களை வெட்ட வந்தபோது வட இந்தியாவின் இமயமலைப் பகுதியில் வாழும் கிராமத்துப் பெண்கள் மரங்களைத் தழுவிக்கொண்டு அவர்களை நோக்கி, "மரங்களை வெட்ட உங்களை அனுமதிக்க மாட்டோம். முதலில் எங்களை வெட்டுங்கள்; பிறகு மரங்களை வெட்டிக் கொள்ளுங்கள்" என்று கூறினர். இப்படிப்பட்ட செயலால் இவ்வியக்கம் 'சிப்கோ' என்று பெயர் பெற்றது. இந்தப் பெண்கள் உயிரையே இழக்கவும் தயாராக இருந்தனர். தங்கள் கிராமங்களில் மரங்களை வெட்டி வீழ்த்த அனுமதிக்கவில்லை. பொதுவாக், அறியாமை நிறைந்தவர்களாகவும் சக்தியற்றவர்களாகவும் இருப்பர்

என்றும் பொது வாழ்வில எவ்வித பணியும ஆற்ற இயலாதவர் என்றும் கருதப்பட்ட இப்பெண்கள் சிப்கோ இயக்கத்தில் ஈடுபட்டனர் இப்படிப்பட்ட துணிச்சலும உறுதியும் கொண்ட, ஆனால் படிப்பறியாத, ஏழை கிராமத்துப் பெண்களின் செயலால்தான் சிப்கோ இயக்கம் தோன்றியது.

வடபகுதியில் காஷ்மீரை ஒட்டி கிழக்கே ஐந்தாயிரம் கிலோ மீட்டர்கள் வரை இமயமலை பரந்து விரிந்திருக்கும இமாலயா என்ற வடமொழிச் சொல்லுக்கு "என்றும பனியுறையும பகுதி" என்று பொருள் இந்தியாவின் எந்த மூலையிலிருக்கும் குழந்தையும இமாலய மலைத் தொடரைப் பற்றிக் கேள்விபபட்டிருக்கும். இம்மலைத்தொடர் கம்பீரமாக இருக்கும் இதைப் புகழ்ந்துரைக்கும் பாடல், நாட்டியம், சிறுகதைகள், நாட்டுப்புறக் கதைகள் ஆகியன ஏராளமாக உள்ளன. வற்றாத நதிகளின் பிறபபிடமாக மட்டுமின்றி வீரசாகசத்தையும இயற்கையின் எளிமையையும் மகிழ்ச்சியையும் வேண்டுவோர்க்கு இமயமலைத்தொடர் ஒரு சொர்க்கமாகும். பல இலட்சக்கணக்கான இந்துக்கள், இந்த ஆறுகளை மிகவும புனிதமாகக் கருதுகின்றனர். இமமலைத் தொடர்கள பனி மூடிய சிகரங்களை உடையதாகவும், அவற்றில் சில உலகிலேயே மிகவும் உயரமானதாகவும உளளன. இமயமலைப பகுதியில் குறிபபாக கீழ மததியப பகுதியில அடர்ந்த காடுகள உள்ளன மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ளதுபோன்ற பல்வேறு வகைப்பட்ட மரங்கள இங்கு குறைவாக இருபபினும இபபகுதியில காடுகள் அடர்ந்து காணப்படுகின்றன.

இம்மலைகளில் வாழும் அனைவரும மிகவும எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும, உடலுறுதி கொணடவராகவும கடுமையாக உழைபபவர்களாகவும உள்ளனர். பல நூற்றாண்டுகளாக இயற்கையோடு இயைந்த வாழவினை இமமககள மேற்கொண்டு வாழ்கின்றனர். பல்வேறுபட்ட மலைவாழ் பண்பாடுகளுக்கு இபபகுதி ஓர் உறைவிடமாகத் திகழ்கிறது. பல ஆண்டுகளாக இப் பகுதிகளில் முன்னேற்றம் அல்லது வளர்ச்சி என்பது இல்லாமலேயே இருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில இந்தியாவிற்கு முதன்முதலில இரயில் வந்தது. இரயில்பாதைகள அமைக்க மரக்கட்டைகள் பெருமளவில் தேவைபபட்டன. பாகீரதி பள்ளத்தாக்கில்தான் முதன்முதலில் திரு வில்சன் என்ற ஆங்கிலேயர் மரங்களை வெட்ட ஆரம்பித்தார் வெட்டிய மரங்களை ஹரித்துவாரை நோக்கி ஆற்றில் மிதக்கவிட்டார் இம்மரக்கட்டைகள் உறுதி வாய்ந்ததாகவும் சுமாராக ஏழடி நீளமும் ஒரு அடி அகலமும் நான்கு அங்குல கனமும் பொருந்தியதாகவும் இருந்தன. இரயில் பாதைகள் அமைக்கவும் இரயில் பெட்டிகள் செய்யவும் இரயில்வே அதிகாரிகள் இக்காடுகளை நம்பலாயினர் எங்கெங்கு மரக்கட்டைகளை ஆறுகளில் மிதக்கவிட முடியவில்லையோ அங்கிருந்தெல்லாம் வெட்டிய மரங்களைக் கொண்டுவரச்

சாலைகளை அமைத்தனர். இவ்வாறாக இக்காட்டுச் செல்வம் அழிவுக்கு இலக்காகிறது. இதன் விளைவாக மலைப பகுதியின் இயற்கைக்கும் தட்பவெட்ப சூழ்நிலைக்கும் மிகுந்த ஊறு விளைந்தது.

இவ்வாறு ஆரம்பிதத அழிசெயல் மகவும் உக்கிரமாகப பரவத் தொடங்கியது. இமயமலைத்தொடரின் சிறுசிறு பகுதிகளிலிருந்து இப்போது அதன் உயரமான பகுதிகள் வரை இது பரவியது. காட்டின் உட்பகுதியிலும சாலைகள மிகவும் அகலமாகப் போடபபட்டன. வெகு எளிதாகக் காட்டினுள் செல்ல வாயபபுகள ஏற்பட்டன. மரக்கட்டைகளுக்கு கிராக்கி அதிகமாயிற்று. சமவெளிகளில் வாழந்த மக்களுக்கு கட்டில் போன்றவை செயய மரம் தேவைப்பட்டது; சில முதல்தரமான மரங்கள வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இமாலயத்தின கிழ்ப்பகுதியில் வளர்நதிருந்த மரங்களை முதலில் வெட்ட ஆரம்பித்து, பின் படிபபடியாக வடக்கு நோக்கிச் சென்று மரங்களை வெட்டினர்.

ஆனால், இமயமலைக் காடுகளில் பரமபரையாக வாழந்த மலைவாழ் மக்களுக்கும பழங்குடிகளுக்கும் அந்தக காடுகளின் மீதும், அக்காட்டு விளை பொருள்களின் மீதும் உரிமை உண்டு என்பதை பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அரசாங்கம் அறிந்தது. அக்காடுகளிலிருந்து பழ வகைகள், தீவனம், தழை உரம், நார்ப்பொருள, விறகு ஆகியன கிடைத்தன. போதுமான மழைபொழியவும், மலைப் பிரதேச விவசாயம செய்யவும் அக்காடுகள் பெரிதும் உதவின. இமயமலை ஆறுகளும், நீர் ஊற்றுக்களும் என்றுமே வறறாதவைகளாக இருந்தன. மரங்கள் மண் வளத்தைக் காத்தன, காற்றைத் தூயமைப்படுத்தின.

காட்டு வளம் நாட்டின் வருவாய்க்கு ஒரு மூலாதாரமாக இருக்க வேண்டுமென்று அன்றைய ஆங்கில அரசாங்கம முடிவு செய்தது. இது காட்டு வளத்தை வணிக ரீதியாகச் சுரண்டுவதற்கு வழி கோலியது. ஒருசில மரவகைகளை வெட்டுவதற்கான உரிமம ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர்கள மரங்களை வெட்டிக்கொண்டார்களே ஒழிய அதற்குப் பதிலாக மீண்டும் புதிய மரக் கன்றுகளை நடவில்லை. எனவே மரங்களின்றிக் காடு கட்டாந்தரையாக வெறிச்சோடிக் கிடந்தது.

உரிமங்கள் பெறுவதோடும் மரங்களை வெட்டுவதோடும் மட்டும் இது நிற்கவில்லை. மர வியாபாரத்தில் மிகுந்த பணம் சம்பாதிக்க முடியும் என்று அறிந்ததால் அநேக ஒப்பந்தக்காரர்கள் ஐந்து ஏக்கர் நிலத்தில் வளர்ந்துள்ள மரங்களை வெட்டுவதற்கான உரிமத்தைப் பெற்றுக்கொண்டு, அதைப்போல் இரண்டு பங்கு நிலத்தில் வளர்ந்துள்ள மரங்களை சட்டத்திற்குப் புறம்பாக வெட்டி அழித்தனர்.

நகரங்களிலும் சமவெளிகளிலும் வாழ்கின்ற மக்களுக்குப் பல்வேறு தேவைகளுக்காக மரம் தேவைப்பட்டது. பெருகி வரும் இந்திய மக்கள் தொகை மரத்தின் தேவையை மேலும் அதிகரித்து.

காடுகளிலுள்ள மரங்களை வெட்டும் தொழில் சில சமயம் சட்ட ரீதியாகவும், பலமுறை சட்டத்திற்குப் புறம்பாகவும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்தியாவிலுள்ள அனைத்துக்காடுகளிலும் மரம் வெட்டும் தொழில் நடந்துகொண்டு இருந்தது. இன்றுமகூட ஆபத்தான இந்நிலை தொடர்கிறது.

ஆதாயம் மிக்க இந்த வணிகத்தின் பெரும் பகுதி வருவாய், செல்வாக்குமிக்க செல்வந்தர்களையே போய்ச்சேரும். மரங்களை வெட்டக் கூலியாகக் கொடுக்கும் குறைந்த அளவுப பணம மட்டுமே மலைவாழ் மக்களுக்குப போய்ச் சேரும். மர வியாபாரிகள, மர ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரின் கொடூரமான கோடரிக்குக் கம்பீரமான தேக்கு, பைன், ஃபர் போன்ற பலவகை மரங்கள் பலியாயின

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலமாகவே காடுகள் மீதும் காட்டு வளத்தின் மீதும் தங்களுக்குள்ள பரம்பரையான உரிமையை மலைவாழ மககள் நன்கறிந்திருந்தனர். ஆங்கிலேய அரசாங்கம் வருவாயககாகவும இரயில் தண்டவாளங்கள் அமைக்கும் கட்டுமானப் பணிககாகவும காட்டு வளத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்தபோதே இம்மலைவாழ் மக்களின் உரிமை பாதிக்கப்பட்டது. காட்டு வளத்தைப் பயன்படுத்தவோ அல்லது காட்டில் விளைந்த விளைச்சலை எடுததுச் செலலவோ மலைவாழ் மக்கள் சட்டத்தால தடை செயயப்பட்டனர் ஆனால் அதே நேரத்தில் வெளியில் வாழும ஒப்பந்தக்காரர்கள காட்டுவளத்தைக் கொள்ளையடித்தனர்.

இந்நிலை சிறிது காலத்தில் மிகுந்த எதிர் விளைவுகளை ஏறபடுத்தியது. 1905-லேயே கர்வால் குமாவோன் பகுதியில் வாழ்ந்த மக்கள அப்பகுதிக் காடுகளின் மீது அரசாங்கம் விதித்த கட்டுப்பாட்டை எதிர்த்தனர். ஆயினும 1930-ல்தான டெஹரி கர்வால் மாவட்டத்து மக்கள் பெரும் திரளாகக் கூடி அமைதியான முறையில்-சத்தியாகிரகம் அனுசரித்து-மரங்களை வெட்டுவதைத் தடுத்தனர். அன்றைய மலைவாழ் மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பானது பலவகைகளில் இந்திய விடுதலை இயக்கத்தில் முடிவுற்றது. கோவிந்த வல்லப் பந்த் என்ற மலைவாழ மக்களின் தலைவர், அவர்களின் காட்டுவள உரிமைகளுக்காகப் போராடினார். பின்னர், அவரே இந்திய நாட்டு விடுதலை இயக்க வீரராகத் தலையெடுத்து இவ்வியக்கத்தில் மிகவும முக்கியமான பங்கு வகித்தார். அஹிம்சை முறையில் எதிர்ப்பதென்பது மக்கள் மிகவும் விரும்பிய ஒரு செயலாகும். இது இன்றையச் சூழ்நிலைக்கும் பொருத்தமானதாகும். இந்த மலைவாழ் மக்கள தங்கள் சுற்றுப்புறச் சூழலை அஹிம்சாவழியில் காக்கும பொருட்டுத் திட்டமிட்ட முறையில் அமைப்பாக நின்று செயல்பட வந்ததன் மூலமாய்த்தான் சிப்கோ இயக்கம் தனது ஆதார வலிமையைப் பெற்றது என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியும். ஆனால் சிப்கோ இயக்கம் "மரங்களை வெட்டாதே" என்ற நோக்கத்தினின்றும் வளர்ந்து

மிகவும் பரந்துபட்ட அளவில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. மலைவாழ் மக்களின் உரிமையாகிய இயற்கைவளத்தை மற்றவர்கள் சுரண்டக்கூடாது என்ற நோக்கத்தோடு, கூட இன்று நாட்டை அச்சுறுத்திக் கொண்டு வருகிற சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டை எதிர்த்துத் தடுக்க வேண்டுமென்ற ஒரு விரிவான நோக்கத்தினையும் இச்சிப்கோ இயக்கம் இன்று பெற்றுவிட்டது.

அன்றைய ஆங்கில அரசாங்கமும், பின்னர் வந்த இந்திய அரசாங்கமும் அறிவியல் அடிப்படைகொண்ட கானகக் கொள்கையை உருவாக்க வேண்டுமென்று முயற்சித்தது உண்மையே. ஒருமரம் வெட்டப்பட்டால் அதற்குப் பதிலாக ஒரு மரக்கன்று நடப்படவேண்டுமென்ற செயல்திட்டமும் வகுக்கப்பட்டது ஆனால் அறிவியல் பூர்வமான அப்படிப்பட்ட திட்டம் கொள்கையளவில் மட்டும் இருந்தது. இன்றளவும் எழுத்தளவில் மட்டும் தொடர்ந்து அது இருந்து வருகிறது ஆதாயத்திற்கும வருவாய்க்கும் மரங்கள் தொடர்ந்து வெட்டப்பட்டு வருகின்றன. பொதுவாகக் காட்டிலே பலவகைப்பட்ட மரங்கள வளர்கின்றன. இயற்கை தனக்கேயுரிய முறையில் தாவர இனவகைகளில் ஒரு சமநிலையை ஏற்படுத்தி விடுகின்றது. ஆனால், மரக்கன்றுகளை நடுவது என்பது, பெரும்பாலும் அரசாங்கத்தால் நடப்படுகின்றபோது வணிக முறையிலான மரங்களே வளர்க்கப்படுகின்றன. இது ஒரே இன மரங்கள் மட்டும் வளர ஏதுவாகும். இதனை ஒரே வகையான இனங்களின் பெருக்கம் என்கிறோம். காட்டு வளத்தின் இயற்கைத் தத்துவத்திற்கு மிகவும் உயிர்நாடியாக உள்ள உயிரியல் வேறுபாடு என்ற பன்முகப் பண்பினை இது அழித்து விடும். மேலும், காடுகளின் சீரழிவிற்கு இது வழிவகுத்து விடும்.

உத்திரப் பிரதேசத்தின் மலைப்பகுதி மாவட்டங்கள் சிலவற்றின் காடுகளைக் காக்கும் பொருட்டு தன்னார்வ முயற்சியுள்ள மக்களைக் கொண்ட ஒரு அமைப்பாகிய சிப்கோ இயக்கம் எழுபதுகளில் ஆரம்பிக்கப்பட்டது. உத்திரப்பிரதேசத்திலுள்ள அனைத்து மலைப்பகுதி மாவட்டங்களும் ஒன்றிணைந்த வடக்குப் பகுதி "உத்திரகண்ட்" என்று அழைக்கப்படும். இது கர்வால், குமவோன் என்ற இரண்டு தனித்தனிப் பகுதிகளைக் கொண்டது. இங்கு வாழும் ஆண்கள் நல்ல உடலுறுதிகொண்ட உழைப்பாளிகள். இவர்களில் பலர் இராணுவத்தில் பணி புரிபவர்களாகவும் போர்க்களத்தில் மிகச்சிறந்த வீரத்தோடு போரிடுபவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு இளைஞனும் இராணுவ உடை அணிந்து கொள்வதில் பெருமிதம் கொள்பவன். முதுகை வளைத்து விவசாயத்தைச் செய்ய யாரும் விரும்புவதில்லை. இதனால்தான், இப்பகுதிப் பெண்கள் தங்கள் சக்திக்கு அதிகமாக வேலை செய்கின்றனர். பயிரிடுவது, குழந்தைகளைப் பராமரிப்பது, எரிபொருள் சேகரிப்பது, தொலை தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவது ஆகிய பணிகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர். அப்படியிருந்தும் இப்பெண்களின் நிலை மற்ற இடங்களிலுள்ள பெண்களின் நிலையைவிட எவ்விதத்திலும் உயர்ந்ததாக இல்லை.

காடுகள் செழுமையாக இருந்தபோதும் மரங்கள் மிகுதியாக இருந்தபோதும் பெண்கள் தங்களின் ஆடுமாடுகளுக்குத் தீவனம் சேகரிக்கவும் சமையலுக்கு எரிபொருள் சேகரிக்கவும், கிராமங்களின் அருகில் தீ மூட்டவும் காட்டுவளத்தைப் பயன்படுத்தி வாழ்ந்தனர். மரங்களை வெட்டியதாலும், அதன் விளைவாய் காடுகள் அழிந்ததாலும் எரிபொருள் அரிதாகியது. தீவனத்திற்குப் புல் கிடைக்காமல் போனது. ஒரு சிறிதளவே எரிபொருளும் தீவனமும் சேகரிக்க வேண்டுமென்றாலும் காட்டோரம் வாழ்கின்ற இந்தப் பெண்கள் நெடுந்தொலைவு நடந்து சென்று நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தை இது ஏற்படுத்தியது. ஒரு தலைச்சுமை விறகைச் சேகரித்துக் கொண்டு வருவது என்பது அலுப்பும் அச்சம் தருகிற செயலாகப் போனது.

காடுகளில் மரங்கள் அழிக்கப்பட்டால் பெருக்கெடுத்தோடும் நீர் ஊற்றுகள் வற்றிப் போகுமென்பதும் விவசாயம் குறைந்துபோகும் என்பதும் அனைவரும் அறிந்த ஓர் உண்மை. இதன் விளைவாகப் பெண்களின் வாழ்க்கை முடிவற்றதொரு கடும் உழைப்பாக மாறுகின்றது. பொதுவாக, மக்களின் வாழ்க்கை ஏழ்மை நிலை அடைகின்றது. மலைப் பகுதிகளிலும் சமவெளிகளிலும் உள்ள மரங்களின் மேல்பட்டைகளை நீக்குவதால் ஏற்படும் பாதிப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது நமக்குச் சரியாகத் தெரியாமலிருக்கலாம்; ஆனால், பாதிப்பு ஏற்படுகிறது என்பது நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும்.

வேர்களால் மரங்கள் மண்ணை இறுகப் பற்றிக் கொள்ளுகின்றன. மரங்கள் மட்டுமல்ல, புல்லும் புதர்களும் கூட அவ்வாறே செய்கின்றன. இந்த வேர்கள் மண்ணிலே ஊடுருவிச்செல்கின்றன. இதனால் தண்ணீரை ஈர்க்கின்ற ஆற்றல் இந்த மண்ணுக்கு ஏற்படுகிறது. இவ்வகைப்பட்ட மண் தன் மீது விழுகின்ற பெரும்பகுதி நீரை எளிதாக ஈர்த்துக்கொள்ளுகிறது. மழை மேகம் தன் ஈரப்பசையை வெளிச்செலுத்துவதற்கு மரங்கள் ஊக்குவிக்கின்றன. மரங்களில்லை என்றால் பருவ மழை பொய்த்து விடுகிறது. மேக மூட்டம் மழை பொழியாது மறைந்து விடுகிறது. இதன் விளைவாக வறட்சி ஏற்படுகிறது. நல்ல விளைச்சல் இல்லாமல் போகிறது. ஆகவே உணவும் இல்லை, நீரும் இல்லை. மரங்களை அழிப்பதால் கதிரவனின் கடும்வெயில் பூமி மீது நேரடியாகப்படுகிறது. பூமி கடினமாகி, உலர்ந்துபோய் தண்ணீரைச் சேமித்து வைக்கும் ஆற்றலை இழந்து விடுகிறது. மழை நீர் மண்ணிலே விழுகின்றபோது, அதன் வேகத்தைக் குறைக்க, அடர்ந்த மரங்களின் நெருங்கிய கிளைகள் இல்லையாதலால், பூமியை மழையின் வேகம் நேரடியாகத் தாக்குகிறது. தண்ணீரை உள்ளிழுக்கும் ஈர்ப்புச்சக்தி நிலத்திற்கு இல்லாமல் போய்விடுவதால், பெய்த மழை நீரும் வெறுமனே ஓடி விடுகிறது. நிலத்தில் எவ்வித மரங்களும் இல்லையாதலால் மழைநீர் தடுக்கப்படாமல் உருண்டு ஓடி நிலத்தின் மேற்பகுதியிலுள்ள வளமான மண்ணை அரித்து விடுகின்றது. இதனால் கற்கள் வெளிப் பிதுங்கித் தெரிய

ஆரம்பிக்கின்றன. இதுபோலத்தான் பெருமளவு மண், மழைநீரால் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றுப்படுகைகள் வண்டல் மண்ணினால் சூழப்படுகின்றன. இப்படி ஆறுகளில் அடித்து வந்து குவிந்த வண்டல் மண் ஆற்றின் பரப்பைக் குறுக்கி விடுவதால் ஒவ்வொரு வருடமும பெருமழை பெய்யும்போது ஆற்றின் கரைகள் உடைந்து வெள்ளம் ஏற்பட ஏதுவாகிறது. சுருங்கக் கூறின், இமயமலைப் பகுதியிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டதுதான், திரும்பத்திரும்ப ஏற்படும வறட்சி, பேரழிவை ஏற்படுத்தும வெள்ளம், மலைபபகுதிகளிலும சமவெளிப்பகுதிகளிலும் உண்டாகின்ற விளைச்சலின் குறைவு ஆகியவற்றிற்கு முக்கிய காரணமாகும. உத்திரப் பிரதேசம், பீகார், அஸ்ஸாம், நமது அணடைநாடான கிழக்கு வங்காளம் ஆகிய இடங்களில் இந்நிலையைம உணரப்படுகிறது

கங்கை நதி, ஹரித்துவாரில் இருந்து சமவெளியை நோக்கிக் கீழிறங்கி வரும்போது ஓடும் நீரின் அளவு அறிவியல் ரீதியாகக் கணிக்கப்பட்டுள்ளது. மழைக் காலங்களில் இறங்கி வரும தண்ணீரின் வேகம மழையற்ற காலங்களில் வரும தணணீரின வேகத்தைவிட ஐமபது மடங்கு அதிகமாகி உளளதை இக்கணிபபு காட்டுகிறது. மழைக்காலத்திலும பனி உருகும பருவத்திலும ஏராளமான நீர் கடும் வேகத்துடன் பாய்ந்தோடி விடுவதால இப்பருவங்கள முடிந்தபிறகு ஆறுகள நீரோடைகளாக ஆகின்றன. இது அபாயத்தைக் குறிக்கும் தனமையது. வெள்ளத்தாலோ அல்லது வறட்சியாலோ பாதிக்கபபடாத சமவெளிப் பகுதி எந்த ஒரு வருடமும இல்லை என்றே கூறலாம. மக்களுக்கு இது துன்பததைத் தரக்கூடியதாக உள்ளது. பயிர்கள சேதம அடைகின்றன; கிராமஙகள வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றன. கால்நடைகள் மடிகின்றன.

காடுகளின அழிவு நிலச்சரிவை ஏற்படுத்தும். அதனால் கிராமங்கள் அழிக்கப்பட்டுப் பெருமளவு விவசாயப பண்ணை நிலங்கள் அழிவுக்குள்ளாகும். நிலத்திலுள்ள மரங்கள, பயிர்கள் முதலியன அழிக்கப்பட்டால் ஆறங்குல ஆழமே உள்ள பூமியின் வளமான மேல்மண் அரிக்கப்பட்டு அடித்துக் கொண்டுபோய் விடும். கற்கள் பிதுங்கி வெளித்தெரியும். பூமி வளமற்றதாகிவிடும் விரைவாய் கற்களும் மண்ணும் பிடிபபின்றி சரிந்துபோக, பருவகாலங்களில் நிலச்சரிவு ஏற்படும. இவ்வகை நிலச்சரிவுகள அடிக்கடி பாதைகளை அடைத்துவிடும். சில நேரங்களில் ஓடும் ஆற்றின் பாதையை அடைத்து அருகிலுள்ள கிராமத்தை வெள்ளத்தில் ஆழ்த்தி விடும். நிலம், தன் வளத்தை நாளடைவில் இழந்து விடும். இது போகப் போக அபாயகரமான அளவை எட்டிவிடும். இத்தகைய சேதத்தை நிவர்த்தி செய்ய முயற்சி எடுக்கின்றபோது, கட்டுப்படுத்தமுடியாமல் சேதம் அளவுக்கு அதிகமாகி விடும். நம் முயற்சி காலம கடந்துபோய் விடும்.

ஒரு நூற்றாண்டுக் காலமாக இமயமலைப் பகுதிகளில் கொடுமையாக காடுகள் அழிப்பு நடந்துகொண்டே இருக்கிறது.

இப்பேரழிவு ஏற்படுத்தும் பாதிப்பைப் பல பகுதிகளில் காணலாம். ஸ்ரீநகரிலுள்ள தால் ஏரி வண்டல்மண் படிந்தது. இமாசல பிரதேசத்தில் ஒரு காலத்தில் அழகாக இருந்த காஜியார் ஏரி தற்போது அழுக்குப் படிந்து கிடக்கிறது. லீ கார்பூசியரால் அழகாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்ட சண்டிகர் நகரில் தண்ணீர் மிகவும் அரிதாகியுள்ளது. ஏனெனில் இதன் மேற்பகுதியிலுள்ள மரங்களனைத்தும் வெட்டப்பட்டன. பல மாவட்டங்களில் சமவெளிகளில் நடைபெற்றுவந்த விவசாயம் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடிக்கடி பெருவெள்ளம் ஓடி மிகுந்த சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. எரிபொருளுக்காக மரங்களை வெட்டி அழிக்கும் செயல் தொடர்ந்து இந்தியா முழுதும் நடந்து வருகிறது.

எரிபொருளுக்காகவும், மரவேலைகளுக்காகவும் இமாலய பகுதிகளில் மரங்கள் வெட்டி அழிக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. இதை விட மிகவும் வருந்தத்தக்க செய்தி யாதெனில் 'சிர்' மரங்களின் பட்டைகள் மிகவும் ஆழமாக வெட்டப்பட்டு அதிலிருந்து ரப்பர்பால் போல ஒருவகை பிசின் எடுப்பதால் சிர் மரங்கள் அழிவுக்குள்ளாயின. இது அத்தோடு நிற்கவில்லை. சுண்ணாம்பு தோண்டி எடுப்பதற்காக மிகவும் பரந்த அளவில் மலைப் பகுதிகள் சுரங்கங்களாக வெட்டப்பட்டன. பிசின் எடுப்பதற்காக வெட்டப்பட்ட சிர் மரங்கள் கடுமையான காற்றால் விழுந்துவிட்டன. சுண்ணாம்பு எடுப்பதற்காக தோண்டப்பட்ட பகுதிகளிலுள்ள மண், தண்ணீரைத் தேக்கி வைக்கும் சக்தியை இழந்துவிட்டது. இச்சுண்ணாம்பு மண்ணைப் பொரு பொரு என்று ஆக்கியதால் மழைநீரைப் பூமி ஈர்த்துக் கொண்டது. சுண்ணாம்புச் சுரங்கங்கள் மலைப் பகுதிகளில் வடுக்களை ஏற்படுத்தி வற்றா ஊற்றுக்களை வற்றச் செய்து வறண்ட பகுதிகளாக்கிவிட்டன. டேராடூன் மாவட்டத்தில் உள்ள முசௌரி என்ற மலைவாழ் பகுதி இதற்கொரு எடுத்துக்காட்டாகும். சுண்ணாம்புச் சுரங்க ஒப்பந்தக்காரர்களின் செயல்களால் வருடம் முழுவதும் இப்பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை நிலவி வருகிறது. சுண்ணாம்புச் சுரங்கங்கள் தோண்ட அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. உரிமம் தரக்கூடாது என்று பலவருடங்களாக சுற்றுப்புறச் சூழல் வல்லுநர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அவர்களின் முயற்சி தோல்வி அடைந்தது. அண்மையில் உச்சநீதி மன்றம் அளித்த ஒரு தீர்ப்பினாலும் அரசுத் துறைகள் சிலவற்றின் விழிப்புணர்வினாலும் சுண்ணாம்புச் சுரங்கங்கள் தோண்டுகின்ற அபாயகரமான செயலை நிறுத்த முடிந்தது.

மரங்கள் அழிக்கப்பட்டன; ஊற்றுக்கள் தண்ணீர் இல்லாது வறண்டுபோயின; வாழ்வதென்பதே அச்சத்திற்குள்ளாகியது. இந்நிலையை உணர்ந்த பெண்கள் ஒருமித்த கருத்துள்ள பிறரோடு ஒன்று சேர்ந்தனர். இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். மாவட்ட எல்லைகளைக் கடந்து, நீண்ட நாட்கள் இதற்கென உழைக்க வேண்டுமென்ற உறுதி பூண்ட அனைவரும் ஒன்றிணைந்தனர்.

மரங்களை வெட்டி வீழத்துவதை நிறுத்த வேண்டும். புதிய மரக்கன்றுகளை நடவேண்டும். இதற்கு ஒரு பெரும் போராட்டமே முதலில் தேவைப்பட்டது. பின்னர் பொறுமையான கடின உழைப்பு வேண்டியிருந்தது. சுருங்கக் கூறின், இது ஒரு காந்திய முயற்சியேயாகும்.

மகாத்மா காந்தியின் தொண்டரான மீரா பென் என்ற ஒரு ஆங்கிலேய மாது ரிஷிகேஷின் அடிவாரத்தில் தன்னுடைய ஆசிரமத்தை நிறுவினார். அவர்தான் முதன்முதலில், காடுகளை அழித்தலே பேரழிவை ஏற்படுத்தும் வெள்ளத்திற்குக் காரணமாகும் என்று உணர்ந்தார். 1945-ஆம் வருடத்திலேயே பைன் மரங்களை வளர்ப்பது குறித்தும் ஓக் மரங்களை அழிப்பது குறித்தும் எச்சரிக்கை விடுத்தார். காந்தியின் மற்றுமொரு ஆங்கிலேயத் தொண்டராகிய சரளா பென், கௌசாலி என்ற இடத்தில் தன் ஆசிரமத்தை ஏற்படுத்தி மலைவாழ் பெண்களுக்கும், சமூக சேவகிகளுக்கும், நிர்மாண ஊழியர்களுக்கும உரிய பயிற்சியைக் கொடுத்தார். மலைப் பகுதியில் அவரது ஆசிரமமதான் சர்வோதய இயக்கத்தின் மையமாக விளங்கியது அவரே, சர்வோதய ஊழியர்களைக் கொண்ட சகோதர மனப்பான்மைக் குழு ஒன்றினை நிறுவினார் இந்த நிறுவனம்தான் முதன்முதலில் குடிப்பழக்கத்தை எதிர்த்து. ஐந்து மலைபபகுதி மாவட்டங்களில் மதுக்கடைகளை மூடும்வண்ணம் செய்தது. இந்த இயக்கத்தில் பெண்களதான் முன்னணியில் நின்று போராட்டம நடத்தினர்.

1971-ஆம ஆண்டில் மதுவிலக்கு இயக்கம் வெற்றிகண்ட பின். காடுகளைக் காக்கும் பொருட்டு இந்தச் சமூக ஒற்றுமையுணர்வுக் குழு ஈடுபட்டது. 1968-ஆம ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் திலாரி என்ற இடத்தில் கிராமத்து மக்கள் அனைவரும ஒன்று திரண்டு ஒரு உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். அதனபடி மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள நட்புறவை மீண்டும் நிலைநிறுத்தும் நோக்கத்தோடு எடுத்துக்கொண்ட உறுதிமொழிதான் காடுகளைக் காக்கும் பொருட்டு ஏற்பட்ட இந்த சிபகோ இயக்கத்திற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது. சமோலி மாவட்டம கோபீஸ்வரில் வாழும் திரு. சாந்தி பிரசாத் பட், டெஹ்ரி மாவட்டம கனசாலிக்கு அருகிலுள்ள சில்யாரா என்ற கிராமத்தில் வாழும் திரு. சுந்தர்லால் பஹுகுணா ஆகிய இவ்விரண்டு புகழ்பெற்றவர்கள்தான் சிப்கோ இயக்கத்தினைத் தலைமையேற்று நடத்தினர். இவ்விருவரும், இவர்களின் கூட்டாளிகளும் 1960களில் தொடர்ந்து மலைப்பகுதி, கிராமங்களுக்குச் சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியும் பொதுமக்கள் கருத்தை உருவாக்கியும் சேவை செய்து வந்தனர். கால்நடையாகவே உத்திரகண்ட் பகுதி முழுவதும் பயணம் மேற்கொண்டனர். இந்தப் பகுதி எட்டு மாவட்டங்களடங்கிய இரண்டு சிறுபகுதிளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பித்தோராகார், நைனிடால், அல்மோரா ஆகியவை சேர்ந்த பகுதி குமவோன் என்று அழைக்கப்படுகிறது. டெஹ்ரி, பௌலி, சாமோலி, உத்திரகாசி, டேராடூன் ஆகியவை சேர்ந்த





(மேலே) தன் சமயோசித அறிவால் மரங்களை வெட்டி அழிக்கும் செயலிலிருந்து பாதுகாத்த வீராங்கனை கௌரா தேவி.

(கீழே) சிப்கோ இயக்கம் பற்றிப் பாடல்கள் இயற்றிய கவிஞர் கான்ஸ்யாம் ரதூரி



மரத்தை வெட்டுவதிலிருந்து காக்கும் பொருட்டு. மரத்தை தழுவி நிற்கும் மலைவாழ் பெண்

பகுதி கர்வால் என்று அழைக்கப்படுகிறது

சாந்தி பிரசாத் எளிமையும் தன்னடக்கமும் உடையவர். தசோலி கிராம சுயராஜ்ய சங்கம என்ற ஒரு தன்னார்வ நிறுவனத்தில் பணிபுரிந்தவர். தசோலி என்பது அக்கிராமத்தின் பெயர் அவருடன் பலர் பணிபுரிந்தனர். அவர்களில் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள் அனுசுயா பிரசாத், சந்திரசேகர் திவாரி, இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்தே இருந்த முரளிலால் ஆகியோர். கானஸ்யாம் ரதூதி என்பவர் கவிஞர். நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுபவர். அவர் சிப்கோ இயக்கப் பாடல்களுக்கு இசை அமைத்துக் கிராமங்களில் நடைபெறும் கூட்டங்களில் பாடினார். வீரேந்திர குமார் என்ற தாவரவியல் அறிஞர் அறிவியல் அறிவுரை வழங்கினார்.

சுந்தர்லால் பஹுகுணா என்ற புகழ்வாய்ந்த சுற்றுப்புறச்சூழல் வல்லுநர் டெஹ்ரி பகுதியைச் சேர்ந்தவர். அவருடன் காந்தி ஆசிரமத்தில் வளர்ந்த அவருடைய மனைவி திருமதி விமலாவும், சிறந்த காந்திய வாதியும், விவசாயியுமான தூம சிங் நேகி என்பவரும், இளம பெண்ணாசிரியை சசியும் பணிபுரிந்தனர். கர்நாடகாவைச் சேர்ந்த பாண்டுரங்க ஹெக்டே என்பவர் பஹுகுணாவுடன் பலஆண்டுகள் சேர்ந்து பணிபுரிந்தவர் அவர் தற்போது தன் சொந்த மாநிலமான கர்நாடகாவில் காடுகளைக் காக்க வேண்டுமென்ற கருத்தைப் பரப்பி வருகிறார்

1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில மலைவாழ மக்கள், காட்டுவளத்தைச் சுரண்டி வாழ்ந்த மரவியாபாரிகளை எதிர்த்தனர். முதன்முதலில் 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சமோலி மாவட்டம மண்டல கிராமத்தில்தான சிப்கோவின் முதல் எதிர்ப்பு ஆரம்பித்தது. விளையாட்டுப் பொருள்கள செய்யும நிறுவனமொன்று அசோகமரங்களை வெட்ட வந்தபோது மக்கள அனைவரும அமமரங்களை உறுதியாகக் கட்டித்தழுவிக் கொண்டு வெட்டவிடாமல் தடுத்தனர்.

சமோலி மாவட்டத்தில் பத்ரிநாத் என்ற புனித இடத்திற்குப் பக்கத்திலுள்ள ரென்னி என்ற கிராமத்தில சிப்கோ இயக்கத்தின் பணி தொடர்ந்தது. இந்தக் கிராமத்தில் தொடர்ந்து மரங்களை வெட்டி வந்ததால், இக்கிராமத்து மக்கள் கவலையுற்று இப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காணாது வருந்தினர் தசோலி கிராம சுய ராஜ்ய சங்கம உள்ளூர் மக்களில சிலருக்குக் காட்டு வளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளில வேலை கொடுத்திருந்தனர். ஆனால், பெரும் ஒப்பந்தக் காரர்களுக்கே காட்டு வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள அரசு உரிமம் வழங்கியதாலும் இந்த தசோலி கிராம சுயராஜ்ய சங்கம் அந்த உரிமையையும் இழந்ததாலும கிராம மக்கள் வேலையின்றி மிகவும் துன்பத்திற்குள்ளாயினர்.

1974-ஆம் ஆண்டில் ரென்னி கிராமத்தில் திடீரென்று ஒரு திருப்பம் ஏற்பட்டது. உத்திரப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுப் பொருட்கள் செய்யும் நிறுவனமொன்று அதன் தேவைக்காக

இக்கிராமத்தைச் சுற்றியுள்ள காட்டில் 2500 மரங்களை வெட்ட உரிமம் பெற்றது. அதேபோது, மக்களின் எதிர்ப்பும், உள்ளூர் ஆட்கள் மரம் வெட்டும் வேலைக்கு வரமாட்டார்கள் என்பதும் இந்த நிறுவனத்திற்கு ஏற்கெனவே நன்றாகத் தெரிந்திருந்தது. எனவே வெளியூர்களிலிருந்து மரம் வெட்ட வேலையாட்கள் கொண்டு வரப்பட்டனர். மரம் வெட்டுவதைத் தடுக்கும் சக்தியுள்ள எல்லா ஆண்களும், மரம் வெட்டப்போகும் நாளன்று ஏதோ ஒரு காரணம் காட்டி அக்கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். அரசாங்க காட்டு இலாகா காப்பாளர்களோடு வேலையாட்கள் கோடரிகளோடு எவரும் காணாதவாறு இரண்டிரண்டு பேராகக் கிராமத்திற்குள் பதுங்கி நுழைந்தனர். ஆனால் இதை கிராமத்துப் பெண்கள் கண்டுவிட்டனர். தங்கள் வீட்டு ஆண்கள் வெளியே சென்றுள்ளனர் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களால் இப்போது என்ன செய்ய முடியும்? கேட்க நாதியற்ற நிலையில் மரங்களை வெட்டுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதா அல்லது அதனைத் தடுக்கும் செயலில் ஈடுபடுவதா? தீர்மானமாக ஒரு முடிவெடுக்கும் நேரம் நெருங்கி விட்டதை அவர்கள் உணர்ந்தனர்.

செயலில் இறங்க அந்தப் பெண்கள் முடிவெடுத்தனர். கௌரா தேவி என்ற இளம்பெண் குடிசை குடிசையாக ஓடி, உள்ளிருக்கும் பெண்களை வெளியே வருமாறு கூக்குரலிட்டாள். சிறிது நேரத்திற்குள் பெண்களும் சிறுமிகளுமாக இருபத்தைந்துபேர் குழுமினர். முராரிலால் என்ற ஒரே ஒரு ஆடவன் காயசசலால அவதியுற்றுப் படுத்திருந்தான். என்ன நடக்கப்போகிறது என்று அவனுக்கும் தெரியவே, அவனும் முனகியபடி வெளியே வந்தான். "எல்லோரும் வாருங்கள். மரங்களை உறுதியாகக் கட்டித் தழுவிக்கொள்வோம்" என்று கௌரா தேவி கூவினாள். மலைப்பாதையில் அங்குமிங்குமாகப் பெண்கள் ஓடினர். வேலையாட்கள் மரங்களை வெட்ட எத்தனிக்கும் வேளையில் அப்பெண்கள் அனைவரும் விரைவாக அங்கு வந்து சேர்ந்தனர். "ஒவ்வொருவரும் ஒரு மரத்தைக் கட்டித் தழுவிக்கொள்ளுங்கள்" என்று கௌரா தேவி கட்டளையிட்டாள். மரத்தைக் கட்டித் தழுவிக்கொள்ளுதல் குறித்துப் பல கூட்டங்களில் பேசியிருக்கின்றார்கள். ஆனால் இப்போது அதுபற்றி கலந்தாலோசிக்கவோ அல்லது விவாதிக்கவோ நேரமில்லை. ஒவ்வொரு பெண்ணும் ஒரு மரத்தை உறுதியாகக் கட்டித் தழுவிக் கொண்டாள். மரம் வெட்ட வந்த ஆண்களைத் தைரியமாக அவர்கள் எதிர்நோக்கினர். இவ்வாறு சிப்கோ இயக்கம் தோன்றியது.

மரங்களை வெட்ட வேலையாட்கள் பெண்களைப் பல வழிகளில் சமாதானப்படுத்தி அமைதியாக வீடு திரும்புமபடிக் கேட்டுக்கொண்டனர். முதலில் அவர்கள் அப்பெண்களை நோக்கி "நாங்கள் மரங்களை வெட்ட உரிமம் வாங்கியுள்ளோம். குறைந்த அளவே மரங்களை வெட்டிக் கொண்டு சென்று விடுகிறோம்" என்றனர். ஆனால் அவர்கள் பேச்சு பலன் அளிக்கவில்லை. வேறுசில வழிமுறைகளைக் கையாண்டனர். "உங்கள்

ஆடவர்களுக்குத் தேவையான கூலியை நாளையிலிருந்து கொடுத்து விடுகிறோம்" என்றனர் இம்முயற்சியும் பயனற்றுப் போனது. ஆயுதம் தாங்கிய காட்டிலாகா காப்பாளர்கள் அங்குமிங்குமாகத் திரிந்து கொண்டிருந்த போதிலும், பெண்கள் பின் வாங்கவில்லை. "மரங்களை வெட்டவே முடியாது எங்களை வெட்டிய பின்னரே, இம்மரங்களை வெட்ட வேண்டும்." என்று உறுதியாக அப்பெண்கள் கூறினர். இதற்கிடையே, நாள் கூலிக்காக வேறு இடங்களில் கூலி வேலைக்குச் சென்றிருந்த சில பெண்கள் என்ன நடக்கிறது என்று அறிந்து ஓடி வந்தனர் இருபத்தைந்து பெண்களாக முதலில் இருந்தது, இப்போது நூறு பெண்களாகக் கூடியது. இவர்களை எதிர்த்து நின்ற ஆண்கள் அறுபதுபேர் மட்டுமே. நேருக்கு நேர் எதிர்த்து நின்றனர்.

மரங்களை வெட்ட வந்த வேலையாட்கள் பிடிவாதமாக நின்றனர் பெண்களைத் திட்டினர்; அவர்களை இழிவான சொற்களால் முரட்டுத்தனமாக ஏசினர். அச்சுறுத்தினர். அடிகள் விழுவில்லையே தவிர, மிகவும் அவமானப்படுத்தினர். "இன்று எதிர்க்கவில்லை என்றால், எப்பொழுதுமே முடியாது அவர்களைக் கண்டு அச்சப்படவேண்டாம்" என்று கௌரா தேவி கூறினார். பெண்கள் மரங்களைத் தழுவிக் கொண்டே உறுதியாக நின்றனர். தங்கள் கணவன்மார்கள் விரைவில் திரும்பி வருவர் என்ற நம்பிக்கையோடு இருந்தனர் ஆனால் அது நடக்கவில்லை.

கோடாரிகளைக் கொண்டு வந்த வேலையாட்கள் மரங்களை வெட்ட முதலில் மறுத்தனர். பின்னர் திரும்பிச் செல்லவும் முடிவு செய்தனர். இயற்கையைக் காக்கும்பொருட்டுப் பெண்கள் செய்த இச்செயலே மரம் வெட்டத் துணிந்தவர்களுக்கு விழுந்த முதல் அடி

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ப்பரவரி 1978-இல் ஹெம்வால் பள்ளத்தாக்கில் ஒரு சம்பவம் நடந்தது வெட்ட வேண்டுமென்று குறித்துவைத்திருக்கும் மரங்களைச் சுற்றிப் பெண்கள் மங்கள நாணைக் கட்டிவிட்டனர். ஆயுதம் தாங்கிய காவல்படையை அப்பெண்கள் எதிர்நோக்கவேண்டியிருந்தது. அவர்கள் கைதும் செய்யப்பட்டனர். அவர்களின் கொள்கைக்குரல் என்னவென்றால்,

"இந்தக் காடுகள் நமக்கு என்ன வைத்திருக்கின்றன ?
மண், தண்ணீர், சுத்தமான காற்று !
ஆம், மண், தண்ணீர், சுத்தமான காற்று
நம் வாழ்க்கையின் அடிப்படைகள்"

காந்திய சிந்தனையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இந்த சிப்கோ இயக்கத்தலைவர்கள் இயக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இதில் பங்கு கொண்ட மக்களை வன்முறையில் ஈடுபடாமல், ஆனால், அதேபோது எந்த ஒரு அச்சுறுத்தலையும் வன்முறையையும் தயங்காமல் உறுதியாக எதிர்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியிருந்தனர்.

சிப்கோ ஒரு மக்கள் இயக்கமாக, குறிப்பாகப் பெண்கள்

மிகுதியும் உள்ள இயக்கமாக மாறியது. தாங்கள் எதை அநீதி என்று கருதினார்களோ, அதை அஹிம்சா வழியில் எதிர்ப்பதற்குரிய சிறந்த மனப்பயிற்சியை அம்மக்களுக்கு மாதக்கணக்கில் அளித்திருந்தனர். இவ்வியக்கம் அரசியலுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. அடிப்படையான பிரச்சினை ஒன்றை இவ்வியக்கம் எழுப்பியதால், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உள்ளூர் அரசியல்வாதிகள் இவ்வியக்கத்தின் நோக்கத்தை வெளிப்படையாகவே ஆதரித்தனர்.

சிப்கோ இயக்கத்திற்கு, இயற்கையின் உயிரின வாழ்க்கைச் சூழலின் சமநிலையைப் பாதுகாப்பது பற்றியும் அதன் பரந்துபட்ட நோக்கம் பற்றியும் அக்கறை இருந்தது. இப்படிப்பட்ட பிரச்சினைகள் மிகவும் எளிதானவை அல்ல. இவை சட்டத்தாலும் விதிமுறைகளாலும் தீர்க்கமுடியாதவையுங்கூட மக்களுக்கு இதுபற்றிய கல்வியறிவு கொடுக்க வேண்டும் இயற்கையைப் பற்றிய நலமிதொரு தெளிவான கருத்து இருக்க வேண்டும்: இரசாயனப் பொருட்களால் மாசுபடுத்தப்பட்ட தண்ணீரை நாம் எவ்வாறு குடிக்க முடியும்? இரசாயன மாசுகள் நிறைந்த, கொல்லும் தன்மை பெற்ற நீரிலே மீன்கள் அனைத்தும் இறந்து விடாதா? புகையும் தூசியும் நிறைந்த காற்றை நாம் எங்ஙனம் சுவாசித்து உயிர் வாழ்வது? மரங்களையும் புல்புதர்களையும் அறவே நீக்கிவிட்டால், பாலைவனங்களை அல்லவா நாம் உண்டாக்குகிறோம்? காட்டு விலங்குகள் உயிர் வாழவேண்டுமா அல்லது செத்து மடிய வேண்டுமா? இப்படிப்பட்ட வினாக்கள் கேட்கப்பட்டு எளிய முறைகளில் புரியும் மொழி நடையில் விடைகள் தரப்பட வேண்டும். சிப்கோ இயக்கத்தின் செயல்பாட்டு வீரர்கள் இதைத் தங்கள் மனதில் கொண்டிருந்தனர். இதுபற்றிய அவர்களின் கருத்துக்கள் பொதுக்கூட்டங்களில் பாடல்களாகப் பாடப்பட்டுப் பரப்பப்படுகின்றன. மாணவர்களுக்கு இப்பாடல்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. அவர்கள் குழுக்களாகச் சேர்ந்து இப்பாடல்களைப் பாடுகின்றனர். சிப்கோ இயக்கத்தினர் பாதயாத்திரை மேற்கொண்டு இச்செய்தியைப் பரப்புகின்றனர். வடக்கே காஷ்மீரிலிருந்து கிழக்கே கோஹிமா வரை ஐந்தாயிரம் கிலோ மீட்டர் தொலைவுள்ள ஒரு பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது. நேபாளத்திற்கும் இவ்வியக்கத்தினர் சென்று வந்தனர். பல இன்னல்களையும் பொருட்படுத்தாது நட்புமுறையில் மக்களை அணுகியும், தங்களின் குறிக்கோளில் பற்றும் கொண்டு சிப்கோ இயக்கத்தினர் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றனர்.

மக்களின் ஆதரவால் சிப்கோ இயக்கம் வலிமை பெற்றது. உத்திரப்பிரதேச அரசு கடல்மட்டத்திற்கு 1000மீட்டருக்கு மேல் உள்ள பகுதிகளில் மரங்களை வெட்டக்கூடாது என்று தடை உத்திரவு பிறப்பித்தது.

இந்த உத்திரவு, இயக்கத்தினரின் கோரிக்கையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்தது. ஆனால் அவர்கள் பலவகையான

இன்னல்களுக்குள்ளாயினர். மரவியாபாரத்தில் பெருத்த இலாபம் ஈட்டி வந்த ஒப்பந்தக்காரர்கள் மிகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் அதிகாரம் கொண்டவர்களாகவும் இருந்தனர். அவர்களுக்கு மரங்களைத் தொடர்ந்து அழிப்பதில் ஒரு சுயநல நோக்கம இருந்தது. அவர்கள் முன்வைத்த வாதம் என்ன வென்றால் 'பிஹாரிலும் மேற்கு வங்கத்திலும் நிலத்திற்கடியில் பெருமளவு நிலக்கரி உள்ளது. அதனால் அந்த மாநில மக்கள் நிலத்தடி நிலக்கரி தங்களுக்குத்தான் சொந்தமானது என்றும் மற்ற மாநிலங்கள் அதை உபயோகத்திற்கு வெட்டி எடுத்துச செல்லக் கூடாது என்றும் உரிமை கொண்டாடுகிறார்களா?" இமாலயப்பகுதியில் வணிக ரீதியான மரவகைகள் அதிகமாக உளளன என்பதும் அந்த இயற்கை வளத்தால் இந்தியா முழுதும பயன்பெற உரிமை உண்டெனபதும் இநத வாதத்தின் பொருளாகும். ஆனால் இந்த வாதம் தோலவியுறறபோது இளம் பெண்களுக்கு வேலை வாயப்பு அளிப்பது போன்ற பல்வேறு ஊக்குவிப்புக்களை மேற்கொண்டனர். சட்டவிரோதமாக மரங்களை வெடடும தொழிலுக்கு ஆண்வேலையாடகளை அழைத்து அவாகளுக்கு நல்ல கூலியும், இலவசமாகச சாராயமும் கொடுத்தனர். ஏழ்மை நிலையிலுளளவர்களை ஒனறிணைககும் செயல் வெகு எளிதானதலல. அவ்வாறு அவர்களை ஒனறிணைத்தாலும ஒருசிலரைத் தூண்டிவிட்டுப பிரிக்க முடியும். இவ்வாறு பிரிந்தவர்களைக் கொண்டு இயக்கத் தலைவர்கள் மீது அவதூறு சுமத்தினர் அரசியல் ஆதாயத்திற்காகவும் அலலது தங்கள் சொந்த லாபத்திற்காகவும் காட்டுவளத்தை முழுவுரிமை ஆக்கிச் சுரண்டுகிறாாகள. என்ற பொய்யான குற்றசசாட்டுக்களால் தங்களது தலைவர்களை இழிவுபடுத்தினர். காட்டுவளத்தின தன்மையைத் தங்கள தலைவாகள புரிந்து கொளளவிலலை என்று அடிக்கடி குற்றம் சாட்டினர் இவ்வாறு கூறிய அனைத்துக் குற்றச்சாட்டுகளும், ஊக்குவிபபுகளும இறுதியில் பயனற்றுபபோயின. மலைவாழ் மககளனைவரும ஒன்றிணைந்தனர். ஒனறாகச சேர்ந்து தங்களைச் சுரண்டுபவர்களை எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், தாவரவியல்-அறிவியல் வல்லுநர்களை அழைத்து வந்து, காட்டுவளத்தை மேலும் பெருக்குவதற்கான வழிமுறைகளைக் கூறும்வண்ணம செய்தனர்.

வெறுமையாகக் காட்சியளித்த மலைபபகுதிகள் பலவற்றிலும் தற்போது பல்வேறு வகை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ள காட்சியைக் காணும்போது மனம் மிகவும் குளிர்ச்சி அடைகிறது. இவைகளை அந்தக் கிராமத்து மக்கள் மிகுந்த அக்கறையோடு பாதுகாக்கின்றனர். இருக்கும மரங்களைக் காப்பதோடு மட்டுமல்லாமல் மரக்கன்றுகளை நடவேண்டுமென்பது இன்றையத் தேவையாகும்.


இபபடிப்பட்ட தன்னார்வ இயக்கங்களில் இடையிடையே தடைகள வரலாம். இவை மனவலிமையற்றவர்களை நம்பிக்கை இழக்கச் செய்து தங்களின் குறிக்கோளை விட்டுவிடும்படியாகவும் செய்யும். ஆனால் இந்த சிப்கோ இயக்கத்தில் உள்ளவர்கள்

தங்களின் உயிருக்கே வரும் ஆபத்தை அறிந்தவர்களாதலால் ஒன்றுபட்டு செயல்படத் தீர்மானித்தனர். சிறுசிறு குழுக்களின் ஊக்கமும் மனவலிமையும்தான் இந்த இயக்கம் தொடர்ந்து நடைபெற உதவின. ஒரு கிராமத்து மக்களே ஒரு குழுவாக இயங்கி அந்தக் கிராமத்திலுள்ள மரங்களைக் காக்கும் பொறுப்பையும் ஏற்றனர். ஒவ்வொரு குழுவும் தனியாக இயங்கினாலும் கூட அனைத்து குழுக்களும் ஒன்றிணைந்து செயல்பட்டன. நாம் முன்னரே சொன்னதுபோல் பெண்களே இந்த இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் தங்களின் பிரச்சினைகளுக்காகவும் தேவைகளுக்காகவும் பெண்கள் நலச் சங்கங்களை அமைத்தனர். இப்பெண்கள் சாதி வேறுபாடுகள், பொருளாதார நிலை ஆகிவற்றுக்கப்பால் செயல்பட்டனர். உள்ளூர் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் படிக்கும் இளைஞர்கள் இப்பெண்களுக்கு உதவிபுரிய முன்வந்தனர். இந்த வகையான நிறுவனங்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மரங்களை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல பணநெருக்கடி ஏற்படும் நேரத்தில் ஒரு சிலர் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டி விற்பதையும் தடுத்து நிறுத்துகின்றன.

சிப்கோ இயக்கத்தின் பணி, மரங்களைக் காப்பதும் புதிய மரங்களை வளர்ப்பதும் மட்டும் இல்லை. நிலையான பொருளாதார முன்னேற்றத்திற்கு நிலத்தைப் பயன்படுத்துவதில் ஓர் அடிப்படையான மாற்றம் வேண்டும் என்பதை வலியுறுத்துவதுமாகும். உணவு, தீவனம், எரிபொருள், உரம், நார்ப்பொருள் ஆகிய ஐவகைத் தேவைகளுக்கும் மரங்களை வளர்க்க வேண்டும். "உயிரின வாழ்க்கைச் சூழல்தான் நிலையான பொருளாதாரம்" என்பதுதான் இவ்வியக்கத்தின் கோஷம். இதற்காக இவ்வியக்கத்திற்குச் சிறந்த விருது ஒன்றும் தரப்பட்டது. இப்பகுதிகளில் பயணம் செல்லுபவர், இவ்வியக்கத்தின் விரும்பத்தக்க பல்வேறு அம்சங்களை அறியலாம். இவ்வியக்கத்தின் நோக்கம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ளது. கர்நாடக மாநிலத்தில் சிர்சி என்ற நகரில் பாண்டுரங்க ஹெக்டே இதுபோன்ற ஓர் இயக்கத்தைத் துவக்கி 'அப்பிக்கோ' என்று பெயரிட்டுள்ளார். அவர் 1987-இல் தெனகோடியிலுள்ள கன்னியாகுமரியிலிருந்து மேற்குக் கடற்கரையிலுள்ள கோவா வரையில் நடைப் பயணம் மேற்கொண்டார். இருபாலாரும், இளையோரும் முதியோரும் இப்பயணத்தில் பங்கேற்றனர். மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த, மிகவும் புகழ்வாய்ந்த சமூக செயல்வீரர் பாபா ஆம்தே என்பவர் மலைப் பகுதிகளிலுள்ள காடுகளைக் காப்பதில் வலுவான உறுதி பூண்டவர். தமிழகத்தில் 'கிழக்குத் தொடர்ச்சி மலைக்காடுகளைக் காப்போம்', 'பழனி மலைப் பகுதியைக் காக்கும் குழு', 'நீலகிரியைக் காப்போம்', எனும் மூன்று இயக்கங்கள் மிகவும் புகழ் வாய்ந்தவையாகும். பிரச்சாரத்தின் மூலமாய் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது, சரியான கொள்கைகளைப் பின்பற்றுமாறு அரசை நெறிப்படுத்துவது, விறகை எரிபொருளாகப்



மரங்களை வெட்டும் பொறுப்பற்ற செயல் [illegible]





(மேலே) இயற்கையோடு இணைந்து வாழும் விலங்கினங்கள்

(கீழே) அனைவரையும் கவர்ந்திழுக்கும் காட்டு வளமும், விலங்குகளும்

பயன்படுத்துவதைக் குறைப்பதற்குரிய வழிவகைகளைச் சோதனை செய்து பார்ப்பது, மாற்று எரிசக்தியைத் தோற்றுவிப்பது, சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்கும்போது நீதிமன்றத்திற்குச் சென்று நடைமுறைத் தடை உத்திரவு பெறுவது ஆகிய பணிகளை இந்தக் குழுக்கள் செய்கின்றன. இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்டுப் பல சட்டங்கள் இந்தியாவில் உள்ளன. ஆங்காங்கே உள்ள செயலவீரர்கள் இந்தச் சட்டங்களை மக்கள் அசட்டை செய்யாமலும் ஏமாற்றாமலும் ஒழுங்காக அமுல்படுத்தும்படிக் கண்காணிக்க வேண்டும்.

இந்தியாவின் இமாலயப் பகுதிகளிலும் மற்ற இடங்களிலும் உள்ள காடுகள் மீண்டும் வளர்க்க முடியாதபடி அழிக்கப்பட்டுள்ளன. தானாக நன்கு வளர்ந்துள்ள ஒரு காட்டை அழித்துவிட்டால் அதை மீண்டும் வளர்த்து வளமை ஆக்குவதென்பது இயலாத செயல் என்று பல அறிவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, நல்ல மழைவளம் கொண்ட காடு இயற்கையின் சமநிலையைப் பேணிக் காக்கிறது. அது ஒருமுறை அழிக்கப்பட்டால், அதன் சேதத்தை மீண்டும் மாற்ற முடியாது. ஆயிரக்கணக்கில் கூட்டங்கூட்டமாக வாழும் ஒருசில பறவையினங்கள், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறைவாக இருந்தால் அவை அவ்விடத்தை விட்டு வெளியேறி விடுகின்றன. அவ்வளவு குறைவாக உள்ள பறவைகள் மீண்டும் அவ்விடத்திற்கு வருவதற்குச் சக்தி அற்றவைகளாகி விடுகின்றன. சில கடல்களிலுள்ள மீன்கள் இரசாயன மாசுகளினாலோ அல்லது அதிகப்படியாகப் பிடிக்கப்பட்டாலோ எண்ணிக்கையில் குறைந்துவிடுகின்றன. அவ்வாறு குறைந்த அளவாக ஆகிவிட்ட மீன்களை அதன் பிறகு தொந்திரவு செய்யாமல் விட்டுவைத்திருந்தாலும் அவை இனப்பெருக்கம் அடையாமல் அழிந்து விடுகின்றன. பொதுவாகக் காடுகள் வளமாக இருக்க, இயற்கையாக இருக்கும் பலவகைப்பட்ட வெவ்வேறான தாவர இனங்கள் மிகவும் தேவை.

பலவகைப்பட்ட மர இனங்களை அழித்து அப்பகுதியில் வணிக ரீதியான ஓரின மரங்களையே வளர்த்தால் நாம் இயற்கைக்கு அளவிட முடியாத அழிவை ஏற்படுத்துவதோடு புவியியல் அடிப்படையாகவும் அழிவை ஏற்படுத்தியவர்களாவோம். காடுகளில் இயற்கையாக அமைந்துள்ள அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் நம்மை வெள்ளத்திலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் பாதுகாப்பதோடன்றி அவை இவ்வகையான பல தாவர இனங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. சிப்கோ இயக்கம், முதலில் வளம் நிறைந்த காடுகள் வணிக ரீதியாகச் சுரண்டப்பட்டதை எதிர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இவ்வியக்கம் தற்செயலாக வேறு சில பயன்களையும் விளைவித்தது. இதனால் பெண்களின் நிலை உயர்ந்தது. தங்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. தங்கள் குடும்பங்களுக்கு நல்ல வாழ்க்கைத்தரம், நல்ல கல்விக்கூடங்கள்,

சுகாதாரம், வேலைக்குத் தகுந்த கூலி, பெண்களுக்கேற்ற வேலை ஆகியவற்றைக் கோரினார்கள்.

சிப்கோ இயக்கம் நம நாட்டளவிலே ஆரம்பிக்கப்பட்டதுதான் ஆனால் இன்று அது இயற்கையைப பேணிக்காத்தல், சுற்றுபபுறச்சூழல் மாசினை எதிர்த்துப போராடல், வனவிலங்குகளைப் பேணிக்காத்தல ஆகியவற்றிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொணடுள்ள உலக அளவிலான வலுவான இயக்கத்தின் ஒரு குறியீடாகவே ஆகிவிட்டது என்பது குறிபபிடத்தக்கதாகும. மேலும, ஆதாயததுக்காகவும் மனிதனின் மடமையாலும் இநதப பூமி மேலும் சுரண்டபபடாமல் இருக்க என்னென்ன செயய இயலுமோ அவை அனைத்தையும செய்ய உறுதி பூண்டுள்ளது. "தொடர் நிலைபெறு பொருளாதார செயற்பாடுகள்" என்ற கருத்துக்கு ஒரு புதிய வலுவை இவ்வியக்கம் கொடுத்துள்ளது. நாம இயற்கை வளஙகளனைத்தையும் முழுவதும பயன்படுத்திவிடக்கூடாது எனபதுதான் தொடர்நிலைபெறுதல் என்பதன் பொருள் விவசாயம செயது மண் வளததை முழுதும பயன்படுத்தி உரமிழக்கச் செயதுவிடக்கூடாது; மீண்டும் புதுபபிக்க முடியாத இயற்கை வளங்களைத் தொழிற்சாலைகள பயனபடுத்தித் தீர்த்து விடக்கூடாது.

நிறுவனங்கள. தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக இளையோருககும வயது வந்தோர்க்கும் இயற்கை வளத்தைப பேணிக்காப்பது பற்றி அறிவுறுத்த வேண்டும. இதுதவிர, பொருளாதார வளர்ச்சி எனற பெயரில நவீன போககுவரத்துச் சாதனங்கள், சில தொழிற்சாலைகளுக்கு உதவ வேண்டுமென்பதற்காக காட்டுவளத்தைத தவறான வழியில் பயன்படுத்துதல், இரசாயனக கழிவுகள் போன்றவற்றின் மூலமாக இயற்கைச் சூழலையும் உயிரின வாழக்கைச் சூழலையும் மாசுபடுத்தக் கூடாது என்ற கருத்தை மக்கள நன்குணரும் வண்ணம் அறிவுறுத்த வேண்டும். நாம் இயற்கையை அழிபபதால் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேறறத்தையும அடைந்துவிட முடியாது. திரு. பண்டோபாத்யாயா, திருமதி. வந்தனா சிவா என்ற இரண்டு தலைசிறந்த இயற்கைப் பேணுநர்கள் சிபகோ இயக்கத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகின்றனர்.

"சிப்கோ இயக்கம் உத்திரப்பிரதேசத்தின் மலைப்பகுதிகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலும், விந்தியமலைப் பகுதியிலும் வளர்ந்துள்ள மரங்களை வணிக ரீதியாக வெட்டக்கூடாது என்று பதினைந்து ஆண்டுகாலத் தடையைக் கொண்டு வந்ததில் வெற்றி அடைந்துள்ளது. மேலும், மக்களின் தேவைக்கும் நாட்டின் உயிரின வாழ்க்கைச் சூழலின் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் தேசிய அளவிலான காடுகள் பற்றிய கொள்கை ஒன்றை வகுக்கவேண்டுமென்ற தேவையின் நெருக்கடியை இவ்வியக்கம் ஏற்படுத்தி உள்ளது. துரதிஷ்டவசமாக, சுய நலவாதிகள் சிலர், சிப்கோ இயக்கத்தை 'வளர்ச்சி'க்கும் 'உயிரின வாழ்க்கைச்

சூழலுக்குமிடையே ஏற்பட்டதொரு மோதல் என்று புரியாமல் கொச்சையாகக் கூறுகின்றனர் அவர்கள் கூற்றுப்படி வளர்ச்சி என்பது உலகாயதத்தையும், புறச்சார்புடைய காரணிகளையும் குறிப்பதாகும், உயிரின வாழ்க்கைச் சூழல் என்பது உலகாயதமல்லாததும், எழிலார்ந்த இயற்கைச் சூழல் போன்ற அகச்சார்புடையதுமாகிய காரணிகளைக் குறிப்பதாகும் "வளர்ச்சிக்கும்" "உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும்" இடையே இத்தகைய பொய்யானதும் அபாயத்தை விளைவிக்கக்கூடிய வேண்டுமென்றே உண்டாக்கிய இந்த வேறுபாடு, உண்மையிலேயே நல்லதொரு உயிரின வாழ்க்கைச் சூழல் வளர்ச்சிக்கும் உயிரின வாழ்க்கைச் சூழலைச் சீர்கேடடையச் செய்கின்ற திட்டமற்ற ஒருவகையான பொருளாதார முன்னேற்றத்திற்கும் இடையே இருக்கும் வேறுபாட்டை வேண்டுமென்றே மறைக்கிறது இவர்களின் யோசனைப்படி, சாதாரண மக்களின் உலகாயத முன்னேற்றத்தை விளைவிக்கும் வாழ்க்கைக்கு ஆதாரமாய் இருக்கும் அமைப்புகளைக் காணப்படும் உயிரின வாழ்க்கைச் சூழலை சீர்கேடடையச் செய்யும் திட்டமற்ற இந்தப் பொருளாதார முன்னேற்றத்தை அடையலாம் ஆனால், உண்மையான வளர்ச்சி என்பது உயிர்வாழ்க்கைக்குத் தேவையான நிலைப்பேறானவைகளை உறுதிப்படுத்தும் உயிரினச் சூழலின் சமநிலை மீட்சியாற்றலை அடிப்படையாகக் கொண்டதாகும் உயிரினச் சூழலின் சமநிலை மீட்சியாற்றலுக்கு, வளர்ச்சி என்பது எவ்வாறு முரண்பாடாக இல்லை என்ற கருத்தினைக் காந்தியும், அவருக்குப் பின்னர் அவருடைய சீடர்களான மீரா பென், சரளா பென் ஆகியோர் தெளிவாக விளக்கினர் வளர்ச்சியின் சீரழிவான வழிமுறைகளைச் செயலிழக்கச் செய்ததன் மூலமாய் சிப்கோ இயக்கம் போன்ற உயிரின வாழ்க்கைச் சூழல் இயக்கங்கள், வளர்ச்சியின் படிநிலைகளைத் தடைசெய்து விட்ட பெருமையை அடைந்துள்ளன"

"உண்மையில் கூறப்போனால், தொடர்ந்து உயிரினச் சூழலின் சமநிலை மீட்சியாற்றலைக் கருத்தில் கொண்டு சிப்கோ போன்ற இயக்கங்கள் நம் வாழ்க்கைக்கான உறுதிவாய்ந்த அடித்தளத்தை அமைத்துத் தருகின்றன" என்று அவர்கள் இறுதியாக முடிவுரையில் கூறியுள்ளனர்

ஆகவே, இதைப்பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

# III

## ஆனந்தவனமும் பாபா ஆம்தேயும்

*“நான் உங்களுக்கு ஒரு மந்திரத்தைத் தருகிறேன். உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டாலோ அல்லது தன்னல உணர்வு மிகுந்தாலோ இந்த மந்திரத்தை பிரயோகித்துப் பாருங்கள்: ”*

*நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கக் கூடிய மிகவும் ஏழையான மெலியாரை நினைத்துப்பாருங்கள். நீங்கள் எடுக்கும் நடவடிக்கை அந்த ஏழைக்கு எவ்விதமான பயனை நல்குமென்று கருதிப் பாருங்கள். அவனுக்கு இதனால் ஏதாவது பயனுண்டா? இது அவனுக்குத் தன் வாழ்க்கையின் மீதும் விதியின் மீதும் அவன் கொண்டுள்ள செயலாட்சியை மீட்டுத் தருமா? வேறு வகையில் கூறினால், பசியுடனும், ஆன்மீகத் தேடலுடனுமுள்ள இலட்சக்கணக்கான மக்களின் சுயராஜ்யத்திற்கு வழிகோலுமா? அவ்வாறாயின் உங்களுடைய சந்தேகமும் தன்னல மனப்பான்மையும் கரைந்து போய்விடும்.”*

*-மகாத்மா காந்தி*

இது–முரளிதர தேவிதாஸ் ஆம்தே எனும் முழுப்பெயர் கொண்ட ஆம்தே எனும் மனிதரின் யுகம். மனத்துணிவு, கொள்கைப்பற்று, இரக்க உணர்வு ஆகியவற்றின் யுகம், இது. கவிஞனாகவும், தலைவனாகவும், தீர்க்கதரிசியாகவும், ஏழையின் நண்பனாகவும் வாழும் மனிதர் ஒருவரின் வாழ்க்கைக் கதையாகும். பொறுமையற்ற ஆனால் ஒடுக்கமுடியாத ஒரு மனிதரின் கதையாகவும் இது அமையும்.

மகாராஷ்டிர மாநிலத்தின் மேற்குப் பகுதியிலுள்ள ஒரு சிறிய நகரத்திலுள்ள முரளிதர், 1914 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ஆம் நாள் பிறந்தார். இவருடைய தகப்பனார் பெயர் தேவிதாஸ். இவரது குடும்பப் பெயர் ஆம்தே. இவருடைய தந்தை ஒரு பெரிய நிலக்கிழாராகவும், சமுதாயத்தில் மதிக்கத்தகுந்த அரசாங்க அதிகாரியாகவும் இருந்தார். தந்தையார் வெளியில் செல்லும் போது அவருடன் முரளிதர் உடன்செல்வது வழக்கம். நிலமற்றோர் கொத்தடிமைகளாக அறியாமையில் உழல்கின்ற கொடுமையான நிலையை முரளிதர் அறிய நேர்ந்தது. சமூக அந்தஸ்தும் சாதி உணர்வும் மிகுந்திருந்த சமுதாயத்தில் முரளிதர் சமயச்சார்பற்ற

ஒரு விநோதமான பையனாக வளர்ந்தார் அநீதியையும், ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையே இருந்த வேறுபாடுகளையும் வெறுத்தார். ஒரு சமயம் கீழினத்தைச் சேர்ந்த வேலையாளுடன் உணவை பகிர்ந்து உண்டதற்காக முரளிதர் தண்டிக்கப்பட்டார்.

சிறுவயது முதலே முரளிதருக்கு இயற்கையின் மீது ஒரு ஈடுபாடு இருந்தது. அகன்ற வானம், உயர்ந்த மலைகள், அடர்ந்த காடுகள், குளுமையான ஆறுகள், காட்டு விலங்குகள் ஆகியன இவரின் மனத்தைக் கவர்ந்தன. சில நேரங்களில் இவர் காட்டிலே தனியாக அலைந்து திரிவார்; இயற்கையை நன்றாக அனுபவிக்க மாட்டுவண்டியிலே பயணம் செய்வார். அப்போதுதான் மத்திய இந்தியாவின் பஸ்தார் மாவட்டத்தில் வாழும் மடியாகோண்டுகள் என்ற பழங்குடி மக்களின் தொடர்பு ஏற்பட்டது. அந்த எளிமையான மக்களின் தன்னிறைவான வாழ்க்கையையும் நேர்மையையும் இவர் மிகவும் விரும்பினார். பிழைபடாமல் குறிபார்த்து வேட்டையாடும் அவர்களின் திறமையைப் பெரிதும் பாராட்டினார்.

முரளிதர் தன் உடல் நலத்தைப் பேணிக்காத்தார். மற்போர், நீச்சல், குதிரையேற்றம், வேட்டையாடுதல் ஆகியவற்றை மிகவும் விரும்பினார். இது தவிர குரலிசையில் பயிற்சியையும் சமையலில் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார். இப்பொழுதும்கூட இவர் மராத்தி மொழியில் மிகச் சிறந்த கவிதைகளை எழுதுகிறார். இதற்கெல்லாம் மேலாக நாடகத்தையும் இசையையும் விரும்பினார். மிகவும் புகழ்வாய்ந்த ஹாலிவுட் நடிகையான நார்மா ஷியரரின் நடிப்புத் திறமையைப் பாராட்டி கடிதம் எழுதினார். இன்றளவும் அவர்களிருவரும் நல்ல கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர். நார்மா ஷியரரும் இவரின் மனிதாபிமானச் செயலுக்கு வலுவான ஆதரவு தெரிவித்துள்ளார்.

முரளிதர் இளைஞனாக இருக்கும்போது இந்தியா ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்தது. மற்ற இளைஞர்களைப் போலவே இவரும் இந்திய விடுதலை இயக்கத்தின் பேரலைகளால் மோதப்பட்டார். ஆயுதங்களைப் பயன்படுத்தி வன்முறையால் ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நம்பியவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவுவதை இவர் தேசாபிமானச் செயலாகக் கருதினார். 1935-இல் பலுசிஸ்தானில் க்யூட்டா என்ற இடத்தில் (தற்போது இது பாகிஸ்தானிலுள்ளது) நிலநடுக்கம் ஏற்பட்டதால் உயிர்களுக்கும் பொருள்களுக்கும் மிகுந்த சேதம் விளைந்தது. நிவாரணப்பணிகளை மேற்கொள்ள க்யூட்டாவுக்குச் சென்ற குழுவில் இவரும் சேர்ந்து சென்றார். 1942-இல் காந்தியடிகள் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை மேற்கொண்டபோது இவரும் பங்கு கொண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

ஒருமுறை பெண்ணொருத்தியைச் சிலர் இழிவுபடுத்த முயன்றதைக் கண்டார். அதைக் கண்டு சினம் கொண்ட இவர் அப்பெண்ணைக்காக்கும் பொருட்டு அந்த மனிதர்களுடன் கைகலக்க நேர்ந்தது. அச்சண்டையில் பெற்ற அடிகளின் வடு

இன்றளவும் இவரது உடம்பில் உள்ளது.

முரளிதர் சட்டப்படிப்பை முடித்து, மகாராஷ்டிராவில் சந்திராபூர் மாவட்டத்திலுள்ள வரோரா நகரத்தில் வழக்கறிஞராக வாழ்வை மேற்கொண்டார். ஆனால் இவரது மனம் ஏழைகள்பால் இருந்தது. இது குறித்து இவர் எண்ணியதாவது: "நீதிமன்றத்தில் வழக்காடுவதற்காக நிறையப் பணம் பெறுகிறேன். ஆனால் அதற்கு வெளியே நிலமற்ற கூலியாள் ஒருவன் ஒரு நாளில் பன்னிரண்டு மணிநேரம் உழைத்து ஒரு ரூபாய் மட்டுமே தனது உணவுக்காகப் பெறுகிறான். இது நியாயந்தானா? என்னுடைய கடமைதான் என்ன?".

1946-இல் முரளிதர் நாக்பூருக்குச் சென்றார். அங்கு சந்தித்த சாதனா என்ற பெண்ணை இவர் தன் மனைவியாக ஏற்றார். 'சாதனா' என்னும் சொல்லுக்கு "ஆன்மீகத் தேடல்" என்று பொருள். அவர்களது மணவாழ்க்கை மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. ஒரு அசாதாரண மனிதராக இருந்த இவருக்கு அப்பெண், நண்பராகவும் ஒரு அகத்தூண்டுதலாகவும் விளங்கினார். திருமணத்திற்குப் பின் தன் மனைவியிடம் "என்னிடம் வழக்குக கொண்டு வரும் ஏழைகளிடம் நான் செய்யும் சட்ட உதவிககாகப் பணம் பெறுவதில் எனக்கு மகிழ்ச்சியில்லை. அவர்களிடம் பணம் வாங்குவதென்பது சுரண்டலுக்குச் சமமாகும்." என்று கூறினார் சாதனாவும் அதை ஏற்றுக் கொணடார். தான் செயது வந்த வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டார் மேலும், தன் தந்தையார் சொத்து தனக்கு வேண்டாமென்று விட்டுவிட்டார்.

வரோரா நகராட்சியில் சேர்ந்து தன் பகுதி மக்களுக்குச் சேவைபுரிய ஆரம்பித்தார் 1948-இல் வரோரா நகராட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் பங்கிகள் என்று அழைக்கப்பட்ட துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தலைவரானார். இந்து சமுதாயத்தில் பங்கிகள் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களாக நடத்தப்பட்டனர். குப்பைகளையும் மலத்தையும் அகற்றும் கேவலமான ஒரு வேலையை இவர்கள் செய்து வந்தனர். மற்ற இந்து சமுதாயத்தினர் இவர்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று கருதினர். மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த இவர்கள், தீண்டாமையை இந்து சமயத்தின் ஒரு மரபு என்று கருதி ஏற்றுக்கொண்டு வாழ்ந்தனர். தீண்டாமை என்பது மனிதனுக்கும இறைவனுக்கும் எதிராக இழைக்கப்படும் குற்றம் என்றும் அதை எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் காந்தியடிகள் ஏற்கெனவே அறைகூவல் விடுத்திருந்தார். சாதியிலிருந்து விலக்கப்பட்டு வைத்திருந்த ஏழைகளான இவர்கள், கிராமத்திற்கு வெளியே தங்களுடைய குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். எல்லோராலும் வெறுக்கப்பட்டனர்; இவர்களுக்கு நில உரிமை இல்லை; கல்வி மறுக்கப்பட்டது. பங்கிகள் செய்யும் தொழில் மதிக்கத்தக்கதாக இல்லை என்று கருதக்கூடாது எனக் காந்தியடிகள் தன் தொண்டர்களிடம் கேட்டுக் கொண்டார். இதற்கேற்றாற்போல்,

தன் தொண்டர்களை அவரவர்களுடைய கழிப்பறையை அவர்களே தூய்மை செய்யும்படியும் அவர் வற்புறுத்தினார். அதுமட்டுமில்லாமல், தன்னுடைய கழிப்பறையைத் தானே சுத்தம் செய்து ஒரு எடுத்துக்காட்டாகவும் விளங்கினார்.

மற்றவர் மலத்தை எடுத்துச் சுத்தம் செய்யும் இந்தத்தரக்குறைவான தொழிலிலிருந்து ஆண்களையும், பெண்களையும் விடுவிக்கும் பொருட்டுக் காந்தியடிகள் ஆரம்பித்த இயக்கத்திற்கு 'பங்கி முக்தி' (பங்கிகள் விடுதலை) என்று பெயர்.

முரளிதர் இந்தச் சவாலை ஏற்று நாளொன்றுக்கு நாற்பது கழிப்பறைகளை சுத்தம் செய்தார். மிகுந்த மழை பெய்து கொண்டிருந்த ஒருநாள் இவர், மலம் நிறைந்த வாளியைத் தலை மீது சுமந்து சென்று கொண்டிருந்தார். அப்போது, தண்ணீர் அடைபட்டுக்கிடந்த ஒரு சாக்கடையின அருகில் ஒருவன் முனுமுனுத்துக்கொண்டிருந்தான். அம்மனிதனின் முகம் வீங்கி, உருவமே தெரியாமல இருந்தது. அவனது உடலில் இருந்த புண்களில் புழுககள் நெளிநதன முரளிதர் தன் வாழக்கையில் முதன்முதலில் இப்போதுதான் ஒரு தொழுநோயாளியைக கண்டார்

இது முரளிதரிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. இவர் அதிர்ந்துபோய் குழப்பமடைந்திருந்தார். மோசமான நிலையிலிருந்த அம்மனிதனை ஒரு முரட்டுத்துணியால் சுற்றிப போர்த்திவிட்டு அதிர்ச்சியடைநத நிலையில் தன் வீட்டிற்குச் சென்றார். வீட்டையடைந்து தன்னைச் சுத்தம் செயதுகொள்ள நன்றாகக் குளித்தார் ஆனால் இவரது மனத்திலிருந்து துயரம் நிறைந்த அந்த மனிதனின் நினைவு அகலவில்லை. "ஒரு வேளை நானோ, என் மனைவியோ, அல்லது என் மகனோ இப்படிப்பட்ட கொடூரமான நோயால் பீடிக்கபபட்டால் நாங்கள் எங்கே போவது?" என்ற எண்ணம இவா மனதில் உறுத்திக்கொண்டேயிருந்தது. "எங்கே அச்சமிருக்கிறதோ அங்கே அன்பு இல்லை, எங்கே அன்பு இல்லையோ அங்கே இறைவன் இல்லை; என்னுடைய உள்ளத்திலிருந்து அச்சத்தைப் போக்க வேண்டும்" என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டார்.

இங்கே தொழு நோயைப் பற்றியும் அது நம்முள் ஏற்படுத்தும் அச்சத்தைப் பற்றியும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

இந்தியாவில் தொழுநோய் 'குஷ்டரோகம்' என்று அழைக்கபபடுகிறது. இந்த அஞ்சத்தக்க நோயைப் பற்றி நம்முடைய வேதகால இலக்கியத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. கி.மு.400-வாக்கில் எழுதப்பட்ட மருத்துவநூலான சுசுருத சம்ஹிதையில் இந்நோயைப் பற்றிய விளக்கமும் அதற்கு எவ்வாறு மருத்துவம் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. தோலையும், மேற்புறமுள்ள நரம்புகளையும் தாக்கும் இந்நோய் ஒரு தொற்று நோயாகும். சரியான மருத்துவம் செய்யவில்லை என்றால் கைகள், முகம், கண்கள் ஆகியவற்றைப் பாதித்து முடமாக்கிவிடும்.

மைக்ரோ பாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியாவால் இந்நோய்

பரவுகிறது. 1873-இல் நார்வே நாட்டைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளரான ஹான்சென் இதைக் கண்டறிந்தார். எனவே இந்நோயை ஹான்சென் நோய் என்றும் கூறுவர்.

தொழுநோய்க்குக் காரணமான பாக்டீரியாவைக் கண்டறியும் முன்னர் இந்நோய் பரம்பரையானது என்றும் தட்பவெட்பநிலை காரணிகள், அசுத்தமான பழக்க வழக்கங்கள், கடவுளின் சாபம் என்பன போன்ற காரணங்களால் தொழுநோய் வருகிறது என்றும் நம்பி வந்தனர். இந்தியாவில் நல்லதும், கெட்டதும ஒருவனது முன்வினைப பயன் என்று நம்பிக்கை இருந்ததால் முற்பிறவியின் வினைப் பயனாய்த்தான் ஒருவன தொழுநோயால் அவதியுறுகிறான் என்று கருதினர். மருத்துவ வசதியின்றி இருந்த இந்த நோய் ஒரு சாபக்கேடு என்று கருதப்பட்டது. எனவே இநநோயால் அவதியுறுவோர், தனிமைப்படுத்தப்பட்டும் சாதியிலிருந்து விலக்கப்பட்டும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டனா.

தொழுநோய் என்பது இருவகைபபடும். முதல்வகை, லெப்ரோமேடஸ் எனப்படும் பன்முக நோய் நுண்மத்தன்மையது. இது உடல் முழுதும் பரவும தன்மையது. இந்தியாவில் உள்ள நாற்பது லட்சம் நோயாளிகளில் எட்டு லட்சம் பேர் இம்முதல்வகையினால் அவதியுறுகின்றனர். மருத்துவம் செய்யப்படவில்லை என்றால் திரளைகள தோன்றி முகமே உருக்குலைந்துவிடும். இரண்டாவது வகை 'லெப்ரோ மேடஸ் அல்லாதது' எனப்படும. இது நோய் நுண்மையில்லாதது எனவும் கூறப்படும். தொற்றும தன்மையற்ற இவ்வகைத் தொழுநோயால் அவதியுறும் நோயாளிகள்தான் இந்தியாவில் அதிகம். இதன முதல் அறிகுறி என்னவென்றால் தோல் தடிமனாக ஆகும். அவ்விடத்தில் தோல் உணர்வற்று இருக்கும்.

தொழுநோய மிகவும அஞ்சத்தகுநதது. மேற்கத்திய நாடுகளில் கல்வி, உயர்ந்த வாழ்க்கைத் தரம், சிறந்த சுகாதாரம் ஆகியவற்றால் இந்நோய் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் தொழுநோய் பரவலாக உள்ளது. இந்தியாவில பெரும்பாலான தொழுநோயாளிகள் தென் மாநிலங்களிலும் கிழக்குப்பகுதியிலும் வாழ்கின்றனர்.

1930-கள் வரை இந்நோயக்கு சரியான மருந்து இல்லாமலிருந்தது. நோய் அறிகுறிகளை நீக்குவதற்கான மருத்துவம், நோயாளிகளைச் சுத்தமாகவும் வசதியாகவும் வைத்திருத்தல், அவர்களின் வாழ்க்கைத் துயரத்தை நீக்குதல் ஆகிய முறைகளால் இந்நோய்க்கு மருத்துவம் செய்துவந்தனர்.

இந்நோய்க்குத் தகுந்த மருத்துவம் செய்யவில்லை என்றால் இது உடல் ஊனத்தை உண்டாக்குவதோடு நோயாளியை உருக்குலையவும் செய்துவிடுகிறது. உள்ளங்கைகளிலும் பாதங்களிலும் உள்ள தோல் உணர்வற்றுப் போவதால் நோயாளி அடிபடுவதாலும் வெந்நீரால் கழுவுவதாலும் புண்களும் கொப்புளங்களும் உண்டாகி அவதிக்குள்ளாகின்றனர்.

முகமும் உடலுறுப்புகளும் உருக்குலைந்த இந்நோயாளிகளைப் பார்ப்பது அச்சத்தையும் அருவருப்பையும் ஏற்படுத்தும். தொழுநோயால் அவதியுறும் ஒருவனை அவனது பெற்றோர், மனைவி, மக்கள் கூட விலக்குவர். இந்நோயின் விளைவால் ஏற்படும உடல் ஊனமும் சமுதாயப் புறக்கணிப்பும் உடலுழைப்பைச் செயயவும், சம்பாதிக்கவும் இவர்களைத் தகுதியற்றவனாக்கி விடுகின்றன. அப்படிப்பட்ட நோயாளி ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் குடும்பத்திற்கு ஒரு சுமையாகவே கருதப்படுகின்றனர். இந்த ஒரு காரணத்திற்காகத்தான் அந்நோயாளி தன் குடும்பத்தைவிட்டு வெளியேற வேண்டியவனாகிறான். இவ்வாறு புறக்கணிக்கபபட்ட நோயாளி, வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் பிச்சையேற்க முனைகிறான். இப்படிப்பட்ட பிச்சைக்காரர்கள் தன்மானமிழந்து, தங்கள் உடல் ஊனங்களைக் காட்டி மற்றவர்கள இரக்கப்படும்படித் தங்களை தாழ்த்திக் கொள்கின்றனர்.

பல ஆண்டுகளுக்குமுன், இந்நோயின் அறிகுறி உடலில் தென்பட்டால் பாதிக்கப்பட்டவர் அதை மூடி மறைத்துவிடுவார். ஆனால் இன்றைய மருத்துவ முறைகளில் இந்நோயைக் குணப்படுத்த முடியும். எனவே தொழுநோயால் பீடிக்கபபட்டவர்களிடையே மனமாற்றம் நிகழ்ந்துள்ளது நோயை மூடி மறைப்பதில்லை. ஆயினும் இதைப பலர் வெளிப்படுதத விரும்புவதில்லை. தொழுநோயாளியை வீட்டிற்குள் ஒரு மூலையில் மறைத்துவைபபது இன்னமும பல குடும்பங்களிலுள்ளது. ஆனால் தொழுநோயால் பீடிக்கப்பட்டவரை மூடி மறைபபது மிகவும் தவறான செயலாகும். ஏனெனில் ஆரமபகாலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு முறையான மருத்துவம் செயயாவிட்டால் நாளடைவில் அந்நோய கடுமையாகப் பரவிவிடும்.

முப்பதுகளில் டிடிஎஸ் அல்லது டெப்சோனி என்ற புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டது, மருத்துவத் துறையில் ஒரு சாதனையாகும். இந்தியாவில் முதன்முதலில் இம்மருந்தை டாக்டர் கோக்ரேன் என்ற ஆங்கிலேய மருத்துவ நிபுணர், தமிழகத்தின் தென்ஆற்காடு மாவட்டத்தில் சோதனை செய்து பார்த்தார். சோதனையின் விளைவுகள் மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்தன. இன்றளவும் டெப்சோனி மருந்தினைத்தான் தொழுநோயைக் குணப்படுத்தப் பயன்படுத்துகின்றனர். அது விலைமலிவான மருந்து. மருந்தின் விலை மிகவும் அதிகமாக இருந்திருந்தால் அரசாங்கமும் தன்னார்வ நிறுவனங்களும் இந்த தொழுநோயைக் குணப்படுத்தும் திட்டத்தை பெரிதும் ஆதரித்திருக்க மாட்டார்கள். அண்மைக்காலத்தில் ரிஃபாம்பைசின், க்ளோஃபாஸிமைன் என்ற இரண்டு புதிய மருந்துகள கிடைக்கின்றன. இவற்றுடன் டெப்சோனியையும் சேர்த்துத் தொழுநோயாளிகளுக்குக் கொடுக்கின்றனர். இதன்மூலம் நோயாளிகளுக்குக் குணம் ஏற்பட்டால் கி.பி.2000க்குப் பின் இந்தியாவில் தொழுநோயே இல்லாமல் ஆக்கிவிட முடியுமென்று நம்புகின்றனர். இந்த பன்முக மருத்துவ சிகிச்சைமுறை, பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கும் சமூக சேவைப் பணியாளர்களுக்கும்

நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

சக்திவாய்ந்த மருந்துகள், நோயைப் பற்றிய நல்லறிவு, அதிக அளவில் தொழுநோய் மருத்துவமனைகளை ஆரம்பித்தல் ஆகியவற்றின் மூலமாக இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

ஆரம்பநிலையிலேயே நோயைக் கண்டறிந்து சரியான மருத்துவம செய்வதால் உடல் ஊனமுறுவது குறைகிறது. ஐம்பதுகளில் வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரியும் அதைச் சார்ந்த மருத்துவ மனையிலும் பணிபுரிந்த டாக்டர் பால் பிராண்டு, மாற்று அறுவை சிகிச்சை மூலமாக செயற்கை நகங்கள் பொருந்திய விரல்களால் இந்நோயாளிகள் தங்கள் கைகளைப் பயன்படுத்தும் வண்ணம் முதன்முதலில் ஏற்பாடு செய்தார். வேலை செய்து பிழைக்கக் கைகள் தேவை. எனவே இப்படிப்பட்ட அறுவை சிகிச்சையால் இயற்கையான கைகள் இயங்குவதுபோல் செய்வதால் தொழுநோயாளி தன் கைகளையே நம்பி வாழ்வான். இந்த மாற்று அறுவைச் சிகிச்சை, தொழுநோய் மருத்துவத்தில் ஒரு மைல்கல்லாகும்

தொழுநோய்ப் பற்றி எவ்வளவோ சொல்லபபட்டிருக்கிறது; எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் புதிய புதிய தொழுநோயாளிகள் மருத்துவத்துக்கும் வந்த வண்ணம் உள்ளனர். ஆரம்பகால மருத்துவம் உடல் ஊனங்களைத் தவிர்க்கிறது என்பது நமக்கு நம்பிக்கையைத் தருவதாக உள்ளது தொழுநோயாளி தன் வாழ்க்கை முழுதும, தொடர்ந்து மருத்துவம் செயது கொள்ள வேண்டும். இந்நோயை வருமுன்னரே தடுக்கும் மருந்தினைக் கண்டுபிடிக்க மருத்துவ ஆய்வு நடந்து கொண்டுள்ளது.

தொழுநோயைக குணபபடுத்த முடியும் எனறாலும, அந்நோயாளியைச் சமுதாயம் புறக்கணிப்பது தொடர்ந்து நடைபெறுகிறது. இதற்கு ஒரு முடிவு தேடவேண்டும் என்பதை முரளிதர் சவாலாக ஏற்றார்.

வரோராவின் அருகிலுள்ள தத்தாபூரில், காந்தியடிகளின் நிர்மாணத்திட்டங்களில் ஒன்றான இந்நோய்த் தடுப்பிற்கான மருத்துவமனையோடு கூடிய தொழுநோயாளிகள் குடியிருப்பு ஒன்று இருந்தது. தொழுநோயாளிகளின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும் அவற்றிற்கு ஒரு தீர்வு காணவும் முரளிதர் இந்தக் குடியிருப்புப் பகுதியில் அவர்களுடன் வாழத்தலைப்பட்டார். ஒரு சிறு குடிசையைக் கட்டி அதில் ஒருசில தொழுநோயாளிகளைக் குடியேற்றினார். இறுதியாக 1948-ல் தொழுநோயைக் கண்டறியவும் அதற்கு மருத்துவம் செய்யவும் தன்னுடைய ஊரான வரோராவில் ஒரு மையத்தை நிறுவினார்.

இதற்கிடையே தொழுநோயை எவ்வாறு பரவவிடாமல் தடுப்பது என்பது பற்றி அறியவேண்டுமென்று உணர்ந்ததால் கல்கத்தாவிலுள்ள வெப்ப மண்டல நோய்தீர்க்கும் மையத்தில்



தொழுநோயாளியைப் பற்றி பாபா : தொழுநோயால் பாதிக்கப்பட்ட என்னுடைய மக்கள் தங்களுடைய கைகளால் வானவில்லின் வண்ணங்கள் அனைத்தையும் தாங்கள் பயிரிட்டுள்ள காய்கறிகளில் கொண்டுவந்துள்ளனர்.



கௌரவமான வாழ்க்கை வாழும் மறுவாழ்வு பெற்ற பெண் தொழுநோயாளிகள்

இவர் ஓராண்டு தொழுநோய் சமபந்தப்பட்ட மருத்துவக்கல்வியும் பயின்றார். செயற்கை முறையில் தொழுநோயை விலங்கினத்திற்குத் தொற்ற வைக்க முடியாது என்பதால் இந்நோய்க்கு எவ்வித நோய்த்தடுப்பு மருந்துமஅநுகாறும இல்லை என்று அறிந்திருந்தார். முரளிதர் தன்னையே தொழுநோய் மருத்துவ ஆய்வுக்கு ஒப்படைத்து தன்னுள் தொழுநோயின் நுண்மங்களை ஊசிமூலம் செலுத்திக்கொண்டார். இச்செயல் அசாதாரணமான மனவலிமை உள்ளவர்களால்தான் இயலும ஆனால், அவரது உடலில் இதனால் எந்த மாற்றமும் நிகழவில்லை

1950-இல் தொழுநோயாளிகளைக் கவனிப்பதற்காக மகாரோகி சேவை சமிதியை நிறுவினார். தொழுநோயாளிகள தங்கி மருத்துவம் பெறவும சுதந்திரமாகவும் ஆக்கபூர்வமாகவும தொழிலில் ஈடுபடவும் ஒரு இடம் தேவை என்பதை உணர்ந்தார். அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க அடிப்படையாக அமைவது பொருளாதார சுதந்திரம ஒன்றுதான் என முரளிதர் தெளிந்தார்.

மாநில அரசிடம் சந்திராபூர் காட்டில் ஒரு சிறிது நிலத்தைக் கேட்டு வாங்கினார் வரோரா நகரத்தின் அருகிலுள்ள இந்தக் காட்டில் வனவிலங்குகளுமநதேள்களும் அதிகமாக இருந்தன. தன்னுடைய மனைவி சாதனா, தன் இரண்டு மகன்களான விகாஸ், பிரகாஷ், ஆறு தொழுநோயாளிகள், ஆகியோருடன், பதினான்கே ரூபாயகளுடன் முரளிதர் இங்கு வந்து குடியேறினார். மூங்கில்களால் குடிசைகளைக் கட்டி, கிணறு தோண்டி வாழக்கையைத் துவங்கினார்.

இதுதான் ஆனந்தவனம் என்ற மகிழச்சிக் கானகத்தின் துவக்கம்

முரளிதரை அன்போடு பாபா ஆம்தே என்றும பாபா என்றும் அழைக்கலானார்கள் வாழ்க்கை என்பது மகிழ்ச்சியும் நம்பிக்கையும கொணடது என்ற அடிப்படைக் கொள்கை உள்ளவராதலால் தொழுநோயாளிகளின் வாழ்வில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும மிளிரும்வண்ணம், அவர் உழைத்தார். தொழுநோயாளிகளுக்கு மருத்துவம் செய்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் தன் வாழ்வைக் கழித்தார்.

ஆனந்தவனத்தில் கடின உழைப்பு, கவனமானதிட்டம், உறுதியான கொள்கைப் பிடிப்பு ஆகியவைதான் குடிகொண்டன. உயர்வு தாழ்வு கருதாமல் அனைவரும் உழைத்தனர். அனைவரும் ஒன்றுசேர்ந்து மரங்களை வெட்டி பாறைகளை அப்புறப்படுத்தியும், நிலத்தை வயல்களாக்கியும, தோட்டங்கள் அமைத்தும், பாதைபோட்டும், வீடுகள் கட்டிக கொண்டும் வாழ்ந்தனர். இவ்வாறு ஒரு கூட்டுமுயற்சியாக சேவை செய்து வாழத் தொடங்கினர். "தொழுநோயாளிகளுக்கு வாழ ஒரு வாய்ப்பு நல்க வேண்டும், தர்மம செய்வதல்ல" என்று பாபா அடிக்கடி கூறுவார். முதலில் ஒரு சிறிய மருந்தகமாக இருந்தது காலப்போக்கில் பெரிய மருத்துவமனையாக வளர்ந்து. இப்போது இதில் நாளொன்றுக்கு 1500 உள் நோயாளிகளும் 500 வெளி நோயாளிகளும் மருத்துவ

சிகிச்சை பெறுகின்றனர். ஒவ்வொரு நோயாளியும் மிகுந்த கவனத்துடனும் அன்புடனும் கவனிக்கபபடுகிறார். தொழுநோய் சம்பந்தப்பட்ட ஆய்வை மேற்கொள்ள வாயப்புகள் இருப்பதோடு மட்டுமல்லாமல், அருகிலுள்ள கிராமங்களுக்கு சமுதாய சுகாதார சேவையையும் இம்மருத்துவமனை மேற்கொண்டு செய்கிறது.

ஆனந்தவனத்திலுள்ள மறுவாழ்வுத் திட்டம், நோயாளி முன்பு என்ன தொழிலை செய்து கொண்டிருந்தாரோ அத்தொழிலுக்கே மீண்டும செல்ல வழிவகை செய்கிறது. இது முக்கியமானது. ஏனென்னில், நோயாளிகள் குணமானபின் மற்றவர்களைப் போன்றே வழக்கமான வாழ்வை மேற்கொள்ளமுடியும் என்று மக்கள் உணர வேண்டும். இதைக் கருத்தில்கொண்டுதான் விவசாயம் பற்றிய அறிவைப் பயிற்சிமூலம் இவர்களுக்குக் கொடுத்தனர் நோயாளிகள் தாங்கள் முன்பு செய்து கொண்டிருந்த தொழிலையே தொடர மறுபயிற்சி கொடுக்கப்பட்டது. பாய் பின்னுதல், நெசவு செயதல், தோல் தொழில், மரவேலை, பட்டறைத் தொழில், அலங்காரக்கலை, ஆடுமாடுகளை வளர்த்தல், புத்தகம் பைண்டிங் செயதல, தையல் தொழில், இருமபுத் தகடு வேலை செய்தல், மருத்துவம் போன்ற தொழில்களில் மறுபயிற்சி கொடுக்கப்பட்டது. எனவே ஆனந்த வனத்திற்கு நோயாளிகள் பெருமளவில் வந்த வண்ணமிருந்தனர்.

1967-இல், நூறு கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள சோம்நாத்தில் வேறொரு மையத்தையும் துவக்கினார். இங்கும நோயாளிகள் காடுகளில் மரங்களை அப்புறப்படுத்தி வீடுகளைக் கட்டிக்கொண்டு தன்னம்பிக்கையோடு வாழ முனைந்தனர். சோம்நாத் பகுதியில் இருக்கும் நிலத்தடி நீரைச் சிக்கனமாக விவசாயத்திற்குப் பயன்படுத்திய செயல், மிகவும் சிறந்த ஒரு சாதனையாகும். அப்பகுதி முழுதும் ஆராய்ந்தறியப்பட்டது. மழை நீரைத் தேக்கி வைக்க சிறிய தடுப்பணைகள் கட்டப்பட்டன. வறண்டுகிடந்த சோம்நாத் பகுதி, மாதிரிப் பண்ணையாகத் திகழ்ந்தது. "தொழுநோயால் பாதிக்கப்பட்ட என்னுடைய மக்கள் தங்களுடைய கைகளால் வானவில்லிலுள்ள வண்ணங்கள் அனைத்தையும் தாங்கள் பயிரிட்டுள்ள காய்கறிகளிலே கொண்டுவந்தனர்." என்று பாபா பெருமிதமாகக் கூறினார்.

ஆனந்த வனத்தில் ஒரு பள்ளியையும இரண்டு கல்லூரிகளையும் நிர்மாணிப்பதற்கு இந்த நோயாளிகளுக்கு ஊக்கம் தந்தார். அங்கு வாழும் மக்கள் மட்டுமின்றி வெளியிடங்களிலிருந்து வரும் மக்களும் இங்கு படித்தனர். நாளடைவில் நிறையக் கட்டிடங்கள் எழும்பின. சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் சமுதாயத்திற்கு நன்மை செய்பவர்களாக மாறினர்.

பம்ராகர் பக்கத்தில் உள்ள ஹெமால்காசா என்ற இடத்தில் மற்றுமொரு திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இது பாபா ஆம்தே சிறுவயதில் கண்ட கனவை நிறைவு செய்கிறது. தன் சிறுவயது முதலே மடியாகோண்டு பழங்குடி மக்களைப் பற்றி இவர் அறிந்திருந்தார். எளிமையும் சூதுவாது இல்லாத நல்லகுணமும்

கொண்ட இவர்களை வெளியாட்களும் வியாபாரிகளும் காட்டிலாகா அதிகாரிகளும் சுரண்டிப் பிழைத்தனர். இப்பழங்குடி மக்கள், கற்கால மக்களைப்போன்று நேர்மையானவர்கள். வேட்டையாடுவதும் உணவு சேகரிப்பதும்தான் இவர்கள் தொழில்கள். உடலில் அதிக ஆடையின்றி, வெட்டவெளிக் குடிசைகளில் வாழ்ந்தனர். காட்டு விலங்குகள், தீ ஆகியவற்றின் தாக்குதலுக்கு இவர்கள் உள்ளாயினர், கடும் காய்ச்சலாலும் தீராத வறுமையாலும் அவதியுற்றனர். மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரபபிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்கள் ஒன்று சேருமிடமும், மூன்று ஆறுகளால் சூழப்பட்ட இடமுமான கட்சிரோலி மாவட்டத்தில் இப்பகுதி உள்ளது. இங்குள்ள காடுகள் அடர்ந்தும், அழகாகவும் நீண்டும் காணப்படுகின்றன. பாபாவின் மூத்தமகன் டாக்டர் விகாசும் அவருடைய மனைவி டாக்டர் பாரதியும் ஆனந்த வனத்திலுள்ள பெரிய மருத்துவமனையையும் மறுவாழ்வுப் பணியையும் ஏற்கெனவே பொறுப்பேற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர். பாபாவின் இரண்டாவது மகன் டாக்டர் பிரகாசும் அவருடைய மனைவி டாக்டர் மந்தாஹினியும் ஹெமால்காசாவிற்குச் சென்று பணிபுரிவதைச் சவாலாக ஏற்றனர். டாக்டர் பிரகாஷ் அறுவை சிகிச்சையில் மேற்கொண்ட பட்டமேற்படிப்பை விட்டுவிட்டு வசதிகளற்ற நிலையில் ஒரு சிறிய மருத்துவமனையை ஆரம்பித்தார். பின்னர், ஒரு மருத்துவமனை கட்டப்பட்டு அடர்ந்த காடுகளின் உள்ளே மருத்துவ வசதிகளும் செய்யப்பட்டன. இங்கு வேண்டிய உணவும் மருந்தும் வருடத்திற்கு இருமுறை கொண்டு வரப்பட்டன. மெல்லமெல்ல பழங்குடி மக்கள் மருத்துவம் செய்துகொள்ள வர ஆரம்பித்தார்கள். அவர்கள் பலவகையான நோய்களால் அவதியுற்றனர் குளிர்காலத்தில் இரவு நேரங்களில் தீ மூட்டி அதனருகில் படுத்துறங்குவதால் ஏற்படும் தீப்புண்களால் மிகவும் அவதிப்பட்டனர். காட்டு விலங்குகளால், அதுவும் குறிப்பாக கரடிகளால், கொடூரமான காயங்கள் ஏற்பட்டு வருந்துவது இவர்களிலே மிகவும் சாதாரணம். வறுமையின் காரணமாக, சத்தான உணவு உட்கொள்ளாததால் விளைந்த நோய்களும் அதைத் தொடர்ந்து வந்த மற்ற நோய்களும் இப்பழங்குடி மக்களிடையே சர்வசாதாரணமாகத் தென்பட்டன.


இந்த ஹெமல்காசா திட்டம் 'லோக் பிரதாரி' என்பதாகும். "மக்களின் சகோதரத்துவம்" என்று இது பொருள்படும். மருத்துவப் பணிதான் இத்திட்டத்தின் மற்ற பணிகளுக்கு முன்னோடியாக இருந்தது. இதன்நோக்கம் மிகவும் விரிந்து பரந்த ஒன்றாகும். வளர்ந்து வரும் நாகரிகத்தால் எளிமையும் அன்பிற்குமுரிய இப்பழங்குடிகளின் இனம், பூண்டற்று ஒழியாமல் காக்கப்பட வேண்டுமென்பதுதான் பாபாவின் முக்கிய நோக்கம்.

தங்களை மற்றவர்கள் சுரண்டிப் பிழைக்கிறார்கள் என்று இந்தப் பழங்குடிகளை உணரவைத்துப் பாதுகாக்க வேண்டுமென்று பாபா எண்ணினார். தங்களைத் தாங்களே சுயமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் அவர்கள் விவசாயத்தில் ஈடுபட

வேண்டும்: அவர்களின் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும். பாபா இவ்விரண்டையும் செய்தார். விவசாயத்தைப் பெருக்க உயர் ரக விதைகளை வழங்கினார். அவர்களே ஒரு பால் பண்ணையையும் நடத்துகின்றனர். பண்ணையைவைத்து கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். அனைத்திற்கும் மேலாக, பாபாவும் அவருடன் பணிபுரியும் ஏனையோரும் பழங்குடி மக்களுக்குத் தங்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்து மற்றவர்கள் அவர்களைச் சுரண்டிப் பிழைப்பதைத் தடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினர். பாபா மற்றும் அவருடைய குழுவினருக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையே தொடர்ந்து கருத்துப் பரிமாற்றம் நடந்தது. ஆறு துணை மருத்துவ மையங்கள் பெரிய மருத்துவமனையோடு இணைக்கப்பட்டு அடர்ந்த காடுகளின் உட்பகுதிகளிலும் சென்று செயல்படுகின்றன. பருவமழைக் காலங்களில் ஆறுகள் வெள்ளத்தால் பெருகி உடைந்து, போக்குவரத்தைத் தடுத்தாலும் மருத்துவமும் பிற பணிகளும் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதுதான் இந்த துணை மருத்துவ மையங்களின் தலையாய நோக்கமாகும். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியின் பொருட்டுக் கிராம ஊழியர்களுக்குப் பயிற்சி தந்து அவர்களை உருவாக்குவது இந்த ஹெமால்காசா லோக் பிரதாரி திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும். சுகாதாரக் கல்வி, விவசாயம் ஆகியவற்றில் தேர்ச்சிபெறவும், லஞ்ச ஊழல், அநீதி, சுரண்டல் ஆகியவற்றை எதிர்த்துப் போரிடவும் பழங்குடிகளை ஒன்றுதிரட்டித் தகுந்த பயிற்சி அளிக்கப்படுகிறது.


ஹெமால்சா திட்டம் பற்றிய கதை, சாதனைபுரிந்த வெற்றியின் கதையாகும். மேலும், மிகவும் தனிமைப்பட்டவர்கள் என்றும், எல்லாம் இழந்து போனவர்கள், எல்லாவற்றிலும் பின்தள்ளப் பட்டவர்கள் என்றும் பாபாவால் வர்ணிக்கப்பட்ட இந்த ஐம்பதாயிரம் மடியாகோண்டு பழங்குடிகளின் வாழ்வும், அவர்களது சுயகௌரவமும் பாதுகாக்கப்பட்ட பெரும் சாதனையின் கதையாகும் இது.

அண்மைக்காலத்தில் நாட்டின் பலபகுதிகளில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களையும், பயங்கரவாதத்தையும் கண்டு பாபா ஆழ்ந்த மனம் நொந்துபோய் இருக்கிறார். நன்மைக்கெதிரான நோக்கங்களையும் பிரிவினைவாத நோக்கங்களையும் கொண்டவர்களால் இப்படிப்பட்ட கொடூரமான செயல்கள் நடைபெறுகின்றன. தவறான வழிகாட்டுதலால் உந்தப்பட்ட இளைஞர்கள்தான் இவ்வகையான அட்டூழியங்களில் அடிக்கடி ஈடுபடுகின்றனர். எளியவர்களாகவும் தங்களைக் காத்துக்கொள்ள திறனற்றவர்களாகவும் இருக்கும் முதியோர், பெண்டிர் மற்றும் குழந்தைகள் இந்தக் கொடூரச் செயலுக்கு ஆளாகின்றனர். வன்முறை என்பது மூர்க்கத்தனமானது என்று பாபா கருதுகிறார். இந்த மூர்க்கத்தனத்தால் விளையும் அச்சுறுத்தல் இந்தியாவின் ஒற்றுமைக்கும் மேன்மைக்கும் ஊறுவிளைவிக்கும். இந்தியாவின் ஒற்றுமைதான் பாபாவுக்கு முக்கியம்; அதைக் காக்க எதையும்





நிர்மாணப் பணித்திட்டங்களில் ஈடுபட்டுள்ள மறுவாழ்வு பெற்ற தொழுநோயாளிகள்





(மேலே) காட்டு வளத்தைப் பெருக்க மலைவாழ் மக்கள் மரம் நடுதல்

(கீழே) பாபா ஆம்தேயின் தொண்டர் ஒருவரின் உதவியால் ஒரு மடியாகோண்டு மலைவாழ் மனிதன் மரக்கன்றுகளை எவ்வாறு நடுவது என்று அறிந்துகொள்ளுகிறான்.

தருவார் அல்லது செய்வார் இதைக் கருத்தில் கொண்டுதான் டிசம்பர் 1985-இல் கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை தான் மேற்கொண்ட பயணத்தில் இளைஞர்களை பங்குகொள்ளுமபடிக் கேட்டுக் கொண்டார். பல வருடங்களாக உடல் நலமின்றி இருந்தும் படுத்த படுக்கையாய் வண்டியில் இவர் பயணம் செய்தார். இப்பயணம் 'இந்தியாவை ஒன்றுபடுத்தும் பயணம்' என்று கூறப்படும். 'நாம் ஆங்கில அரசாங்கத்தை இந்தியாவைவிட்டு வெளியேறு என்று கூறினோம். தற்போது ஒருசில தீய சக்திகள் இந்தியாவைத் துண்டாட முயற்சிக்கின்றன. நான் இந்தியாவை ஒன்றுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்' என்று பாபா இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். பயணம் முழுதும் மக்களை நோக்கி, சகோதரனை சகோதரன் கொல்லுதல் கூடாது என்றும், ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தை தாக்குதல் கூடாது என்றும், ஒரு மொழியினர் வேறொரு மொழியினர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார். பயங்கர வாதத்தையும் வன்முறையையும் நிறுத்த வேண்டுமென்று இளைஞர்களைக் கேட்டுக் கொண்டார். "பொறுப்பு என்பது மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல" என்று உணர்ச்சியோடு பேசினார். பல மாநிலங்கள் வழியாக மேற்கொண்ட பயணம் இறுதியில் காஷ்மீரத்தில் முடிந்தது. இந்தப் பயணத்தில் பங்குகொண்டவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் மக்கள் உற்சாகத்தோடு வரவேற்று உபசரித்தனர்.

இந்தியாவை ஒன்றுபடுத்தும் பயணத்தின் மிகவும் குறிப்பிடத்தகுந்த அம்சம், பாபாவின் பஞ்சாப் பயணமும் அதைத் தொடர்ந்து அவர் அங்கே தங்கியிருந்த காலமும் ஆகும். பயங்கர வாதமும் வன்முறையும் பஞ்சாப் மக்களின் மனதில் ஏற்படுத்திய வடுக்களும் புண்களும் ஆறாது மனக்கசப்பை ஏற்படுத்தியிருந்த சமயத்தில்தான் பாபா அங்கே தங்கியிருந்தார். எல்லா இனங்களையும் சேர்ந்த பலநூற்றுக்கணக்கான மக்களின் துயரத்தில் பாபாவும் பங்கு கொண்டார். பயங்கரவாதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். நம்பிக்கையும் நட்புறவும் மக்களிடையே நிலவும் வரை பாபா பஞ்சாப் மாநிலத்தின் கிராமங்களில் நீண்டகாலம் தங்கினார்.

மீண்டும் 1988-ஆம் ஆண்டின் இறுதியில் கிழக்கே 'இடா' நகரிலிருந்து மேற்கே துவாரகா வரையிலும் ஐந்தாயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு பாபா ஒரு பயணத்தை மேற்கொண்டார். இம்முறையும் இளைஞர்கள் பெருமளவில் இப்பயணத்தில் பங்கேற்றனர். பாபா இந்தியாவின் ஒற்றுமையுணர்வையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தினார்.

பாபா ஆம்தே எத்தகைய மனிதர்? அவருக்கு அகத்தூண்டுதலாக விளங்கியவர் யார்? பாபா ஆம்தே மீது வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் பெருமளவில் செல்வாக்கு செலுத்தியிருக்கிறார். கவிஞராகவும் விளங்கிய பாபாவின் மராத்தியக் கவிதைகள், சிறந்த

கவிதையுணர்வுள்ளவையாகும். மகாத்மா காந்தியின்பால் பாபா மிகவும் ஈர்க்கப்பட்டார். காந்தியடிகளுக்கு ஏழைகள்பால் உள்ள ஈடுபாடு, இந்திய ஒருமைப்பாட்டிலுள்ள நம்பிக்கை, சத்தியத்தின் மீதுள்ள பற்று ஆகியவை பாபா உள்ளத்தில் ஓர் மன உறுதியை ஏற்படுத்தின. வார்தாவுக்கருகில் வாழ்ந்த மகாத்மாகாந்தியின் உண்மையான சீடரான வினோபாபாவே, பாபாவின் மனதில் நீங்கா இடத்தைப் பெற்றார். மகாராஷ்டிர முனிவர்கள் வழியில் வந்தவரான வினோபாபாவே கூர்மதி கொண்ட அறிவு ஜீவியாக விளங்கினார்.

பள்ளி ஆசிரியரான சானேகுருஜி பாபாவின் வாழ்வில் ஒரு வலுவான தாக்கத்தைச் செலுத்தினார். மகாராஷ்டிர மாநிலத்திற்கு வெளியே அவ்வளவாக சானே குருஜியை யாருக்கும் தெரியாது. நல்லுணர்வுகள் கொண்டவரான இப்பள்ளி ஆசிரியர், மனித சம உரிமைக்காகப் பாடுபட்டார். இந்தியாவின் ஒற்றுமை அவருக்கு உயிர்போன்றது. 'ஒன்றுபட்ட இந்தியா' எனப்பொருளபடும் 'அந்தர்பாரதி' என்ற இயக்கத்தை நிறுவியவர் இவரே. மராத்தியில எழுதிய "சியாமின் தாய்" என்ற நூல் இவர் எழுதிய நூல்களில் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. சானே குருஜி மிகவும ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவராதலால் ஏழ்மை நிலையைக் கண்டு மிகவும் வருத்தப்பட்டார். மனிதனை மனிதன் வன்முறையால் தாக்குவதும், சிறுமை, வேறுபடுத்திப் பார்க்கும் போக்கு, ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம ஆகியவற்றின் காரணமாக உள்ள துயரங்களைக் கண்டு அவர் மனம் வருந்தினார்.

மிகவும் உணர்ச்சிவயப்படும பாபா ஆம்தே , கிறிஸ்துவின் ஆளுமையால் மிகவும் கவரப்பட்டார். கிறிஸ்துவை சிலுவையில் அறைதலைக் குறித்து மராத்தியில் கவிதை ஒன்றை எழுதியுள்ளார். கிறித்து மனித இனத்துக்காக இரக்கப்பட்ட தன்மை பாபாவின் வாழ்க்கையில் மிகவும் ஆழமாகவே வேரூன்றிவிட்டது.

மதவெறியை பாபா அறவே வெறுப்பவர். ஆனால் எங்கு புனிதத்தன்மை இருந்தாலும் அதை மதிப்பவர். பாபாவின் ஆளுமைத்தன்மை உறுதியானது. வாழ்வை மகிழ்ச்சியாக நடத்தவேண்டும் என்று கருதுபவர்; நகைச்சுவை நிரமபியவர். உடல் நலமில்லை என்றாலும் நாளில் பலமணி வேலை செய்பவர். தொழுநோயைக் குணப்படுத்துவதில் முன்னோடியாக சேவைபுரிந்ததால் பல விருதுகளைப் பெற்றுள்ளவர். பல்வேறு வகையான சேவைகளுக்காகப் பலகௌரவங்கள் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றையெல்லாம் பாபா மிகவும் சாதாரணமாகக் கருதுகிறார். மக்களைச் சந்திபபதில் விருப்பமுள்ளவர்; குறிப்பாக இளைஞர்களைச் சந்திப்பதில் பெருவிருப்பு உள்ளவர். துயரத்தில் அவதியுறுபவர்களிடம் மிகவும் இரக்க சிந்தனையுடன் பேசுபவர். மிகுந்த உற்சாகம் உள்ளவர். இசையை மிகவும் விரும்பிக் கேட்பவர். இந்தியாவின் புகழ் வாய்ந்த பல பாடகர்கள் இவரின் உற்ற நண்பர்களாக உள்ளனர்.

குழந்தைகளுடன் விளையாடுவதில் அதிக விருப்பமுள்ளவர்.

நற்குணங்கள் பல நிரம்பப் பெற்ற பாபாவை எவ்வாறு விளக்குவது? இந்திய சமுதாயம் தன் அன்புத் தொண்டர்களுக்கு நல்விருதுகள் பல அளித்து கௌரவப்படுத்துகிறது. "வாழும் உண்மை" என்று காந்தியடிகளையும். "பளிங்குபோல் தூய்மையானவர்" என்று நேருவையும், "இந்திய மறுமலர்ச்சியின் தலைவன்" என்று தாகூரையும் கூறுகிறோம். "பொறுமையற்ற தீர்க்கதரிசி" என்று பாபாவைக் கூறலாம். பாபா தான் கனவு கண்ட இந்தியாவில் ஒவ்வொருவரும் அமைதியாகவும், சுயகௌரவத்தோடும். வாழ்வில் மகிழ்ச்சி, நம்பிக்கை, படைப்பாற்றல் அடையப்பெற்று வாழுபவராகவும் கனவு கண்டார். இவற்றையெல்லாம் ஒரு இந்தியன அடையவேண்டுமென்பதே பாபா கண்ட கனவு

"என் ஆன்மாவைத்தேடினேன், நான் ஆன்மாவைக் காணவில்லை:

என் இறைவனைத் தேடினேன், நான் இறைவனைக் காணவில்லை:

என் சோதரனைத் தேடினேன், மூவரையுமே கண்டுகொண்டேன்"

என்பதுதான் தன் வாழ்க்கைத் தத்துவம் என்று விளக்குகிறார், பாபா ஆம்தே.

IV

# 'சேவா'—கண்ணியத்திற்கான பெண்களின் போராட்டம்

*"பழங்காலத்து அடிமைகளுக்குத் தாங்கள் விடுதலை அடைய முடியும் என்று தெரியாது. இன்றைய இந்தியப் பெண்களின் மனநிலையும் அதைப்போன்றதே. அடிமை விடுதலை அடைந்தபோது முன்னால் இருந்த ஆதரவை இழந்து விட்டதுபோன்ற உணர்வினால் சிலகாலம் அவன் சங்கடப்பட்டான். பெண்களோ, தாங்கள் ஆண்களின் அடிமைகள் என்று கருதும் வண்ணம் நடத்தப்பட்டார்கள். தங்களுடைய கௌரவத்தை அறிந்து கொள்பவர்களாகவும், ஆண்களுக்குச் சமமான உரிமை உள்ளவர்களாகவும், எல்லா சமுதாய நிகழ்வுகளிலும் பங்கேற்பவர்களாகவும் பெண்களை இருக்கச் செய்ய வேண்டுமென்பது இன்றியமையாதது. இப்படிப்பட்ட ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்று தீர்மானித்தால், அதை அடைவதென்பது மிகவும் எளிது. எந்த ஒரு அந்நியனும் விருப்புவெறுப்பின்றி நம் சமுதாயத்தைச் சீர்தூக்கிப்பார்த்தால் நம் சட்டங்களும் வழக்கங்களும் பெண்களுக்குத் தாழ்வானதொரு சமூகத் தகுதியையே தருகின்றன என்பதனை அறிவான். அடிப்படையில் இது தவறானதாகும். அடிப்படையையே மாற்றியாக வேண்டும். இவ்வாறு பெண்களை அடிமையாக வைத்திருப்பதால் இந்தியாவில் மேற்கொள்ளும் எல்லா சமூக நிர்மாணப் பணித்திட்டங்களும் முழுமை பெறாமலும் உயிரோட்டமில்லாமலும் அமைந்துவிடுகின்றன."*

*-மகாத்மாகாந்தி, குஜராத்தியில் எழுதிய "நிர்மாணப் பணித்திட்டம்" "தியாகமூர்த்தி" என்ற இரண்டு நூல்களிலிருந்து.*

காந்தி தென்னாப்பிரிக்காவில் போராட்டங்களில் ஈடுபட்டு பெற்ற வெற்றிக்குப் பிறகு 1915-இல் இந்தியாவிற்குத் திரும்பினார். பீகாரில் சம்பரன் மாவட்டத்தில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டு வெற்றி பெற்றார். அதற்குப் பின் அகமதாபாத்தில் தன் ஆசிரமத்தில் நிரந்தரமாகத் தங்கலானார்.

நூற்பாலைகள் இந்தியாவின் தொழிற்புரட்சியின் ஒரு பகுதியாக அமைந்தன. மேற்கத்திய நாடுகளில் தொழிற்புரட்சியின்போது

ஏற்பட்ட சமூக மாறுதல்கள் போன்றே இந்தியாவிலும இப்புரட்சியின் போது எதிர்மறையான சமூக மாறுதல்கள் நிகழ்ந்தன. குறைந்த ஊதியம், நீண்ட வேலை நேரம், சோர்வூட்டக்கூடிய பணிச்சூழல், வாழத் தகுதியற்ற வீடுகள ஆகியவை நிலவின; அவர்கள் வாழ்ந்த குடிசைகள் நெருக்கமாக இருந்தன; இழிவான நிலை இருந்தது. இந்தத் தொழிலாளர்களெல்லாம் நிலமற்றவர்களாக இருந்ததால் வாழ வழிதேடித் தங்கள் கிராமங்களை விட்டு நீங்கி நகரங்களை நோக்கிக் குடியேறினர். அகமதாபாத்தில் என்றும் வளர்ந்து வரும் நூற்பாலைகளில் அவர்களில் பலர் வேலையில் சேர்ந்தனர்.

காந்தி 1922-இல் நல்ல ஊதியம தரக்கோரி நூற்பாலைத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி வேலை நிறுத்தத்தை நடத்தினார் அவ்வேலைநிறுத்தம் வெற்றி அடைந்தது. வேலை நிறுத்தம் முடிந்த பின்னர் இந்த நூற்பாலைத் தொழிலாளர்களைக்கொண்டு தொழிலாளர் சங்கம் நிறுவி அதை 'மஜுர் மகாஜன்' (நூற்பாலைத் தொழிலாளர்கள் சங்கம்) என்றழைத்தார். இதுதான் இந்தியாவில் முதன்முதலில் ஆரமபிக்கப்பட்ட காந்தியத்தொழிலாளர் சங்கம் ஆகும். இது கடந்த 140 ஆண்டுகளில் மிகப் பெரிய அளவில் வளர்ந்துள்ளது. இசசங்கத்திற்கு வர்க்கப்போரில் நமபிக்கையில்லை. வேலை நிறுத்தமோ, வேலை நிறுத்தம் செய்வதென்ற அச்சுறுத்தலோ அல்லது எவ்வித வனமுறையோ இன்றித் தொழிலாளர்களுக்கும் நூற்பாலை உரிமையாளர்களுக்கும் இடையே ஏற்படும பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுளளது

'மஜுர் மகாஜன்' தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் வளர்ந்த ஒன்றுதான் "சேவா" ஆகும். இது, பெண்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் தொழிலாளர் சங்கமாகும். இலா பென் என்று அன்புடன் அழைக்கப்படும் திருமதி இலா பட் என்ற பெண்மணி இதை நிறுவினார். பல ஆண்டுகளாக மஜுர் மகாஜன் பெண்கள கிளைக்குப் பொறுப்பாளராக இவர் இருந்து வந்தார். எனவே தொழிலாளர்கள் பிரச்சினைகள் பற்றி அறிந்திருந்தார். மற்றும் அவர்களை ஒன்று சேர்ப்பதில் உள்ள நன்மைகளும் அவருக்குத் தெரியும்.

ஆனால் அவரது சிந்தனை வேறு பக்கம் இருந்தது. அகமதாபாத் நகரில் கைவண்டிகளை இழுத்து உழைக்கும் பெண்களின் இழிநிலையைக் கண்டிருந்தார். "நகரங்களிலும் கிராமங்களிலும எவ்வித அமைப்புமின்றி உழைக்கும் இப்படிப்பட்ட பெண்களை எல்லாம் ஒன்றுதிரட்டி ஓர் அமைப்புக்குள் சேர்ப்பது யார்?" என்று சிந்தித்தார். இப்பெண்களின் வாழ்க்கை மிகவும கடினமானதாகவும், இழிநிலையினதாகவும், கூலி குறைவானதாகவும், இன்னும் பல குறைகளிருந்தும் மக்களுக்கு அவர்கள் சேவை புரிந்தனர். இவ்வாறு சுயதொழில் புரியும் பெண் தொழிலாளர்கள பல்லாயிரக்கணக்கில் இருந்தனர்.

இந்நிலையில்தான் இலா பென், 'சேவா' என்ற பெண்களுக்கான சங்கத்தை அமைத்தார். Self-Employed Women's Association என்ற ஆங்கிலத்தொடரிலுள்ள சொற்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்தால் SEWA என்ற சொல் கிடைக்கும். "சுயதொழில் புரியும் பெண்களின் சங்கம்" என்று பொருள்படும். சுயதொழில் புரியும் ஏழைப் பெண் தொழிலாளர்களின் கௌரவத்தைக் காக்கவும் அவர்களை மேம்படுத்தவும் மஜூர் மகாஜன் என்ற தொழிலாளர் சங்கத்திலிருந்து பிரிந்து சேவா சங்கம் நிறுவபபட்டது.

நவீன தொழிற்சாலைகளில் பணிபுரியும் நகரத் தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதென்பது ஓரளவுக்கு எளிது. அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பணிபுரிகின்றனர்; ஒருவரை ஒருவர் தினமும் சந்திக்கின்றனர்; பணிபுரியும் நேரத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பொதுவானவை, அவர்களுடைய ஊதியமும் ஒன்றாகவே இருக்கும். இந்தக் காரணங்களால் தாங்கள் சேர்ந்திருக்கும் குழு வலுவான ஒன்று என்று நினைப்பார்கள். ஒன்றுபட விரும்புவார்கள. தொழில் துறையில் தொழிலாளர் சங்கங்கள் நன்கு வலுவானதாக அமைக்கப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் உளளன. தொழிலாளர் நல்ல ஊதியம் பெறவும், தொழில் புரிய நல்ல சூழல் நிலவவும் இத்தகைய தொழிற்சங்கங்கள் பாடுபடுகின்றன.

ஆனால் சுயதொழில் புரிவோர், விவசாயத்தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோரை ஓர் அமைப்புக்குள் ஒன்று திரட்டுவதென்பது அவ்வளவு எளிதான செயலல்ல. இவர்கள் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்திப்பதில்லை; உதிரிகளாகவே தொழில் புரிகின்றனர். மிகவும் ஏழைகளாக இருக்கும் இவர்கள் அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வதென்று கவலையுள்ளவர்களாதலால் தாங்கள் ஓர் அமைப்பாக ஒன்றுசேர வேண்டுமென்ற எண்ணம் எவ்வித உடனடி நிவாரணத்தையும் கொடுக்காது எனறு கருதுபவர்கள். நல்ல தொழில் சூழல் பெற வேண்டுமென்று ஒன்று சேர்பவர்களுக்கு மன உறுதியும், ஒன்றாக இருக்கிற மனவலிமையும் வேண்டும். ஆனால் இந்த மனவுறுதி இவர்களிடம் இல்லை. ஒன்றுசேர்வதன் நன்மைகள் என்னவென்று இவர்களுக்குத் தெரியாது.

சுயதொழில்புரியும் பெரும்பாலான ஆண், பெண்கள் ஏழைகளாகவும் ஒருங்கிணைக்கப்படாத துறையைச் சார்ந்த தொழிலாளர்களாகவும் உள்ளனர். கூடையில் காய்கறி, பழம் விற்போர், சந்தைகளிலும், கடைவீதிகளிலும், பேருந்து நிலையங்களிலும் அன்றாடம் வேலை தேடி வந்து காத்துநிற்கும் அத்துக்கூலிகள், கந்தல் துணிகளைப் பொறுக்குவோர், பழைய காகிதங்களைப் பொறுக்குவோர், கைவண்டி இழுப்போர், வீட்டிலேயே டெக்ஸ்டைல் பிரிண்டிங் செய்வோர், பீடி சுருட்டுவோர், பூவிற்பவர், வீட்டு வேலையாட்கள், நடைபாதையில் செருப்புத் தைப்போர், மற்றும் நாள்தோறும் நகரங்களில் நாம் காணுகிற பல ஆயிரக்கணக்கான ஆண், பெண் தொழிலாளர்கள்

இவர்களெல்லாம் ஒருங்கிணைக்கப்படாத துறையைச் சார்ந்த தொழிலாளர்கள் ஆவர். இத்தொழிலாளர்களுக்கு நிரந்தர வருவாய் இல்லை. இவர்கள் கைவண்டி இழுத்துத் தொழில் புரிபவராகவோ அல்லது வட்டிக்குப் பணம் கொடுக்கும் வியாபாரிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்து தருபவராகவோ இருப்பர். இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வேலை நேரம், நிரந்தர வருவாய், வியாபாரத் தொடர்புகள், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகிய எதுவும் இல்லை. இத்தொழிலாளர்கள் வியாபாரிகளின் தயவில் வாழ்கின்றனர். சுரண்டி வாழும் தரகர்கள் மூலமாய் வியாபாரிகள் இத்தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நகரங்களில் இத்தொழிலாளர்கள், காவல்துறையினர் போன்ற அரசு அதிகாரிகளின் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். இத்தொழிலாளர்களிடம் தொழில் செய்வதற்குரிய உரிமம் இருக்கிறதா என்று காட்டச் சொல்லியும், நடைபாதையில் கடைவைத்துப் போக்குவரத்தைத் தடை செய்வதாகச் சொல்லி அவ்விடத்தை விட்டுக் காலி பண்ணச் சொல்லியும் துன்புறுத்தப்படுகிறார்கள்.

வியக்கத்தக்க அளவில், சுயதொழில் புரிவோரில் பலர் பெண்களாவர். ஆண்களைப் போன்றே இப்பெண்களும் ஒன்று திரண்டு தங்களை ஓர் அமைப்புக்குள் இணைத்துக் கொள்ள முடியாது. மேலும் இவர்கள் பெண்களாக இருப்பதால் ஒன்றிணைவது முடிவதில்லை. படுமோசமான சூழலில் இப்பெண்கள் வேலை செய்கின்றனர். படிப்பறிவு இல்லாததால் புரிந்துகொள்ளும் திறன் குறைவாகவும் உலக நிகழ்வுகளைப் பற்றிய போதிய அறிவு இல்லாதவர்களாகவும் உள்ளனர். இத்தொழிலாளர்கள் தங்கள் பணத்தேவைக்காகச் சுரண்டல் பேர்வழிகளையும் வட்டிக்குப் பணம் தருபவரையும் நிரந்தரமாக அண்டிப் பிழைக்கிறார்கள். தொழிலாளர்களுக்குப் பணம் மிகவும் முக்கியமாதலால் வட்டிக்குப் பணம் தருபவரைத் தங்கள் பாதுகாவலராகவும், அவருக்குத் தாங்கள் கடமைப்பட்டவர்களாகவும் கருதுகின்றனர். வாழ்க்கைப் போராட்டத்தில் தங்கள் குடும்பத்தாரிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் எவ்வித உதவியும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்களது வாழ்க்கை ஒரு தனிப்போராட்டமாகும்.

அகமதாபாத்தில் கைவண்டி இழுக்கும் பெண்தொழிலாளர்களின் அவலநிலையை இலா பென் கண்டு வருத்தமுற்றார். இந்தப் பெண்கள் ராஜஸ்தான், மகாராஷ்டிரம் ஆகிய அண்டை மாநிலங்களைச் சேர்ந்தவர்களாவர். எப்படியோ வாழ்ந்தால் போதுமென்று வந்தவர்கள், உயரமாகவும் உடலுறுதி வாய்ந்தவர்களாவும் இருப்பதால் தானியங்கள், காய்கறிகள், வீட்டுச் சாமான்கள், எஃகு இரும்புச் சாமான்கள், பழைய பேப்பர், பெட்டிகள் போன்ற பலவகையான பொருட்களையுடைய பெரிய

பெரிய மூட்டைகளை ஏற்றிய கைவண்டிகளை இழுக்க முடியும். சுருக்கமாகக் கூறினால், நகரத்தில் ஐந்துகிலோ மீட்டர் தூரத்திற்குள் எதையும் கைவண்டிகள் மூலமாய் எடுத்துச் செல்ல இப்பெண்கள் உதவுகின்றனர். நாளின் முடிவில் கடுமையான உடலுழைப்பால் ஓய்ந்து போகின்றனர். ஒருநாள் உடல்நலம் சரி இல்லையென்றால் அடுத்த நாள் உணவே பிரச்சினையாகிவிடும். குழந்தை பிறந்த ஏழாவது நாளே கூலி வேலை செய்ய இப்பெண்கள் வந்துவிடுகின்றனர். இதை யாரும் நம்பாமல் இருக்கலாம். அச்சிறு குழந்தையை வண்டிக்கடியில் தூளி கட்டி, வண்டி இழுப்பர்.

"இவர்கள் வாழ்க்கை இப்படியே தொடர வேண்டுமா? இவர்களின் நிலை உயர ஏதாவது செய்ய முடியுமா?" என்று இலா பென் சிந்தித்தார். எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் இல்லாமல் பணிபுரியும் அர்ப்பணிப்பு மனம் கொண்ட, உயர்ந்த கல்வியறிவுள்ள ஒருசில இளம்பெண்களை இலா பென் ஒன்று திரட்டினார்.

1969-இல் அகமதாபாத்தில் சுயதொழில் புரியும் பெண்கள் சங்கம் ஒன்று நிறுவினார்கள் இது 'சேவா' என்றழைக்கப்பட்டது. சேவா என்றால் சேவை என்று பொருள்.

இச்சங்கத்து உறுப்பினர்கள் கூலிவேலை செய்யும் பெண்களைத் தனித்தனியாகவும் குழுவாகவும் சந்தித்துப் பேசினர். குழுவாக சந்திக்கும்போது அவர்களது பிரச்சினைகளை மனம்விட்டுப் பேசும்படி ஊக்குவித்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயன்றனர்.

பிரச்சினைகள் எண்ணிக்கையில் அதிகமாகவும் குழப்பம் நிறைந்ததாகவும் இருந்தன. ஆனால் இலா பென்னும் அவரது சகாக்களும் கூலி வேலை செய்யும் பெண்களை அவரவரது இல்லங்களில் சந்தித்து அன்றாட வாழ்க்கையை நன்கு கேட்டறிந்தனர். முடிவாக, பிரச்சினைகள் என்னென்ன என்பதனைக் கண்டறிந்து அவைகளுக்குத் தீர்வுகள் காணவும் முறையான முயற்சிகளை மேற்கொண்டனர்.

வறுமை, எழுத்தறிவு இன்மை, அறியாமை, திறன் இல்லாமை இப்படி அப்பெண்களின் பிரச்சினைகள் பலப் பல. திறனற்ற பெண்கள் செய்யும வழக்கமான தொழில்களுக்கு குறைந்த கூலியே தரப்பட்டது. பொதுவாக, திறன்வாய்ந்த அல்லது ஓரளவுக்குத் திறன்வாய்ந்த தொழில்களை ஆண்கள் மேற்கொண்டு அதிகக்கூலி சம்பாதித்தனர். இந்த நிலை, பெண்கள் தங்களுடைய திறன்களை வளர்த்துக் கொள்ளத் தடையாக ஆகிவிடுகிறது. அதனால் அதிக கூலிபெறவும் இயலாமல் போய் விடுகிறது. தேக்கநிலை உண்டாகிறது. ஒரே வியாபாரிக்குக் கொடுக்கப்படுகின்ற மாதிரியான பொருள்களை இவர்கள் உற்பத்தி செய்வதால் மிகுந்த அளவில் பெண்கள் சுரண்டப்படுகிறார்கள். வியாபாரி இவர்களிடம் தரும் மூலப்பொருள்களின் விலை அதிகமாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் விலை குறைவாகவும், சில நேரங்களில் உற்பத்தி

செய்யப்பட்ட பொருள்களில் ஒருபகுதி காரணமின்றி தேவை இல்லை என்று தள்ளப்படுவதும் நடைபெறுகிறது. அவர்கள் தகுந்த விலையில் மூலப்பொருள்களை வாங்க இயலுவதில்லை. உதாரணமாக, கூடைமுடையத் தேவையான மூங்கில், பீடி செய்யத் தேவையான புகையிலை, அதைச்சுருட்ட இலை, டெக்ஸ்டைல் பிரிண்டிங்குக்குத் தேவையான வண்ணங்கள், அச்சுவார்ப்புகள், மெத்தை செய்ய நூற்பாலை கழிவுப் பொருள்கள், பொம்மைகள் செயய கிழிந்த துணிகள் மற்றும் பல. பெண்கள் தங்கள் வீடுகளிலேயேதான் பொருளகளை உற்பத்தி செய்யவெண்டும்; அதற்கென்று தனியான இடம் ஏதும் இல்லை. அவர்கள் குடியிருக்கும் வீடுகள் வசதிகளற்ற ஒற்றையறைக் குடியிருப்புகளாகும். உறபத்தி செய்த பொருட்களை எவ்வாறு விற்பதென்றும், எப்படித் தங்கள் திறனைப் பயன்படுத்தி லாபம் சம்பாதிப்பதென்பதும் இவர்களுக்குத் தெரியாது. இதற்கு இரு பெரிய காரணங்கள் உள. முதலாவதாக இவர்கள தினமும் உழைத்து சமபாதிக்க வேண்டும்: நாள்கணக்கில் காத்திருக்க முடியாது. இரண்டாவது, போக்குவரத்துச் சாதனம், சேமிப்புக் கிடங்கு ஆகியன இல்லாததால் வெகுதொலைவில் உள்ள சந்தைகளுக்குத் தங்கள் பொருட்களை எடுத்துச செல்ல வேண்டும; இதுவும இயலாது.

இது ஒரு புறமிருக்க, பண்பாட்டுக் கூறுகளும் குடும்பப் பொறுப்புகளும் அவர்களின் தொழிலில் மேலும் தடைகளாக உள்ளன. பெண்கள தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளபோது அவர்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள சரியான ஆதரவு தேவைப்படுகிறது. பயிற்சி பெற்ற திறமையான ஆயாக்கள் பணிபுரிகின்ற குழந்தைக் காப்பகங்கள் தேவை; ஆனால் அக்காப்பகங்கள் இல்லை. அதனால் வேலை செய்யும்போது குழந்தைகளைத் தங்களுடன் வைத்துக் கொள்ளவோ அல்லது அவர்களை அறவே புறக்கணிக்கவோ வேண்டியவர்களாகின்றனர்.

குடிப்பழக்கம் போன்ற பொறுப்பற்ற நடத்தையுள்ள ஆண்கள், குடும்பத்தில் மிகவும் மோசமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள். இந்தியாவில் பல சமூக வழக்கங்கள் சில்லறைத்தனமாகவும் அடக்குமுறை கொண்டதாகவும் உள்ளன. ஆனால் ஒருசிலரே, அதிலும் இளைஞர்கள்தான், தைரியமாக அவ்வழக்கங்களை எதிர்க்கின்றனர். பொதுவாக, இவ்வழக்கங்களால் பெண்களே அதிகமாக இன்னல்களுக்குள்ளாகின்றனர். உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தால் குடும்பத்தில் போதிய உணவு இல்லையென்றால் பெண்தான் கொஞ்சமாகவும் இறுதியாகவும் உணவு உட்கொள்கிறாள். போதாத உணவும், கடினமான உடலுழைப்பும் அவர்களின் உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.

நகர்ப்புறக் குடிசைப் பகுதியிலுள்ள தலைவர்களும் முரடர்களும் இப்பெண்களை மிகவும் துன்புறுத்துகிறார்கள். இந்தியாவில் இன்னும் சாதியின் ஆதிக்கம் வலுவாக உள்ளதால் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இப்பெண்கள் நல்ல தொழிலை மேற்கொள்ள


மறுக்கபபடுகிறார்கள். தண்ணீர் கொண்டு வருவதும், எரிக்க விறகு கொண்டு வருவதும் ஒரு பெண்ணின் பொறுப்பாகிறது. இத்துடன் குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் கூடி விடுகிறது. காய்ச்சலால் அவதியுறும்போது நல்ல மருத்துவம் செய்யமுடிவதில்லை. கர்ப்பிணியாக இருக்கும்போது தொடர்ந்து மருத்துவக் கவனிப்பு கிடைப்பதில்லை. ''ஏழைகள்; அதிகாரமற்றவர்கள்; அடிக்கடி கர்ப்பமாக இருப்பவர்கள்'' என்று இப்பெண்களைப் பற்றிக் கூறுவது சரிதான்.

சேவா சங்கம் இவ்வகையான பிரச்சினைகளைக் கண்டறிந்து செயல்பாட்டுக்கான உத்திகளைத் திட்டமிட்டு தீர்மானித்தது. சேவா கண்டறிந்த பெண்களின் பிரச்சனைகள் சில அனைவருக்கும் பெதுவானவையாக இருந்தன; சில பிரச்சனைகள குறிப்பிட்ட ஒரு தொழில்புரிகிற ஒருசிறிய குழுவுக்கு மட்டுமே உரியதாகக் கண்டறியப்பட்டன. சேவாவின் ஒவ்வொரு குழுவும் அதன அடிப்படைப் பிரச்சினையை அணுகி ஆராயக் கேட்டுக்கொள்ளப்பட்டது. சேவா தலைவிகளுக்கும் பெண் தொழிலாளர்களுக்குமிடையே ஒருவரை ஒருவர் நம்பிக்கை கொள்வதற்கு ஏற்றமுறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அந்த நமபிக்கை இருந்ததால்தான் அப்பெண் தொழிலாளர்கள் எல்லாவித இடையூறுகளையும் இன்னல்களையும் தைரியமாக எதிர்கொளள விருப்பங்கொண்டனர்.

ஒரு பொதுவான போராட்டத்திற்கு பெண் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதுதான சேவாவின் அடிப்படை உத்தியாகும. வட்டிக்குக் கடன்தரும் தனியார், உள்ளூர் குடிசைப் பகுதித் தலைவர்கள், பெரிய வியாபாரிகள, மதுவிற்போர், சில்லரை அரசியல்வாதிகள் ஆகியவர்களை இது பெரிதும் பாதித்தது. சில நேரங்களில் பொது நிறுவனங்கள் கூட இவ்வகை ஒருங்கிணைப்புகளுக்கு விரோதமாக நடந்து கொண்டன. அப்படிப்பட்ட நிலையில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை இவ்விணைப்புகள் சரியாகச் சமாளிக்க வேண்டியவைகளாகின்றன. இதன் விளைவாகவும், விரோத மனப்பான்மை கொண்ட பெரிய வியாபாரிகள் கடன் கொடுக்கவில்லை என்ற நிலையிலும் கூட்டுறவு வங்கிகள் அமைக்கலாம்; இதன் மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்னும் விடை கிடைத்தது.


எவ்வளவு காலத்திற்கு சேவா சங்கத் தலைவிகள் இந்தப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டேயிருப்பது? எடுத்ததெற்கெல்லாம் தொழிலாளர்கள் தங்கள் தலைவிகளையே எதிர்நோக்கியிருந்தால், சேவா சங்கம் இயக்கமாகாது. குழு உறுப்பினர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, தங்களது பிரச்சினைகளைத் தாங்களே சமாளிக்க வேண்டும். மகாத்மா காந்தி, தன்னுடைய மனைவி கஸ்தூரிபாவின் பேரில் கணிசமான நிதி திரட்டியபோது, அந்நிதியைப் பெண்களே பொறுப்பேற்று





(மேலே) முதுகை முறித்தெடுக்கும் வேலையாகிய பீடி சுருட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்

(கீழே) கூட்டுறவுச் சங்கத்தின் பெண் உறுப்பினருக்கு பால்மாடு ஒரு நல்ல வருவாய்



*(மேலே) பெண்ணொருத்தி தன் வருவாயைக் கொண்டு தன்பேரில் வங்கிக் கணக்கு ஆரம்பித்தல்.*

*(கீழே) காய்கறிகளை விற்றுச் சுயதொழில் செய்யும் பெண்கள்*

நிர்வகிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். சிலர், "பெண்களுக்கு, கணக்கு வழக்குகளை எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டுமென்று முன் அனுபவம் இல்லையாதலால் தவறுகளைச் செய்ய நேரிடும்" என்று கூறியபோது காந்தி சுருக்கென்று பதிலளித்தார்–"தவறுகளைச் செய்யட்டும்" என்று. சேவா சங்கத்தலைவிகளும் காந்தி கூறிய கொள்கைப்படி பெண் தொழிலாளர்கள தவறுகளைச் செய்தால் அவற்றிலிருந்து அறிவு பெற்றுச் சுதந்திரமாக வாழக கற்றுக் கொள்வார்கள என்று நம்பினர்.

சுயதொழில்புரியும் பகுதி முழுதுமே சுதந்திரமாகத் தொழில் செய்யும் பெண்கள் அடங்கியது. அவர்களுக்குக் கூட்டு வலிமை என்பது இல்லாததால் பஞ்சாயத்துகள், நகராட்சிகள், மாநில அரசுகள் ஆகியவை எடுக்கும் தீர்மானங்களில் அவர்களால் எவ்விதத் தாக்கமும் செலுத்த முடியவில்லை. இருபபினும், தங்கள் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால், இப்பெண் தொழிலாளர்கள தங்களுடைய தேவைகளையும ஆசைகளையும கவனத்தில் எடுததுக் கொளளுமபடியாக அரசு அதிகாரிகளை வற்புறுத்தியாக வேண்டும். வேறு முறையில் கூறினால், அரசின் கொள்கைகளில் தங்களுடைய நலன்களை அரசு கருததில் கொளளுமபடியாக வற்புறுத்துவதற்கேற்ற வலுவான ஒரு குழுவை இவர்கள உருவாக்க வேண்டும. இது நிகழவேணடுமானால் இப்பெண் தொழிலாளர்கள் மத்தியிலிருந்தே நல்ல ஒரு தலைமை உருவாக வேண்டும. தொடக்கத்தில் இவர்களுக்கு வலிமையைச் சேர்க்கவும் நம்பிக்கையை வளர்க்கவும் வெளியார் தலைமை தேவைபபடும் . கிரியா ஊக்கியாகச் செயல்படும இந்தத் தலைமை, பெண் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளின் அனைத்துப பரிமாணங்களை அறிந்ததாக இருக்க வேண்டும. எடுத்துக் கொண்ட செயலில் நமபிக்கையும், சுயநலமிகளை எதிர்ததுப் போராடும் திறனும் பெற்றிருக்க வேண்டும. எல்லாவற்றிற்கும மேலாக, அரசுத் தரப்பில ஆதரவு என்பது பல வருடப போராட்டததிறகுப் பின்னர்தான் வரும்; அது வரையில் பொறுமையாக இருக்கவேண்டும. மேலும், உதிரிகளாக வேலை செய்யும் பெண் தொழிலாளர்களைக் குழுவாக ஒன்று திரட்டி அதன் வலிமையைக் காட்ட வேண்டும. இங்ஙனம் வெளியிலிருந்து வரும தலைவர்கள், பொதுவாக நகரத்து உயர் வகுப்பைச் சேர்ந்த உயர்ந்த கல்வியறிவு பெற்ற பெண்களாக இருப்பர்; இவர்கள் எழுத்தறிவு வாசனையற்ற ஏழைப் பெண் தொழிலாளர்களைத் தங்களுக்குச் சமமாக பாவித்து அவர்களுக்கு நீதி கிடைப்பதற்காக உழைக்க வேண்டும. தலைமை ஏற்போர், பிரச்சினைகளைக் கேட்டறிவதோடு, உறுதியாகவும் இருக்க வேண்டும், நிறுவனம் தன்னிறைவு பெற அங்கேயே தங்கிப் பணிபுரிய வேண்டும்; சிறிது காலம் உழைத்துவிட்டு, விலகிப்போய் விடக் கூடாது.

அகமதாபாத்தில் நகரச் சூழலை அடிபபடையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சங்கம்தான் சேவா. ஆனால் இதன் நோக்கமும் செயல்களும் தொலைதூரமெல்லாம் பரவுவது தவிர்க்க முடியாது.

புகையிலைத் தூளைப் பீடிகளில் வைத்துச் சுருட்டும் பெண்களின் போராட்டம்தான் முதன்முதலில் துவங்கியது. இந்தப் பீடிகளைப் புகைப்பவர்கள, பொருளாதார அடிமட்டத்திலுள்ள ஆண்கள். தெண்டு மரத்தின் உலர்ந்த இலைகளில், மட்டமான புகையிலைத் துகள்களை நிரப்பி நன்றாகச் சுருட்டி அதன் ஒரு நுனியில் நூலால் இறுகக் கட்டி பீடி செய்வர். சுருட்டும் தொழிலைச் செய்ய சாதாரணமான திறமை இருந்தால் போதும்; எனவே வீட்டில் இருந்தவாறே பீடி சுருட்டுகின்ற இநதத் தொழிலில் பெண்களே அதிகம் ஈடுபடுகின்றனர். பீடி இலைகளையும் புகையிலைத் தூளையும் மொததமாக வியாபாரியிடமிருந்து எடுதது வந்து அவற்றிலிருந்து ஆயிரம்-ஆயிரம் என்ற அளவுகளாக பீடிகளைச் சுருட்டி அந் த வியாபாரிகளிடம் கொண்டு வந்து தருவர். இதற்காக இவர்களைச் சம்பள ஆளகளாக வைத்துக்கொள்வதில்லை. எவ்வளவு பீடி சுருட்டுகிறார்களோ அந்த அளவிற்கு கூலி தரப்படும், அவ்வளவுதான். ஆயிரம் பீடிகளுக்குக் குறிப்பிட்ட ஒரு தொகை என்ற அளவில அந்த வியாபாரி கூலி கொடுப்பார். பல சமயங்களில இவவாறு கொடுக்கப்படும் சுருட்டிய பீடிகளின் ஒரு பகுதியை ஏதாவது ஒரு காரணம சொல்லி ஒதுக்கிவிட்டு பின்னர் அதறகு மிகவும குறைந்த கூலியைக் கொடுப்பார். தங்களுடைய தட்டு முட்டுச சாமானகளை வைக்கவே போதிய அளவு இடம் இல்லாத வீட்டிலிருந்து கொண்டு பெண்கள் இத்தொழிலில் ஈடுபடுகின்றனா சிறிய குழந்தைகள் கீழே கிடக்கும் சிறிய புகையிலைத் தூளை எடுத்து வாயிலிட்டு மென்று சப்புவர். உடல் நலனுககுக் கேடு விளைவிக்கும இப்புகையிலையைப் போட குழந்தைகள இஙஙனம பழக்கமாகிவிடுவர்.

ஓரே இடத்தில் அல்லாமல் பல்லாயிரக்கணக்கான வீடுகளில் பீடி சுருட்டும் தொழில் சிதறுண்டு நடைபெறறாலும பீடித்தொழிற்சாலை மிகுந்த வருவாயைத் தரும் தொழிலாகும. ஆண்பெண் இருபாலாரையும் ஓரிடத்தில் அமரவைத்து குடிசைத்தொழிலாகப் பீடி சுருட்டும் தொழில் இந்தியாவில் இப்போது நடைபெறுகிறது. குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் இந்தத் தொழில் பரந்த அளவில் நடைபெறுகிறது. மேலும, சிறு நகரங்களிலும் கிராமங்கள் முதலிய சிறுசிறு பகுதிகளிலும் இத்தொழில் நடைபெறுகிறது. பீடி சுருட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் பல இனத்தைச் சேர்ந்தவர்களாவர். ஒரு பிரிவினர் ஆந்திர மாநிலத்திலிருந்து வந்த பத்மசாலி என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள்; இவர்கள் காலங்காலமாக இத்தொழிலைச் செய்து வருகின்றனர். மற்றுமொரு பிரிவினர் அகமதாபாத்திலும் அதனருகிலுள்ள படான் என்ற நகரத்திலிருந்தும் வருகின்ற முஸ்லிம் பெண்கள. மூன்றாவது பிரிவினர் கோஷ்டிப் பெண்கள். நகர்ப்புறக் குடிசைகளில் வாழும் ‘சால்ஸ்’ பெண்கள் இத்தொழில் செய்கின்றனர். இவர்களின் கணவன்மார்களும தந்தை மார்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்

தொழிலாளர்களாக இருப்பர். இவர்களன்றியும விதவைகள், கணவன்மார்களால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோரும் பீடித்தொழிலில் வரும் வருவாயை நம்பி குடும்பத்தை நடத்துகின்றனர்.

சீரான குறைந்தபட்ச ஊதியமும், இலவச மருத்துவ வசதியும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குத் தரப்படவேண்டுமென்று இந்திய அரசாங்கம் பல சட்டங்களை இயற்றியுள்ளது. ஆனால் பீடித்தொழில் வியாபாரிகள ஒன்றுபட்டிருப்பதால் இச்சட்டங்களை முறியடிக்கக்கூடிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் சேவா சங்கத்தைச் சேர்ந்த ரென்னா ஜாபவாலா என்பவர், முதனமுதலில் பீடி சுருட்டும் பெண்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து, தங்களின் உரிமைகளைச் சட்டரீதியாக பெறுவதற்கு இப்பெண்களை ஒன்று திரட்டினார். அப்போது, வியாபாரிகள் இப்பெண்களை நாகரிகமற்ற முறையில் திட்டவும பழிவாங்கவும், அசசுறுததவும் தொடங்கினர். ஆனால், பெண்கள தங்கள் வலிமையை அறிநதிருநததால் ஒனறுபட்டு எதிர்த்தனர் 1971-72 இல் நடைபெற்ற பீடி சுருட்டும தொழிலாளர் போராட்டம வெற்றி கண்டது. இதைக தொடர்ந்து இந்தியாவில் மற்ற பகுதிகளிலும் இத்தகைய போராட்டம நடக்க இது ஓர் எடுத்துக்காட்டாக அமைநதது.

1974-இல் மற்றுமொரு போராட்டம் நிகழ்ந்தது. அகமதாபாத்தில் முஸ்லீம் பெண்கள் இப்போராட்டத்தை நடததினர் நூற்பாலைகளிலிருந்து கிடைக்கும் கழிவுகளைக் கொண்டு மெத்தைகளும குழந்தைகளுக்கான ஆடைகளும செயயும தொழிலில் இப்பெண்கள ஈடுபட்டிருந்தனர். அகமதாபாத்திலுள்ள நூற்பாலைகள ஒரு கைக்குட்டையளவுக்குக் குறைவான அளவுள்ள துண்டுத் துணிகளைக் கழிவாக உற்பத்தி செய்தன. அவைகளை "சிந்தி" என்று கூறுவர். சிந்திகள அளவுவாரியாக — பெரியது, நடுத்தரம், சிறியது என பாகுபடுத்தப்படும். அவைகளை மீண்டும் தூயமையானது, அழுக்கானது, மிகவும் அழுக்கானது என்று மூன்று வகைகளாகப் பிரிபபர்.

சிந்திகளை இருவகையாகப் பயன்படுத்துவர். அளவில் பெரியதாக உள்ள துண்டுத் துணிகளை ஒன்றாகத் தைத்து குழந்தைகளுக்கான குறைந்த விலை ஆடைகளைத் தயாரிப்பர். அளவில் சிறியதாக உள்ளவற்றை தலையணை, மெத்தை ஆகியவற்றில் நிரப்பப் பயன்படுத்துவர்.

பெரிய வியாபாரிகள் பெருமளவில் இத்தகைய சிந்திகளை மொத்தமாக வாங்கத் தொடங்கினார்கள். இதனால் இவர்கள் இதை ஒரு மொத்த வியாபாரமாக ஆக்கிவிட்டனர். இவ்வாறு மொத்தமாக வாங்கி இந்த முஸ்லீம் பெண்களுக்கு சில்லரையாகக் கொடுத்து அவற்றிலிருந்து ஆடைகளையும் மெத்தைகளையும் தைப்பர். இந்த முஸ்லீம் பெண்கள் போதுமான வெளிச்சமில்லாத தங்களது சிறிய வீடுகளில் இருந்துகொண்டே இவைகளைத் தைத்து

மொத்த வியாபாரிகளிடம் கொடுத்து குறைந்த ஊதியம் பெறுவர். வேலை செய்பவர்களோ குறைந்த அளவு ஊதியம் பெற்றனர், ஆனால், தைத்த ஆடைகளையும் மெத்தைகளையும்விற்கும் மொத்த வியாபாரிகளோ பெருத்த லாபத்தைப் பெற்றனர்.

உழைக்கும் இந்தப் பெண்களின் பிரச்சினைக்குக் கூட்டுறவுச் சங்கம்தான் ஒரு தீர்வாக அமைந்தது. "பெண்களாகிய நீங்களனைவரும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏன் அமைக்கக்கூடாது? நூற்பாலைகளிலிருந்து நீங்களே நேரடியாக சிந்திகளை வாங்கி அவற்றைக் கொண்டு ஆடைகளும், மெத்தைகளும் செய்து உங்கள் சங்கத்தின் மூலமாக விற்கலாம்." என்று சேவா சங்கத் தலைவர்கள் கேட்டனர். உற்சாகத்தோடு அப்பெண்கள் இதை ஏற்றன. ஆனால் விரைவிலேயே அவர்களுக்காக ஓர் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது மொத்த வியாபாரிகளுக்கு நூற்பாலை முதலாளிகளிடம் மிகுந்த செல்வாக்கு இருந்ததால பெண்கள வாங்க இயலவில்லை. ஆனால் இந்நிலை விரைவிலேயே மாறியது. அதற்குப் பின் நிலைமை மிகவும் எளிதாகியது. அப்பெண்கள சிந்திகளை எவ்வாறு கொணடு வருவது, கணக்குகளை எவ்வாறு எழுதுவது, கூட்டுறவு சங்கத்தை எவ்வாறு நிர்வகிபபது போன்றவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களானாகள். அறிந்துகொள்கிற ஆர்வம் அவர்களிடமிருந்ததால் அவற்றை எளிதாக அறிந்து கொண்டனர். இப்படிப்பட்ட பெண்களை ஓர் அமைப்புக்குள் கொண்டுவரும் பணி நடந்துகொண்டே உள்ளது.

இரண்டாண்டுகளுக்குப பின்னர், பருத்தி ஆலைகளின் அச்சுத் தொழிலாளர்களின் போராட்டம் நடந்தது. இவர்களையும் பெரிய வியாபாரிகள் சுரண்டிப் பிழைத்தார்கள். துணிகள், மர அச்சுக்கள், வண்ணக் கலவைகள் ஆகியவைகளை வியாபாரி இப்பெண்களுக்கு கொடுப்பார். ஆனால், வண்ணக்கலவையை எந்தெந்த அளவில் கலப்பது என்பது பற்றிய செய்தியை இப்பெண்களுக்குச் சொல்வதில்லை. இது இரகசியமாகவே வைக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட வடிவ அமைப்பை துணிகள் மீது அழுத்தி அச்சுப்பதியவைத்தலும், அவ்வாறு செய்த துணிகளை மீண்டும் வியாபாரிகளிடம் கொண்டுசென்று ஒப்படைப்பதும்தான் இவர்கள் வேலை. போர்வைகள், திரைச் சீலைகள், தலையணை உறைகள் போன்றவற்றிற்கு இத்துணிகளைப் பயன்படுத்தினர். பெண்களுக்குக் கொடுத்த கூலி மிகவும் குறைவானது; மேலும் இவர்கள் தங்களுடைய இருள்சூழ்ந்த சிறிய வீடுகளிலேயே இந்தத் தொழிலைச் செய்தனர். இத்தொழில்செய்யும் பெண்களனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்தனர். அவர்களே அச்சுப்பதிக்க வேண்டிய துணிகளை ஆலைகளிலிருந்து கொண்டுவந்தனர். மர அச்சுகளையும் வண்ணக் கலவைகளையும் தயாரித்தனர். தற்போது பல பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களை நடத்தி வருகின்றனர். இதன் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களில் சேராத பெண்கள்கூட தங்களுடைய பழைய எசமானர்களால் நன்றாகவே நடத்தப்படுகிறார்கள்.

மேற்கூறிய மூன்று போராட்டங்களிலும் வெற்றி எளிதாகக் கிடைக்கவில்லை. பெண்கள் அச்சுறுத்தப்பட்டார்கள்; பழிவாங்கப்பட்டார்கள்; சிலர் அவற்றிற்கு அடிபணிந்தார்கள். பல சமயங்களில் இந்த போராட்ட ஊர்வலத்திலும், பொதுக்கூட்டங்களிலும பங்குகொண்ட பெண்களின் கணவன்மார்களும் தந்தைமார்களும் தங்கள் வீட்டுப் பெண்கள் இவ்வாறு ஈடுபடுவதை ஆட்சேபித்தனர். கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்துவது என்பது எளிது, ஆனால் அதை நிர்வகிப்பது என்பது அவ்வளவு எளிதானதல்ல. கணக்குகளை எழுதுவது எப்படி என்பது தெரியாது; வியாபாரத்தை எவ்வாறு நடத்துவது என்பதும் இப்பெண்களுக்குத் தெரியாது. பொது நிர்வாகத்திலுள்ள அரசாங்க அதிகாரிகளிடமும், காவல் துறையினரிடமும் எவவாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதும் மிகவும் கடினமானதாக இருந்தது. கைவண்டி இழுக்கும பெண்களுக்கு, கைவண்டி உரிமம் தேவைப்பட்டால் அவ்வுரிமத்தைத் தரும அதிகாரம் படைத்த காவல் துறையினரிடம் செல்ல வேண்டும். ஆனால் இவர்களோ காவல் துறையினரைக் கண்டு அஞ்சினர். அதுபோலவே அவர்கள் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்து சரிபார்க்கக்கூட அரசாங்க தணிக்கை அதிகாரிகளின் உதவியை நாடவேண்டியவர்களானார்கள். காவல் துறையினர் ஒரு பெண்ணின் மீது வழக்குத் தொடுத்தால, நீதிமன்ற நடைமுறைகளில் இறங்க வேண்டும். ஆனால் இதுபற்றிய அறிவு அவர்களுக்குக் கிடையாது. வங்கிகளின் அமைப்பையோ வணிக உலக நடவடிக்கையையோ அவர்கள அறிந்திருக்கவிலலை. நிதானமாக அறிந்துகொண்டனர். பலமுறை தவறினர்; ஆனால் அனைத்தையும் அறிந்துகொள்ளத் தயங்கவில்லை.

அகமதாபாத் நகரில் காய்கறி விற்போர் மிகப்பெரிய போராட்டம் ஒன்றை நடத்தினர். தெருக்களில தங்கள் பொருட்களைச் சுமந்துசென்று விற்பவர்களைப் போலல்லாது, காய்கறி விற்பவர்கள் சாலையோர நடைபாதைகளில் தங்கள் பொருட்களைப்பரப்பி விற்பனை செய்வர். பெரு நகரங்களில் இத்தகைய நடைபாதைக் கடைகளை அதிகமாகக் காணலாம. போதுமான இடம் இல்லாததாலும் அதிக வாடகை தர இயலாததாலும் இவர்கள், முறையாகக் காய்கறி மார்க்கெட் ஒன்றை அமைத்து விற்பனை செய்ய இயலாதவர்களாக உள்ளனர்.

தங்களுடைய பொருளாதாரத் தேவை காரணமாகவும் போதிய இடவசதி இல்லாததாலும காய்கறி விற்போர் பலர், நடைபாதை, தெருக்கோடி, புகைவண்டி நிலையங்கள், கடற்கரை, பூங்கா ஆகிய இடங்களில் காய்கறிகளை விற்பனை செய்கின்றனர். காவல் துறையினர் இந்தக் காய்கறி விற்பனையாளர்களை மிகவும் துன்புறுத்தினர். அவர்களிடம் லஞ்சம் வாங்கியும், சுடு சொற்களைப் பேசியும் அவர்களை மிகவும் மோசமாக நடத்தியும் வந்தனர். இந்த விற்பனையாளர்களால்தான் போக்குவரத்துத் தடங்கலே ஏற்படுவதாகவும், இவர்கள் நடைபாதையில் நடப்போருக்கத்

தொந்திரவு கொடுப்பதாகவும் கூறினர். எனவே திடீரென்று ஒரு நாள் நகர்மன்ற அதிகாரிகள் இந்த விற்பனையாளர்கள் உடனே தங்கள் அப்புறப்படுத்த வேண்டும் என்றனர். ஆனால் இந்த ஏழை விற்பனையாளர்கள் எங்கே செல்வர்? சேவாவின் உதவியை நாடினர். சேவா அவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டிப் போராட்டத்தைத் துவக்கியது.

வெகு எளிதாக அப்புறப்படுத்திவிடலாம் என்று கருதிய நகர அதிகாரிகளுக்கு இப்பெண்கள் ஒன்றுசேர்ந்து போராட்டம் நடத்திய தன்மை வியப்பை அளித்தது. முதலில் அதிகாரிகளுக்கு இப்பெண்கள் படுகிற துயரங்களை சேவா எடுத்து விளக்கியது. அப்பெண்கள் மிகவும் ஏழைகளாக இருப்பினும் ஒரு முக்கியமான சேவையைச் செய்தனர். வாங்குவோர் எண்ணிக்கையில் அதிகமாக வரும் ஒரு இடத்தில்தான் இப்பெண்கள் அமர்ந்து வியாபாரம் செய்ய வேண்டும். இந்தப் பெண்களை அப்புறப்படுத்துவதென்பது வாடிக்கையாளர்களுக்குத் தொந்திரவு தருவதாகும். மேலும், இப்பெண்களின் வியாபாரத்தையும் கெடுபபதாகும். தகுந்த வாடகை உள்ள இடங்களுக்கு இப்பெண்கள் தங்கள் கடைகளை மாற்றிக்கொள்ள வழிவகை செய்தால் அவர்கள் அந்த இடங்களிலேயே காய்கறி விற்பனை செய்வார்கள் என்று சேவா உறுதி அளித்தது. ஆனால், நகர அதிகாரிகள் அப்பெண்களுக்கு உறுதி அளிக்கவில்லை. அதிகாரிகள் "பார்க்கலாம்" என்று கூறிவிட்டனர். இந்தப் பெண்களோ அதிகாரிகளின் அர்த்தமற்ற வார்த்தைகளை நம்பத்தயாராக இல்லை. சேவா சங்கம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்து வெற்றியும் கண்டது. மார்க்கெட்டில் அப்பெண்களுக்கு விற்பனை செய்ய இடம் கொடுக்கும் வரையிலும், நடைபாதை விற்பனையை நகர அதிகாரிகள் தடுக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

குஜராத்தின் நகர்ப்புறப் பகுதிகளில் போதுமான அளவுக்கு இவ்வகையான பணி செய்தபின், கிராமப்புறங்களில் சேவா தன்னுடைய பணியைத் துவங்கியது. தேவ் தோலேரா என்ற கிராமத்தில் துடைப்பம் செய்வதிலும், விலை மலிவான கூடைமுடைவதிலும் பெண்கள் ஈடுபட்டிருந்தனர். ஆனால் தங்களின் திறனை வளர்த்துக்கொள்ள வாய்ப்பில்லாதவர்களாக அவர்கள் இருந்தனர். சேவா சங்கம் வடகிழக்கு இந்தியாவிலிருந்து திறமையான ஒருவரை அழைத்து வந்து இப்பெண்களுக்கு புதிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தது. நல்ல வேலைப்பாடமைந்த மூங்கிலாலான பொருட்கள், விளக்கு அமைப்புகள் போன்ற அதிக வருவாய் தரும் பல்வேறு கவர்ச்சிகரமான பொருட்களைச் செய்ய பெண்கள் கற்றுக் கொண்டனர்.

பால்பண்ணையை எப்பொழுதுமே ஆண்கள்தான்நிர்வாகம் செய்ய முடியும் என்று கருதப்பட்டது. பரம்பரையாக பெண்கள்தான் கால்நடைகள் தொடர்பான தொழில்களைச் செய்து வந்தனர்

என்றாலும், ஆண்கள் பால்பண்ணை உற்பத்தி தொடர்பான வேலைகளை ஆக்கிரமித்துக் கொண்டனர். குஜராத்திலுள்ள கூட்டுறவுப் பால் பண்ணைகளில் ஆண்கள்தான் அதிகம். கூட்டுறவுப் பால் பண்ணையைப் பெண்கள் ஆரம்பித்து நிர்வகிக்க முடியாது என்று கருதப்பட்டது. சேவா சங்கம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு கிராமப் பெண்களைக் கொண்டு கூட்டுறவுப் பால்பண்ணைகளை நிறுவி வெற்றிகண்டது.

அடிக்கடி பருவமழை தவறுவதால் குஜராத் மாநிலம் வறட்சியால் பாதிக்கப்படுகிறது. 1984-முதல் 1987 வரையிலான நான்கு வருடகாலத்தில் தொடர்ச்சியாக மழை இல்லாமல் குஜராத்தின் வடக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் வறட்சியால் பாதிக்கப்பட்டன. இந்த நான்காண்டுகளில் ஏற்பட்ட வறட்சி இந்தியாவிலேயே மிகவும் மோசமானது என்று கருதப்பட்டது. இந்த வறட்சிக்காலத்தில் விவசாய வேலையை நம்பி வாழ்க்கை நடத்தும் ஏழைகள்தான் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். அவர்களுக்கு வேறு எந்த வழியிலிருந்தும் கூலி கிடைக்க வாய்ப்பில்லை. வயல்கள் வறண்டும் உலர்ந்தும் இருப்பதால் இவர்களுக்கு எவ்வித விவசாய வேலையும் இல்லை. இப்படிப்பட்ட துயரத்திற்குள்ளாயிருக்கும் குடும்பங்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்து போய் நடைபாதைகளிலும், மோசமான குடிசைகளிலும், பொதுப் பூங்காக்களிலும், பாலங்களுக்கடியிலும், புகைவண்டி நிலைய பிளாட்பாரத்திலும் வாழ்கின்ற கட்டாயத்திற்குள்ளானார்கள். நல்ல காலம் திரும்ப வந்தால் தங்களுடைய கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லலாம் என்ற நம்பிக்கையுடன பல குடும்பங்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறி நகரங்களில் வறுமையில் வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இவ்வாறு மொத்தமாக வந்து குடியேறுபவர்களால் நகரங்களில் மக்கள் நெருக்கடி ஏற்பட்டு நகர வாழ்க்கை குழப்பம் நிறைந்ததாக ஆகிவிடுகிறது. சுகாதாரக் கேடுகள் காரணமாக நகரங்களில் வியாதிகள் பெருகிவிடுகின்றன. நகரவாழ்வு சிதிலமடைகின்றது. இப்படிப்பட்ட நகரங்களில்தான், ஆதாரமில்லாத நிலையிலும் கலங்கிப்போய் குழம்பிய நிலையிலும் கிராம மக்கள் குடியேறி வாழ வேண்டியவர்களாகின்றார்கள்.

சேவா சங்கம், வறட்சி மிகுந்த பகுதிகளில் பணிபுரிய முன்வந்தது. கிராமத்துப் பெண்கள் மூலமாக தீவனப்புல்லும் தானிய வகைகளும் பெருமளவில் வழங்கியது. பெண்களுக்கு வறட்சியின் அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதைத் தெளிவாகவும் விளக்கமாகவும் சேவா சங்கம் எடுத்துரைத்தது: "மரங்கள் வெட்டப்படுகின்றன, புல் அறுக்கப்படுகிறது; நிலம் வளமிழந்து வறண்டு போகின்றது: விளைச்சலோ மிகவும் குன்றிவிடுகிறது. பருவமழை தவறினால், பெண்களாகிய நாம்தான் துயரத்திற்குள்ளாகிறோம். வெகுதொலைவிலிருந்து தண்ணீரும் தீவனப் புல்லும் கொண்டு வருவதென்பது மிகவும் சிரமமாகி விடுகிறது" என்று சேவா விளக்கமாக எடுத்துக் கூறியது. வறட்சி மீண்டும் வந்தால் அது

வறண்ட பகுதியைப் பாலைவனமாக்கி விடும். எனவே "நாம் புதிய மரக்கன்றுகளை நடவேண்டும், புல்புதர்களை வளர்க்க வேண்டும். அவற்றைக் காக்கவும் வேண்டும்" என்று சேவா சங்கத்தினர் சமூகநலக் காடுகளை வளர்ப்பதற்கான அடிப்படை வழிமுறைகளையும் தேவையான ஆளுமைப் பயிற்சியினையும் தந்தனர்.

சேவா சங்கத்தில் பல இனத்தவரைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளனர். குஜராத்தில் 70-களின் இறுதியிலும 80-களின் முதலிலும் இனக்கலவரமும் வன்முறையும் இருமுறை ஏற்பட்டன. இது அகமதாபாத் நகரத்தில் மட்டும் ஏற்பட்டது. இவ்வகையான வன்முறை இந்து முஸ்லீம் பெண்களின் வாழ்க்கையை மிகவும் நிலைகுலையச் செய்தது. இரண்டு இனத்தைச் சேர்ந்த பெண்களும் ஒன்றிணைந்து இத்தகைய வன்முறைகளை எதிர்த்துப் போராட முடிவெடுத்தனர். இலா பென், "இனவெறி பிடித்த தங்கள் கணவன்மார்களையும் தந்தைமார்களையும் அவர்களின் மனைவிமார்களும் மகள்களும் சுற்றிச் சூழ்ந்து கொண்டு கட்டுப்படுத்தினர்" என்று கூறுகிறார்.

கருத்துப்பரிமாற்றம், அனுபவப் பரிமாற்றம், கூட்டாக சிந்தனை செய்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி சேவா சங்கத்திற்கு நன்கு தெரியும். முடிந்த அளவு -அடிக்கடி-பெண்கள் சிறுசிறு குழுக்களாகக் கூடித் தங்களுக்குள் ஆலோசனை செய்வது சிறந்த பலனைத்தரும். இப்படிப்பட்ட சுதந்திரமான கருத்துப்பரிமாற்றங்களின் மூலம் பெண்கள் ஒருவரை ஒருவர் நெருங்கிவந்து புரிந்துகொள்ளவும், பரஸ்பர நம்பிக்கையையும் ஆதரவையும் உருவாக்கிக் கொள்ளவும் இவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறு அடிக்கடி நடைபெறும் சந்திப்புகளால் வெற்றி கிட்டும்வரை நீண்டகாலம் உழைக்கின்ற ஆற்றலை இவர்கள் வளர்த்துக்கொள்வர். வீடியோ படம் மூலமாக செய்தித் தொடர்பினை நன்கு வளர்த்துக் கொள்ளமுடியும் என்று சேவா சங்கம் நம்புகிறது. படிப்பறியாத பெண்களுக்கு வீடியோ படம் எடுப்பதைப் பயிற்றுவித்து பெண்கள் வேலைசெய்கிற நிலையினையும் பணி நிலைகளையும், அவர்களது பல்வேறுபட்ட பிரச்சினைகளையும், எதிர்ப்பார்ப்புகளையும், ஒன்றிணைந்து பாடுபடுவதற்குரிய அவர்களின் மன உறுதியையும் வீடியோ படம் எடுக்கச்செய்தது. இந்த வீடியோ படங்கள் மூலமாக செய்திகளையும் கருத்துக்களையும் எளிதாகப் பரப்பலாம்.

மலைகளில் சென்று விறகுவெட்டிச் சுமந்துவரும் பெண்கள், கணவன் மார்களால் கைவிடப்பட்ட பெண்கள், சுகாதாரமும் தனிமையும் கொண்ட நல்ல கழிப்பறை வசதிகளைக் கோரிய பெண்கள் ஆகியோரின் பிரச்சினைகளை சேவா சங்கம் தீர்த்து வைத்துள்ளது. கணவர்கள் மனைவிமார்களை அடிப்பதை எதிர்த்து சேவா போராடியுள்ளது. குஜராத்தி மொழியில் 'அனசூயா' என்ற பத்திரிகையை நடத்தி, தாழ்த்தப்பட்ட ஏழைப்பெண்களின்

பிரச்சினைகளை அதிலே அலசி ஆராய்கிறது. இதே பத்திரிகை, மத்தியப் பிரதேசத்திலுள்ள போபால் நகரிலிருந்து இந்திமொழியில் வெளியாகிறது.

அண்மைக்காலத்தில் சேவா சங்கம் தனது கிளைகளை ஹரியானா, பீகார், மத்திய பிரதேசம், தில்லி ஆகிய இடங்களில் ஆரம்பித்துள்ளது. மேலும் பல்வேறு இடங்களில் விரைவிலேயே கிளைகளை ஆரம்பிக்க உள்ளது.

இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட பெண்களின் பிரச்சினைகள் எங்கும் ஒரே மாதிரியாகவே உள்ளன. ஏழ்மை, மரபுகளின் கொடுமை, தாழ்ந்த சமுதாய அந்தஸ்து. தன்னம்பிக்கை இல்லாமை—இவைதாம் அந்தப் பிரச்சனைகள்! சேவா சங்கத் தலைவிகள் ஏழைப் பெண்களோடு பணிபுரிந்து அவர்களின் நலனுக்காக அவர்களை ஊக்குவித்து உழைப்பது மிகவும் நல்லதோர் எடுத்துக்காட்டாகும். குறுக்கிடும் ஒவ்வொரு தடையும் மிகத் தைரியமாக எதிர்கொள்ளப்படுகிறது; கிடைக்கின்ற ஒவ்வொரு வெற்றியும் மேலும்மேலும் மனவலிமையைத்தரப் பயன்படுத்தப்படுகிறது.

பெண்களுக்காக பெண்களால் நடத்தப்படும் சேவா சங்கம் இந்த வகையில் ஒரு முன்னோடி ஆகும். பெண்கள் செய்கிற வேலையின் மதிப்பு அங்கீகரிக்கப்படாமல் போய் விடுகிறது என்பதனையும், தங்களின்வருவாய் மீது இந்தப்பெண்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதனையும், தங்களின் வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டுமென்று தீர்மானிக்க இந்தப் பெண்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதனையும், சேவா சங்கம் நன்குணர்ந்து வைத்துள்ளது. பெண்கள் மனைவிகளாகவோ, தாய்மார்களாகவோ அல்லது மகள்களாகவோ இருந்தாலும், வாழ்நாள் முழுதும் பிறரை நம்பியே வாழவேண்டியவர்களாக வழக்கங்களும் வாழ்க்கைச் சூழல்களும் ஆக்கிவிட்டிருக்கின்றன. இவர்கள் நல்ல மன ஆற்றல் படைத்தவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் சமுதாயமோ இவர்களை மிகவும் வலிமை குன்றியவர்களாகவும் மிக எளிதாகத் தங்களை மற்றவர்களுக்கு ஒப்படைத்துவிடும் தன்மையுள்ளவர்களாகவும் கருதுகிறது.

சேவா சங்கம் இத்தகைய நிலைகளையெல்லாம் மாற்ற முயற்சிமேற்கொண்டுள்ளது. வெகுளித்தன்மையுடனும் தன்னம்பிக்கையற்றும் வலிமை குன்றியும் இருந்த பெண்களுக்கு சேவா சங்கம் மனவலிமை, தன்னம்பிக்கை மற்றும் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நிர்வகிக்கின்ற ஆற்றல் ஆகியவற்றைத் தந்துள்ளது. சேவா சங்கத்தின் மகத்தான வெற்றி, காலங்காலமாக பெண்களைப்பற்றி வகுத்திருந்த நியதிகளை மாற்றுவதற்கு இந்தச் சமுதாயம் முழுவதையும் நிர்ப்பந்திக்க வேண்டும்.

# V

## முடிவுரை

*ஒவ்வொரு ஆணும், பெண்ணும், உடல் உறுதியற்றவராக இருப்பினும், தன்னுடைய சுயமரியாதைக்கு அல்லது உரிமைக்குத் தானே பாதுகாவலாக இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை மனித குலத்திற்கு எடுத்துக் கூறி வெற்றி பெற்றுவிட்டால் நான் என் பணியை பூர்த்தி செய்தவனாவேன். தனி மனிதனை உலகமே எதிர்த்தாலும் இந்நிலை மிகவும் இன்றியமையாததாகும்.*

*- மகாத்மா காந்தி*

காந்திய சிந்தனையின் அகத்தூண்டுதலால் நாட்டின் மூன்று வேறுபட்ட பகுதிகளில் நடைபெற்ற இம்மூன்று இயக்கங்கள், தன்னார்வப் பணியின் பாராட்டத்தக்க எடுத்துக் காட்டுகளாகும். அமைப்புக்குட்பட்ட கொள்கைப்பிடிப்பிலுள்ள குழுக்களால் மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும், தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும், தடைகளை நீக்கவும், அவர்களின் வாழ்வை மேம்படுத்தவும் முடியும் என்பதை இம்மூன்று தன்னார்வ இயக்கங்களும் வெளிப்படுத்துகின்றன. அரசியல்ஆதரவின்றி சாதாரண மக்களும் சாதனைகள் புரிய முடியும் என்பதற்கு இவ்வியக்கங்கள் நல்லமாதிரிகளாகும். இதுபோன்ற, ஆனால் சிறிய இயக்கங்கள் இந்தியா முழுதும் இயங்குகின்றன. சிறியவைகளாக இருந்தாலும், பரந்த அளவில் மக்களுக்குத் தெரியவில்லை என்றாலும், அவை சிறந்த பணிகளை ஆற்றி வருகின்றன. இவ்வியக்கங்களெல்லாம் சமயச் சார்பற்ற முறையில், அரசியல் சார்பின்றித் தன்னார்வப் பணிகளின்மூலம் மக்கள் எதையெதையெல்லாம் சாதிக்க முடியும் என்பதை எடுத்தியம்புகின்றன. குழுச் செயல்பாடுதான் இவ்வியக்கங்களின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக இருக்கிறது.

இச்சிறிய குழுக்களின் குழுச் செயல்பாடு என்றால் என்ன?

பொதுவாக, சிறிய குழுக்கள்தான் அளவில் பெரிய குழுக்களைவிடச் சிறந்த பணி ஆற்றுகின்றன. சிறிய குழுக்களுக்கு ஒருசில நன்மைகள் உண்டு. ஒவ்வொருவரைப் பற்றியும்

ஒவ்வொருவருக்கும் தெரியும். ஒருவருக்கொருவர் வலுவான தொடர்பு உண்டு. சிக்கல்கள் இல்லாமல் பிரச்சினைகளுக்கு உடன்பாடான தீர்வுகள் விரைவாக எடுக்க இயலும். ஒவ்வொருவரும் பொது வேலையில் பங்கு பெறுகின்றனர். ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவராகவும் ஏமாற்றாமலும் பணிபுரிவர். குழு சிறியதாக இருந்தால், தனி நபர் ஒருவருக்கு ஒரு குறிக்கோளோடு, தனி மதிப்பையும் இது நல்கும். எளிதாக இசைந்து கொடுக்கும் தன்மைதான் இச்சிறுகுழுவின் பிரதானமான வலிமையாகும். ஒரு சுதந்திர உணர்வையும தனதென்ற உரிமையையும் இவ்வகை சிறு குழுக்கள் வளர்க்கின்றன.

இச்சிறு குழுக்கள் ஆக்கப்பூர்வமான பாதிப்பை ஏற்படுத்த வேண்டுமானால், அவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொள்ளுதல் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், பலருடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளுதல், ஒருவருக்கொருவர் துணை நிற்றல் போன்ற செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், சிந்தனையிலே உலகளாவிய நிலையும், செயலில் உள்ளூர் அளவிலும் இச்சிறு குழுககள் ஈடுபட வேண்டும்.

இவ்வியக்கங்களின் தலைவர்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இவர்கள் பிரச்சினைகளை அவற்றின் புறத்தே நின்று, பிரச்சினைகளின் ஆழத்தை அறிந்து கொண்டவர்கள். கல்வியறிவும், அரசியல் விழிப்புணர்வும், பண்பாட்டு ரீதியில் வேறுபாடும் கொண்டவர்களான இத்தலைவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையில் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்காதவர்களாயினும், தங்களுடன் வாழும் மக்களின் நிலையை நன்குணர்ந்தவர்கள். கையேந்தி நிற்கும் மக்களுக்கு அளிக்கும் தர்மத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. மக்களை முன்னேற்றத்தில் பங்கேற்கச்செய்யவும், தங்களின் நலனுக்கானவற்றைச் சிந்திக்கச் செய்யவும் இத்தலைவர்கள் நன்கு ஊக்குவித்தனர். போதனையோ சொற்பொழிவோ நிகழ்த்தாமல் மக்களின் முன்னேற்றத்தில் நேரடியாக ஈடுபாடு கொண்டும், அதற்குத் தாங்களே எடுத்துக்காட்டாக நின்றும் இத்தலைவர்கள் விளங்கினர். தேவையற்ற பயபக்தியோ அல்லது வீண் தற்பெருமையோ இல்லாமல் உறுதியும் நம்பிக்கையும் மட்டுமே கொண்டு இத்தலைவர்கள் இயங்கினர்.

பல்வேறுபட்ட மனித குலத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றுவதில் தன்னார்வமிக்கவர்கள் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்த முடியும். வறுமையைப் போக்கி வருவாய் தருபவை, உடல் ஊனமுற்றோர் நலவாழ்வு, தாய்சேய்ப் பராமரிப்புத் திட்டங்கள், ஏழைகளுக்கு வீட்டு வசதி, நில-நீர் நிர்வாகம், நகர சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, மாசுகளை நீக்குதல், பழங்குடிகள் நலவாழ்வு, நுகர்வோர் பாதுகாப்பு, வரதட்சணைக்கெதிரான போராட்டங்கள், மத நல்லிணக்கம்,

அறிவியல் கருத்துக்களைப் பரப்புதல், மூட நம்பிக்கைகளை ஒழித்தல், வயது வந்தோர் எழுத்தறிவு, முறைசாராக் கல்வி, அனாதையான மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், குழந்தைக் குற்றவாளிகள, மக்கள் நீதிமன்றங்கள், போதை மருந்துக்கெதிரான போராட்டம், மதுவிலக்கு, தேசிய ஒருமைப்பாடு ஆகிய பல்வேறுபட்ட ஆக்க பூர்வமான பணிகளில் பலப்பல தனனார்வக் குழுக்கள ஈடுபட்டு சேவை புரிந்து வருகின்றன.

சரியான செயல் நோக்கத்தோடு யார் வேண்டுமானாலும் தன்னார்வச் செயலில் ஈடுபட முடியும். பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்ளும் ஆற்றலும் செயல் உறுதியும தன்னார்வச் செயலில் ஈடுபடுபவர்களுக்குத் தேவை. அனைத்திற்கும் மேலாக, எந்த மக்களின் நலனுக்காக அவர்கள் பணி புரிகின்றார்களோ, அம்மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

Laser typeset at D.V. Graphics, New Delhi and
printed at Beauty Print, New Delhi-110055